REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 ஓகஸ்ட் 20 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

1932 - 2021 89

வருடம் 89 இல. 197 | Friday 20, August, 2021 | 32 பக்கங்கள் | 30/-

## சிறுவர்களுக்கு கொவிட் தொற்று பரவல் அதிகரிப்பு

சிறுவர்கள் மத்தியில் கொவிட் தொற்று பரவல் மேலும் அதிகரித்துள்ளதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் ஜே.விஜேசூரியா தெரிவித்துள்ளார். கொவிட் தொற்று காரணமாக நாளாந்தம் சுமார் 25 06

## ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள் அதிகபட்ச கொள்ளளவு என்ன?



### சுகாதாரத்துறையினரிடம் ஜனாதிபதி அறிக்கை கோரல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆஸ்பத்திரிகளில் தற்போது எந்தளவு கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளை சிகிச்சைக்காகத் தங்க வைக்க முடியுமென்பது தொடர்பில் முழு விபரங்களுடனான அறிக்கையொன்றை உடனடியாக தமக்குப் பெற்றுத்தருமாறு ஜனாதிபதி 06

## நாட்டை மூன்று வாரங்களாவது முடக்க நடவடிக்கை எடுங்கள்

### ஜனாதிபதிக்கு அரசின் 10 பங்காளி கட்சிகள் அவசர கடிதம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் வெகுவாக அதிகரித்துச் செல்வதால் ஆகக்குறைந்தது மூன்று வாரங்களுக்காவது நாட்டை முழுமையாக முடக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர்கள் விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில மற்றும் ஏ.எல்.எம் 06

## வீடுகளில் சிகிச்சை பெறுவோர் சுகாதார பிரிவிற்கு அறிவிக்கவும்

### எந்தவொரு நோயாளியையும் கைவிடவில்லை




கொவிட் 19 தொற்று காரணமாக வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ள சிலர் முறையான மருத்துவ மேற்பார்வை இல்லாமல் செயற்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எந்த ஒரு நபரும் சுகாதார பிரிவினருக்கு அறிவிக்காமல் வீடுகளிலேயே 06

## கொரோனா தொற்று நாட்டில் தீவிரமாக பரவுகிறது

# ஒரு வாரத்திற்கேனும் நாட்டை முடக்குங்கள்



### அஸ்கிரிய, மல்வத்த மகாநாயக்கர்கள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்



**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிசாந்தன், எம்.ஏ. அமீனுல்லா**

நாட்டில் கொரோனா வைரஸ் தீவிரமாக பரவுவதைத் தடுக்கும் வகையில் ஒரு வார காலத்திற்கு நாட்டை முழுமையாக முடக்குமாறு அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமரைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மல்வத்து பீட மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர், அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரான வரகாகோட ஸ்ரீ ஞானரத்ன தேரர் ஆகியோர் கடிதமூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவிடமும் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவிடமும் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவல் முதலாவது அலையின் போது தனிமைப்படுத்தலுக்கான ஊரடங்குச் சட்டம் நாட்டில் அமுல்படுத்தப்பட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்தது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் மேற்கொண்ட சிறந்த வேலைத்திட்டங்கள் தொடர் 06



## புதிய களனி பாலம் செப்டெம்பரில் பொதுமக்கள் பாவனைக்கு



2014 இல் பூர்வாங்க திட்டம் தயாரிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது அதிதொழில்நுட்ப கம்பிகளின் மீது நிர்மாணிக்கப்படும் புதிய களனி பாலத்தின் நிர்மாணப் பணிகளில் 98.5 வீதம் நிறைவடைந்துள்ளதாக நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று (19) நடைபெற்ற களனி பாலத்தின் மீளாய்வுக் கூட்டத்தில் அமைச்சர் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். இந்தக் கூட்டம் Zoom தொழில்நுட்பத்தின் ஊடாக நடைபெற்றது.

புதிய களனி பாலத்தின் மேலதிக பணிகளில் பாதுகாப்பு கெமராக்கள் நிறுவுதல், இரும்புப் பாலத்திற்கு நிறம் தீட்டுதல், புதிய களனி பாலத்திற்கு நுழைவாயிலில் வடிகால் அமைப்பை நிறைவு 06

## நல்ல தீர்வு கிடைத்தால் நாளையே கற்பித்தலில்

### ஆசிரியர் சேவை சங்கம் தெரிவிக்கிறது



பாடசாலைகள் மூடப்பட்டுள்ள இக்காலகட்டத்தில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் 06

## அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாடு

## அமைச்சரவை உப குழுவின் அறிக்கை திங்களன்று அமைச்சரவைக்கு

### நிதியமைச்சர் பசிலுடன் உப குழு பேச்சு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உப குழு அதன் அறிக்கையை எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கவுள்ளதாக குழுவின் அங்கத்தவரான அமைச்சர் மஹிந்த அமரவீர 06

## நடமாடும் தடுப்பூசி திட்டம் யாழில் ஆரம்பம்

### இராணுவத்தால் நேற்று முன்னெடுப்பு



கொவிட் தடுப்பு செயலணி தலைவரும் இராணுவத்தளபதியுமான சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ் நாடுமுழுவதும் முன்னெடுக்கப்படும் இராணுவ மருத்துவ பிரிவினரின் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் நேற்று யாழ்.மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. 06

## ஆப்கானில் ஷரீஅத் சட்டம் மட்டுமே!

### ஜனநாயக ஆட்சிக்கு இடமில்லை



ஆப்கானிஸ்தானில் ஜனநாயக ஆட்சி கிடையாது. ஷரீஅத் சட்டத்தின்படிதான் ஆட்சி நடக்கும் என்று தலிபான் தீவிரவாத குழுவின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானிலிருந்து 06


03 **தேர்தல் ஆணையருக்கு கொரோனா தொற்று**
குடும்பம், பணியாளர்கள் தனிமைப்படுத்தலில்



03 **ஆசிய சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த இலங்கை சிறுமி**
நிந்தவூருக்கு கிடைத்த பெருமைக்கு குவியும் வாழ்த்து



03 **கொரோனா தொற்றுக்கு இரு மாணவர்கள் பலி!**
மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணம்



### விக்கல் வீராச்சாமி



தம்பி, என்ர நியூஸ எந்த ஊடகங்களுமே கண்டுகொள்ளாம இருக்குது அறிக்கை எழுதி அனுப்பி அனுப்பி களைச்சு போனேன். சனம் என்னை மறக்க போகுது.....

தலைவரே, பேசாம உங்களுக்கு கொரோனா எண்டு ட்விட்டர்ல அல்லது பேஸ்புக்ல போட்டு பாருங்க உலகம் முழுக்க பப்ளிசிட்டி ஆயிடுவீங்க...!!!

## இலங்கைக்கு வரும் அனைவருக்கும் PCR

### புதிய விதிமுறைகள் வெளியீடு



இலங்கைக்கு வரும் பயணிகளுக்கு தனிமைப்படுத்தல் நடைமுறை மீண்டும் திருத்தப்பட்டுள்ளது.

முழுமையாக தடுப்பூசி போடப்பட்ட தனிநபர்கள் உட்பட அனைத்து வருகையாளர்களும் நாட்டை வந்தடைந்தவுடன் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவர். 06

## அரச காணியை தனியார் கையகப்படுத்த முயற்சி

### தடுத்து நிறுத்தி நியாயம் கேட்ட சாள்ஸ் MP



**(தலைமன்னார் விஷேட நிருபர்)**

மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மருதமடு பகுதியில் மக்கள் பரம்பரையாக வாழ்ந்து கொண்டிருந்து தற்பொழுது 06


## பாண், பேக்கரி பொருட்களின் விலை திங்கட்கிழமை முதல் அதிகரிக்கிறது!



பாணின் விலை 5 ரூபாவினாலும் ஏனைய பேக்கரி பொருட்களின் விலை 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்பானது எதிர்வரும் திங்கட்கிழமை (23) முதல் அதிகரிக்கப்படவுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

Fun BLASTER இடமிருந்து
மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்
Facebook WhatsApp மற்றும் YouTube
உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே
மேலதிக வரிகள் இல்லை
செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்
*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது.
• நிபந்தனைகளுக்கு உட்பட்டது
SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது
4G SIM அட்டை மற்றும் 4G தொலைபேசி அவசியமாகும்.
TRC/D/PRO/20/10
Dialog
எதிர்காலம் இன்றே.

# சர்வதேச செய்திகள்

## முகக்கவசம் அணியாத பிரிட்டிஷ் நாட்டவருக்கு சிங்கப்பூரில் சிறை



பொது இடத்தில் முகக்கவசம் அணிய மறுத்த பிரிட்டிஷ் நாட்டவர் ஒருவருக்கு கொரோனா தொற்று கட்டுப்பாடுகளை மீறியதற்காக சிங்கப்பூர் நீதிமன்றம் ஒன்று ஆறு வாரங்கள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

40 வயதான பென்ஜமின் கிலின் என்ற அந்த ஆடவர் கடந்த மே மாதம் ரயிலில் பயணிக்கும்போது முகக்கவசம் அணி தவறிய நிலையில் கடந்த ஜூன் மாதம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். பொது ஒழுங்கை மீறியது மற்றும் அரச ஊழியர்களை அச்சுறுத்தியது போன்ற குற்றச்சாட்டுகளும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் கடந்த புதன்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது 'சட்டவிரோதமான இந்தக் குற்றச்சாட்டுகளை' கைவிடும்படியும் தமது நாட்டுக்கு திரும்ப கடவுச்சீட்டை திரும்பத் தரும்படியும் கிலின் நீதிமன்றத்தில் கேட்டுள்ளார்.

அவர் முழுமையாக தவறாக வழி நடத்தப்பட்டிருப்பதாகவும் சிங்கப்பூர் சட்டங்களை ஏற்று முகக்கவசம் அணிய வேண்டும் என்று நீதிபதி அவரிடம் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கப்பூரில் கொரோனா தொற்றுக்கு எதிராக கடும் கட்டுப்பாடுகள் அமுலில் இருப்பதோடு அந்த தொற்று பரவலை அந்த நாடு கட்டுப்பாட்டில் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆப்கான் ஜனாதிபதி அஷ்ரப் கனி ஐ.அ. இராச்சியத்தில் அடைக்கலம்



ஆப்கான் ஜனாதிபதி அஷ்ரப் கனி ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடைக்கலம் பெற்றதாக அந்த நாடு அறிவித்துள்ளது.

தலிபான்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைநகர் காபூலை நோக்கி முன்னேறியதை அடுத்தே கனி நாட்டை விட்டு வெளியேறினார். இந்நிலையில் மனிதாபிமான அடிப்படையில் கனி மற்றும் அவர்களின் குடும்பத்தினரை வரவேற்றதாக ஐக்கிய அரபு இராச்சிய வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ந்து கடந்த புதன்கிழமை கனி வெளியிட்ட வீடியோ அறிவிப்பு ஒன்றில், தாம் நாட்டை விட்டு தப்பி ஓடியதாக கூறுவதை மறுத்துள்ளார். பெரும் பேரழிவு ஒன்றை தவிர்ப்பதற்கே தாம் வெளியேறியதாக தெரிவித்துள்ளார்.

'இப்போது நான் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருப்பதால் இரத்தம் சிந்தப்படுவது மற்றும் குழப்பம் நிறுத்தப்பட்டுள்ளது. ஆப்கானுக்கு திரும்புவது பற்றி நான் தற்போது பேசி வருகிறேன்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும் தொகை பணத்துடன் தாம் நாட்டை விட்டு தப்பிச்சென்றதாக கூறப்படுவது, 'முற்றும் அடிப்படைய அற்றது' என்றும் 'பொய்யானது' என்றும் அவர் மறுத்தார்.

## ஆப்கானுக்கு நிதி ஆதரவை நிறுத்தியது நாணய நிதியம்



ஆப்கானிஸ்தான் இனி நிதி ஆதரவைப் பெற்றுக்கொள்ள முடியாது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

தலிபான் அமைப்பு அண்மையில் நாட்டைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து, நிதியம் இதனை அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அரசாங்கத்தை அங்கீகரிப்பதில், சர்வதேச சமூகத்துக்கு இடையே நிலவும் குழப்பமான நிலையே இதற்குக் காரணம் என நிதியம் குறிப்பிட்டது.

ஆப்கானிஸ்தான் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க, அதற்குச் சுமார் 370 மில்லியன் டொலர் நிதி அடுத்த வாரம் வழங்கப்படவிருந்தது. ஆனால், அது தற்போது தடை செய்யப்பட்டிருப்பதாக நிதியம் தெரிவித்தது.


சர்வதேச நாணய நிதியம் தமது பெரும்பாலான உறுப்பு நாடுகள் அங்கீகரிக்காத அரசுகளுக்கு எதிராக இதற்கு முன்னரும் இது போன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2019 ஏப்ரலில் வெனிசுவேலாவுக்கு எதிராகவும் தற்போது மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் நிதியம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் ஒப்புதல் அளிக்கப்பட்ட கடன் தவணையை ஆப்கானுக்கு கடந்த ஜூன் மாதத்தில் சர்வதேச நாணய நிதியம் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானில் ஆட்சியைப் பிடித்த தலிபான்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



### காபூல் விமானநிலையத்தில் பதற்றம் நீடிப்பு



அமெரிக்கா மற்றும் மற்ற மேற்கத்தேய சக்திகள் ஆப்கானில் இருந்து தமது பிரஜைகள் மற்றும் சில ஆப்கானியர்களை வெளியேற்றும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கும் நிலையில் அங்கு தலிபான்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் வெடித்துள்ளது.

கிழக்கு நகரான ஜலாலாபாத்தில் கடந்த புதன்கிழமை தலிபான் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதாக பார்த்தவர்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகி உள்ளது.

வார இறுதியில் தலைநகர் காபூலை கைப்பற்றி நாட்டின் கட்டுப்பாட்டை தன்வசம் கொண்டுவந்த தலிபான்களுக்கு எதிராக நாட்டில் வெளியான முதல் எதிர்ப்பு அலையாக இது பார்க்கப்படுகிறது.

ஜலாலாபாத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் சதுக்கம் ஒன்றில் தேசிய கொடியை ஏற்ற முயன்றபோது தலிபான் போராளிகள் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாக சம்பவத்தை பார்த்த இருவர் மற்றும் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர். இதில் மூவர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

ஜலாலாபாத்தில் தலிபான்களின் வெள்ளை நிற கொடிகள் இறக்கப்பட்டு கூரைகள் மேல் ஆப்கான் கொடிகள் ஏற்றப்பட்டிருக்கும் காட்சிகளை பிரிட்டன் நாட்டின் 'ஸ்கை நியுஸ்' தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

'நான் இங்கு உங்கள் முன் நிற்கிறேன். 30 துப்பாக்கி குண்டுகளால் என்னை உங்களால் துளைக்க முடியும். என்னை கொல்லுங்கள், இந்தப் கொடிக்காக நான் எனது உயிரை தியாகம் செய்கிறேன். இது எனது கொடி. இறைவன் நாடினால் எனது அரசு மீண்டும் திரும்ப வரும்' என்று ஆப்கான் தேசிய கொடியை போர்த்தி இருந்த ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் ஸ்கை செய்தியாளரிடம் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் தலிபான்கள் தரப்பில் இருந்து எந்த பதிலும் அளிக்கப்படவில்லை. தலிபான் எதிர்ப்பு மையப்பகுதியாக தஜிக் இன மக்கள் வலுவாக உள்ள பன்ஜ்சிர் பள்ளத்தாக்கு உள்ளது.

தலிபான்களுக்கு எதிராக போராடுவதற்கு ஆயுத உதவி தரும்படி பன்ஜ்சிர் தலைவர் அஹமது மசூத் மேற்குலக நாடுகளிடம் கேட்டுள்ளார்.

'பன்ஜ்சிர் பள்ளத்தாக்கில் இருந்து நான் எழுதுகிறேன். முஜாஹித் போராளிகளுடன் இணைந்து எனது தந்தையின் வழியை பின்பற்றி தலிபான்களிடம் இருந்து நாட்டை மீட்பதற்கு தயாராகியுள்ளோம்' என்று வொசிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கு எழுதியுள்ளார். இவர் தலிபான் எதிர்ப்புப் போராளியான அஹமது ஷாஹ் மசூதின் மகனாவர். ஷாஹ் மசூத் 2001 ஆண்டு தலிபான்கள் சார்பில் அல் கொய்தா அமைப்பால் கொல்லப்பட்டார்.

மேற்கு நாடுகளின் பிரஜைகள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களுக்காக பணியாற்றிய ஆப்கானியர்களை வெளியேற்றும் நடவடிக்கை நேற்று தீவிரமாக இடம்பெற்றது. அமெரிக்கர்கள் ஆப்கானில் இருந்து முழுமையாக வெளியேற்றப்படும் வரை அமெரிக்கத் துருப்புகள் அங்கு தொடர்ந்து நிலைகொள்ளும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க துருப்புகள் ஆப்கானில் இருந்து வெளியேறுவதற்காகன காலக்கெடு வரும் ஒகஸ்ட் 31 ஆம் திகதியுடன் முடிவடையவிருக்கும் நிலையில் அந்த காலம் கடந்து அமெரிக்கப் படை அங்கு நிலைகொள்ள வாய்ப்பு இருப்பதாக பைடன் கூறியுள்ளார்.

சுமார் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரையிலான அமெரிக்கர்கள் ஆப்கானிஸ்தானில் இன்னும் தங்கியிருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இவர்கள் தவிர அமெரிக்காவுக்காகப் பணியாற்றிய சுமார் 50 ஆயிரம் முதல் 65 ஆயிரம் வரையிலான ஆப்கானியர்களையும் மீட்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக பைடன் தெரிவித்தார்.

தலிபான்கள் இந்த வேகத்தில் முன்னேறுவார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை என்றும் ஏ.பி.சிக்கு அளித்த பேட்டியில் ஜோ பைடன் கூறினார்.

நேற்றுக் காலை காபூல் விமானநிலையத்தில் அமைதி காணப்பட்டதாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மொத்தம் 8,000 பேர் வரை வெளியேற்றப்பட்டிருப்பதாக காபூலில் உள்ள மேற்கத்தேய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விமானநிலைய வளாகத்திற்குள் மக்கள் நுழைவதை தலிபான்கள் கடந்த புதனன்று தடுத்து நிறுத்தினர்.


'பெரும் குழப்ப சூழல் ஏற்பட்டது. தலிபான்கள் வானை நோக்கி சுட்டதோடு, துப்பாக்கிகளால் மக்களை தாக்கினர்' என்று விமானநிலையத்திற்குள் நுழைய முயன்ற ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

விமானப் பயணத்துக்கான உரிய ஆவணங்களை வைத்திருப்போரைக்கூட, ஆயுதந்தாங்கிய தலிபான் படையினர் விமான நிலைய வளாகத்துக்குள் செல்லவிடாமல் தடுப்பதாக அதைப் பார்த்தவர்கள் கூறினர்.

விமானநிலையத்திற்கு வெளியே கூடிய மக்களை கலைப்பதற்கே வானை நோக்கி சூடு நடத்தியதாக தலிபான் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதில் யாரையும் காயப்படுத்தும் நோக்கம் இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தலைநகர் காபூலில் உள்ள ஹமிட் கர்ஸாய் விமான நிலையத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், அமெரிக்கப் படை வீரர்கள் சுமார் 4,500 பேர் காவல் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## காபூலுக்கு அருகில் தலிபான் எதிர்ப்பு படை நிலைநிறுத்தம்



ஆப்கான் தலைநகர் காபூலில் இருந்து 100 மைல்களுக்கும் குறைவான தொலைவில் தலிபான் எதிர்ப்பு படை ஒன்றை அந்நாட்டு துணை ஜனாதிபதி மற்றும் கொல்லப்பட்ட போராட்டக் குழு தலைவரின் மகன் ஆகியோர் திரட்டி வருகின்றனர்.

தலிபான்களின் கட்டுப்பாட்டில் இல்லாத ஒரே பிராந்தியமான பன்ஜ்சிர் பள்ளத்தாக்கில் துணை ஜனாதிபதி அம்ருல்லா சாலிஹ் மற்றும் முன்னாள் தலிபான் எதிர்ப்பு போராளியான அஹமது ஷாஹ் மசூத்தின் மகன் அஹமது மசூத் கெரில்லா அமைப்பு ஒன்றை திரட்டி வருகின்றனர்.

ஆப்கானில் வேகமாக முன்னேறிய தலிபான்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைநகர் காபூலை கைப்பற்றிய நிலையில் அங்கு அச்ச சூழல் நிலவி வருகிறது. இந்நிலையில் தாம் தொடர்ந்து ஆப்கானிலேயே இருப்பதாகவும் ஜனாதிபதி அஷ்ரப் கனி நாட்டை விட்டு தப்பியோடிய நிலையில் இடைக்கால ஜனாதிபதியாக தாம் இருப்பதாகவும் சாலிஹ் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

மலைப் பிராந்தியத்தை அரணாகக் கொண்ட பன்ஜ்சிர் பள்ளத்தாக்கு 1990களில் சிவில் யுத்தத்தின்போது தலிபான்களிடமும் அதற்கு முன்னர் சோவிட் படைகளிடமும் வீழாத பகுதியாக உள்ளது.

## புர்கினா பாசோவில் பொதுமக்கள் பலர் பலி



வடக்கு புர்கினா பாசோவில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

வடக்கு நகரான அர்பின்டாவுக்கு அருகில் இடம்பெற்றிருக்கும் இந்தத் தாக்குதலில் 30 பொதுமக்கள் மற்றும் 14 படையினர் உட்பட குறைந்தது 47 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அரச துருப்புகள் 16 கிளர்ச்சியாளர்களை கொன்றதாக அரச ஊடகம் குறிப்பிட்டபோதும் அந்த எண்ணிக்கை 58 ஆக உள்ளது என்று பாதுகாப்பு தரப்புகள் குறிப்பிட்டுள்ளன. அல் கொய்தா மற்றும் இஸ்லாமிய அரசுக் குழுவுடன் தொடர்புபட்ட போராளிகள் புர்கினா பாசோ மற்றும் அண்டை நாடுகளான மாலி மற்றும் நைகரில் அடிக்கடி நடத்தும் தாக்குதல்களில் இந்த ஆண்டில் மாத்திரம் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நைகர் கிராமம் ஒன்றில் ஆயுததாரிகள் கடந்த திங்கட்கிழமை நடத்திய தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 37 பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அல் கொய்தாவுடன் தொடர்புடைய போராளிகள் 2012 ஆம் ஆண்டு வடக்கு மாலியை கைப்பற்றியதைத் தொடர்ந்து சஹெல் பிராந்தியத்தில் குழப்பம் நிலவுகிறது.

## ஆப்கானில் பெண்களின் படங்கள் சேதம்




ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில், கடை முகப்புகளில் தென்படும் பெண்களின் படங்கள் மறைக்கப்பட்டு அல்லது சேதப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆப்கானிஸ்தானில் பெண்களின் உரிமை குறித்துக் கவலை எழுந்துள்ள வேளையில் அதுபற்றிய தகவல் வெளிவந்துள்ளது.

1996இலிருந்து 2001 வரை தலிபான்கள் ஆட்சியில் இருந்தபோது பெண்கள் கல்வி கற்கவும், பயணம் மேற்கொள்ளவும், வேலை செய்யவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. தடை விதிக்கப்பட்ட அழகுப் பராமரிப்பு நிலையங்கள் அனைத்தும் பின்னர் மீண்டும் செயல்பட ஆரம்பித்தன. காபூலில் தற்போது நூற்றுக்கணக்கான அழகுப் பராமரிப்பு நிலையங்கள் உள்ளன.

தலிபான் மீண்டும் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றிய பின்னர், சில வர்த்தகங்கள், கடைகளை மூடவேண்டியிருக்குமோ என்று அஞ்சுகின்றன. இந்நிலையில், ஆப்கானியப் பொதுமக்களுக்கு ஆதரவு தெரிவித்து, உலகெங்கும் சில நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை, பெண்களின் பாதுகாப்புக் குறித்தும் உரிமைகள் குறித்தும் அக்கறை தெரிவித்துள்ளன.

இருப்பினும், பெண்கள் கல்வி கற்கமுடியும் என்றும், அவர்கள் ஆரம்ப பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் வரை சென்று பயில முடியும் என்றும் தலிபான் அமைப்பு தெரிவித்துள்ளது.

பெண்கள் முகத்தையும் உடலையும் மறைக்கும் புர்கா எனும் முழுமையான வெளியாடை அணிவது கட்டாயமாக்கப்படாது என்றும் தலிபான்கள் கூறியுள்ளனர்.

## கூடுதல் தடுப்பூசி வழங்க அமெரிக்கா நடவடிக்கை



அமெரிக்காவில் குறைந்துவரும் நோய் எதிர்ப்புச் சக்தியில் இருந்து பாதுகாப்புப் பெற மூன்றாவது கொவிட்19 தடுப்பூசி தேவை என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. பலதரப்பட்ட தரவுகளை ஆராய்ந்த பின்னர், அமெரிக்க அதிகாரிகள் அவ்வாறு கூறினர்.

தகுதிபெறும் அமெரிக்கர்கள் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கக்கூடிய கூடுதல் தடுப்பூசியை, அடுத்த மாதம் 20ஆம் திகதி முதல் போட்டுக்கொள்ளலாம். மேலும், எளிதில் பரவக்கூடிய டெல்டா வகை வைரஸில் இருந்து கூடுதல் பாதுகாப்பை அது வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது தடுப்பூசி போடப்பட்ட 8 மாதங்களுக்குப் பின்னர், அந்தக் கூடுதல் தடுப்பூசியை மக்கள் போட்டுக்கொள்ளலாம் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். அமெரிக்காவின் அந்த நடவடிக்கைக்கு, சர்வதேச அளவில் குறைகூறல்கள் எழுந்துள்ளன.

அமெரிக்கா அதன் சொந்த நலனுக்கே முன்னுரிமை அளிப்பதாக சர்வதேச சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர். செல்வந்த நாடுகள் மூன்றாவது முறை தடுப்பு மருந்து போடுவதை நிறுத்தும்படி உலக சுகாதார அமைப்பு ஏற்கனவே வலியுறுத்தியுள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 ஓகஸ்ட் 20 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN




**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.15 |
| அஸர் | 03.28 |
| மஃரிப் | 06.24 |
| இஷா | 07.36 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் ஆவணி 04

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: துவாதசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# மாணவர்கள், பெற்றோர்களினது எதிர்பார்ப்பை நிறைவேற்றுவது கல்வியமைச்சின் பொறுப்பு

## கடமையை பொறுப்பேற்கும் நிகழ்வில் புதிய கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாணவர்களினதும் பெற்றோர்களினதும் பாரிய எதிர்பார்ப்பை நிறைவேற்றும் வகையில் சிறந்த அறிவுத்திறனை எதிர்கால பரம்பரைக்கு பெற்றுக்கொடுப்பது கல்வியமைச்சின் பொறுப்பாகும் என புதிய கல்வியமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

புதிய கல்வியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்று கல்வியமைச்சில் தமது கடமைகளைப் பொறுப்பேற்ற பின் அமைச்சின் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அறிவே மிகச்சிறந்த உயரிய சொத்தாகும்.

சமூகத்தில் ஏனைய சொத்துக்கள் அழிந்து போகலாம் அறிவு மட்டுமே

06

# ஆறு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் வெளிநாட்டு அமைச்சுக்கு

## மகிழ்ச்சி வெளியிட்ட ஜீ .எல். பீரிஸ்



ஆறு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் அமைச்சுக்கு வருவதில் மகிழ்ச்சி அடைவதாக புதிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

புதிதாக நியமிக்கப்பட்ட வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று (புதன்கிழமை) அமைச்சில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இதனையடுத்து உரையாற்றிய அவர், கடந்த இரண்டு வருடங்களில் வெளிநாட்டு அமைச்சிற்கு வழங்கப்பட்ட தலைமைத்துவத்திற்காக வெளிச்செல்லும் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவை பாராட்டினார்.

அதேவேளை, வெளிநாட்டு அமைச்சின் அனைத்து நடவடிக்கைகளிலும் அமைச்சர் தினேஷ் குணவர்தன இலங்கையின் உள்ளார்ந்த சுயமரியாதை மற்றும் கௌரவம் பாதிக்கப்படாதிருப்பதனை உறுதிப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஒன்றுகூடல்கள் அதிகரித்ததாலே தொற்றாளர்களும் அதிகரித்தனர்



**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

புதுவருட காலப்பகுதி மற்றும் அதன் பின்னரான காலத்தில் மக்கள் ஒன்றுகூடல்கள் அதிகமாக இடம்பெற்றமையாலேயே சமூகத்தில் அதிகளவான கொவிட்19 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டு வருகின்றனர் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"கடந்தகாலத்தைவிட சமூகத்தில் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். தொழில்நுட்ப ரீதியாக அவ்வாறானதொரு

06

# அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த நடவடிக்கைகளை சில வாரங்களுக்காவது இடை நிறுத்துவது பயனுள்ளதாகும்

## கொழும்பு மாநகர முதல்வர் ரோஸி சேனநாயக்க அறிவுறுத்தல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் வகையில் கொழும்பு நகரில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை சில வாரங்களுக்காவது நிறுத்துவது மிகவும் பயனுள்ளதாகும் என கொழும்பு மாநகர முதல்வர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் வேகமாக பரவும் பல்வேறு பிரதேசங்களிலும் தாமே முன்வந்து தமக்கு நட்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்ற நிலையில் சுயமாக வர்த்தக நிலையங்களை மூடி வரும் வர்த்தகர்களின் நடவடிக்கைகளை கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டிற்கு வழங்கும் ஒத்துழைப்பாக கருதி வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மக்கள் அத்தியாவசிய காரணங்கள் மற்றும் தொழில்களுக்காக அன்றி வேறு விடயங்களுக்காக வீட்டிலிருந்து வெளியில் செல்ல வேண்டாம் என்றும் பாதுகாப்பாக வீடுகளில் தங்கியிருக்குமாறும் கொழும்பு மாநகர முதல்வர் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாட்டின் அனைத்து ஆஸ்பத்திரிகளினதும் கொள்ளளவு நிறைந்து காணப்படுகின்ற நிலையில் கொரோனா வைரஸ் நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தீவிர சிகிச்சை பிரிவுகளின் கட்டில்களில் மிக சொற்பமானவையே தற்போது எஞ்சி யுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார பரிந்துரைகளை உச்ச அளவில் நடைமுறைப்படுத்தி வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய சுகாதார வழிமுறைகளை முறையாகப் பின்பற்றி அரசாங்கத்திற்கும் கொழும்பு மாநகர சபைக்கும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து துறையினருக்கும் ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ஆசிய சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த இலங்கை சிறுமி

## நிந்தவூருக்கு கிடைத்த பெருமைக்கு குவியும் வாழ்த்து



அம்பாறை – நிந்தவூர் முதலாம் பிரிவைச் சேர்ந்த எம்.ஜே.பாத்திமா அனத் ஜிதாஹ் "கிறேன் மாஸ்டர்" மகுடத்தையும் ஆசிய நாடுகளின் கொடிகளை மிக வேகமாக அடையாளம் காணக்கூடியவர் "Fastest to Identify Flags of all Asian Countries" என்ற பட்டத்தையும் வென்று இலங்கைக்கு பெருமை சேர்த்துள்ளார் .

எம்.எல்.எம்.ஜெஸீம், யு.கே. பாத்திமா ஜவ்ஹறா தம்பதிகளின் செல்வ புதல்வியான இவர், அனைத்து ஆசிய நாடுகளின் கொடிகளையும் மிக வேகமாக அடையாளம் கண்ட முதல் ஆசிய சிறுமி எனும் மகுடத்தை பெற்றுள்ளார்.

இவர் 03.12.2016 இல் பிறந்தவர். தனது 4ஆவது வயதில் ஆசிய நாடுகளின் கொடிகளை 24 வினாடிகளில் வேகமாக அடையாளம் கண்டு ஆசிய சாதனை புத்தகத்தில் தன் பெயரை பதித்துள்ளார்.

அத்துடன் சிறு வயதிலேயே சிறந்த ஞாபக சக்தியும் பல திறமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள இவர், ஆங்கிலத்தை சரளமாக வாசிக்க, எழுத, பேச கற்றுக்கொண்டதுடன், கணிதம் உள்ளிட்ட பாடங்களிலும் மிக தேர்ச்சியாக திகழ்கின்றார்.

இதேவேளை "கிரேன் மாஸ்டர்" எனும் மகுடத்தை பெற்றுக்கொள்கின்ற நிந்தவூர் மண்ணின் இரண்டாவது சிறுமியாக இவர் திகழ்கின்றார். இந்நிலையில் குறித்த சிறுமிக்கு பலரும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

# தேர்தல் ஆணையருக்கு கொரோனா தொற்று குடும்பம், பணியாளர்கள் தனிமைப்படுத்தலில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது குடும்ப உறுப்பினர்கள் சிலர் மற்றும் பணியாட்கள் இருவரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி உள்ளதாகவும் அவர்கள் அனைவரும் தற்போது தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கொரோனா வைரஸ் எச்சரிக்கை சூழ்நிலை காரணமாக கடந்த 13ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவின் பிரதான செயலகம் மூடப்பட்டு கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

அதனையடுத்து குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களே கடமைக்கு அழைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தினமும் ஒவ்வொரு பிரிவு உத்தியோகத்தர்களை மாத்திரம் கடமைக்கு அழைப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# கொரோனா தொற்றுக்கு இரு மாணவர்கள் பலி!

## மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணம்

நாட்டில் பரவும் கொரோனா தொற்று காரணமாக 2 பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இசிப்பத்தான கல்லூரியைச் சேர்ந்த 18 வயதுடைய மாணவர் ஒருவரும் கொழும்பில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலையில் கல்வி பயிலும் 17 வயதுடைய மாணவி ஒருவருமே இவ்வாறு கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

இசிப்பத்தான கல்லூரியைச் சேர்ந்த சமித்த டில்துஷான், களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஆகஸ்ட் 14 ஆம் திகதி மூச்சுத்திணறல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சமித்த டில்துஷான், மேலதிக சிகிச்சைகளுக்காக தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**புதிய ஊடக அமைச்சர்**

# டளஸ் அழகப்பெருமவிற்கு மர்ஜான் பளீல் எம்.பி வாழ்த்து

**அஜ்வாத் பாஸி**



புதிய ஊடகத்துறை அமைச்சராக பதவியேற்றுள்ள டளஸ் அழகப்பெருமவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சராக பதவியேற்றுள்ள அமைச்சர் டளஸ் அழகப்பெருமவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தென் மாகாண மக்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்து இன, மத பேதமின்றி மக்கள் பணியாற்றக்கூடிய ஒருவரை ஊடக அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளதை வரவேற்கிறேன்.

அமைச்சர் டலஸ் அழகப்பெரும நீண்டகால அரசியல் அனுபவம் உடையவர். கடந்த காலங்களில் அவர் வாழ்க்கைத்திறன், இளைஞர் விவகாரம், கல்வி, மின் சக்தி ஆகிய அமைச்சுகளை பொறுப்பேற்று திறம்பட

06

**எக்ஸ்பிரஸ் கப்பல் தீ விபத்து;**

# சட்ட மாஅதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல்



எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலில் தீ விபத்து தொடர்பான விசாரணையை விரைவாக முடிக்க தீர்மானித்துள்ளதாக கூறிய சட்ட மாஅதிபர் திணைக்களம், குற்றவாளிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்யவுள்ளதாகவும் கூறியுள்ளது.

குறித்த வழக்கு, நேற்று கொழும்பு மேலதிக நீதவான் லோச்சனி அபேவிக்ரம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி லக்மினி கிரிஹாகம, நீதிமன்றத்தில் இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

அத்துடன் கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையகத்தால் நியமிக்கப்பட்ட விசேட குழு, எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து சான்றுகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதங்களை ஆராய்ந்து வருகின்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலில் தீ விபத்து தொடர்பான விசாரணையை உடனடியாக முடிக்க தீர்மானித்துள்ளதுடன், குற்றவாளிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகளை தாக்கல் செய்யவுள்ளதாகவும் சட்ட மாஅதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்**

# 64 பேருக்கு தொடர்ந்து விளக்கமறியல் உத்தரவு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட ஸஹ்ரானின் சகோதரி, சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட 64 பேரையும் பலத்த பாதுகாப்பு மத்தியில் நேற்று (19) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்டு நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 2 ம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். கடந்த 21.4.2019 உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் ஸஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தில் காத்தான்குடியை சேர்ந்த 63 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில் 58 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 58 பேருடன் குண்டுதாக்குதல் தொடர்பாக வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களை கொண்ட ஸஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சியோன் தேவாலய தற்கொலை குண்டு தாக்குதலை மேற்கொண்ட ஆசாத்தின் தாயார் சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரிக்கு பிரயாணம் செய்ய பஸ்வண்டி ஆசனப் பதிவு செய்த சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 6 பேர் உட்பட 64 பேரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 145.02 | 149.94 |
| கனடியன் டொலர் | 158.24 | 162.86 |
| யூரோ | 231.77 | 238.57 |
| ஜப்பான் யென் | 1.7943 | 1.8404 |
| சிங்கப்பூர் டொலர் | 145.86 | 149.92 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 273.66 | 280.61 |
| சுவிஸ் பிராங்க் | 213.64 | 220.71 |
| அமெரிக்க டொலர் | 198.59 | 202.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 530.28 | கட்டார் ரியால் | 54.90 |
| குவைத் டினார் | 664.39 | சவூதி ரியால் | 53.30 |
| ஓமான் ரியால் | 519.27 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.42 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் ஆவணி மாதம் 04ம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 முஹர்ரம் பிறை 10

### குறள் தரும் சிந்தனை



இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு

*மயக்கத்திலிருந்து விலகிக் குற்றமற்ற மெய்யை உணரும் நிலையை அடைந்தவர்க்கு, அந்நிலை துன்ப இருளை விலக்கும்; இன்ப நிலையைக் கொடுக்கும்.*

## நிலைமையின் பாரதூரத்தை ஒவ்வொருவரும் உணராத வரை ஆபத்து நீங்கப் போவதில்லை!

மக்கள் மத்தியில் கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாயின் முகக்கவசம் அணிதல், கைகளின் சுத்தம் பேணுதல் ஆகிய இரண்டு சுகாதாரப் பழக்கவழக்கங்கள் மாத்திரமே முக்கியமானவையென்றுதான் பலரும் நினைத்திருக்கின்றனர். இவையிரண்டுக்கும் அடுத்ததாக சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பதே மிக முக்கியமானதென்பதை பலரும் மறந்து விடுகின்றனர். சமூக இடைவெளியை பேணுவதை பலரும் அலட்சியம் செய்வதனாலேயே கொவிட் தொற்று கூடுதலாக பரவுகின்றதென்பது மருத்துவர்களின் கருத்தாக இருக்கின்றது.

சமூக இடைவெளியை மக்கள் கடைப்பிடிக்கத் தவறுவதனால் கொவிட் கூடுதலாகப் பரவுகின்றதென்பதனாலேயே உலகின் அதிகமான நாடுகள் இக்கொடிய தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக ஊரடங்கு உத்தரவு மற்றும் பகுதியளவிலான முடக்கம் போன்ற நடைமுறைகளைக் கடைப்பிடித்தன.

கொரோனா பெருந்தொற்று தீவிரமடைந்திருக்கின்ற இன்றைய காலப் பகுதியில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் தனது பாதுகாப்பு மீதான கரிசனையும், சமூகம் மீதான பொறுப்புணர்வும் அவசியமாகின்றன. கொரோனா என்ற கொடிய தொற்றில் இருந்து ஒவ்வொருவரும் தன்னையும் பாதுகாத்து, தன்னைச் சூழ்ந்துள்ள அடுத்தவரின் பாதுகாப்பு குறித்தும் கவனம் செலுத்துவது அவசியம். அவ்வாறான பொறுப்புணர்வு செயற்பாடுகளின் வாயிலாகவே இன்றைய பேரிடரில் இருந்து எம்மால் மீண்டெழ முடியும்.

எமது கைகளின் சுத்தம் பேணியவாறு, முகக்கவசத்தையும் அணிந்து கொண்டோமானால் மாத்திரம் கொரோனா தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெற்று விடலாமென எவரும் நம்பிக் கொள்வார்களானால் அது முட்டாள்தனம் ஆகும். இவ்விரு சுயபாதுகாப்பு பழக்கவழக்கங்களைத் தவிர, ஒவ்வொருவரும் வீட்டை விட்டு வெளியே புறப்பட்ட பின்னர் சமூக இடைவெளியை மிக அவதானமாகக் கடைப்பிடிப்பதே அவசியமாகின்றது.

அதாவது நாம் முகக்கவசத்தை அணிந்து கொண்டாலும், அடுத்தவரின் அருகே நெருங்குவதை கூடியளவில் தவிர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் முக்கியம். குறைந்த பட்சம் ஒவ்வொருவரும் மற்றவரில் இருந்து ஒரு மீற்றர் தூர இடைவெளியையாவது பேணிக் கொள்ள வேண்டுமென்பதுதான் தொற்றுநோய்கள் தொடர்பான சர்வதேச மருத்துவ நிபுணர்களின் அறிவுரையாக உள்ளது. மற்றவருடனான நெருங்கிய தொடர்பைத் தவிர்த்துக் கொள்கின்ற போது, கொவிட் வைரஸ் தொற்றிக் கொள்வதும் தவிர்க்கப்படுகின்றது என்பதுதான் உண்மை.

கொரோனா வைரஸ் என்பது எங்கோ கண்காணாத இடத்தில் இருந்து வந்து ஒருவரைத் தொற்றிக் கொள்வதில்லை. ஏற்கனவே கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான ஒருவரின் உடலில் இருந்தே அடுத்தவரின் உடலுக்குள் வைரஸ் கிருமியானது பிரவேசித்துக் கொள்கின்றது. கொவிட் தொற்றுக்குள்ளான ஒருவர் இருமும் போது, தும்முகின்ற போது அல்லது வெளிச்சுவாசத்தின் போது அவரது சுவாசத் தொகுதியில் காணப்படுகின்ற வைரஸ் கிருமிகள் மிக வேகமாக வெளியே பரப்பப்படுகின்றன.

அவரால் பரப்பப்பட்ட வைரஸ்கள் சிறிது நேரம் வரை அவரைச் சூழவுள்ள சிறு பகுதியில் காற்றில் காணப்படலாம். வளிச்சீராக்கி(எயார் கண்டிஷன்) பொருத்தப்பட்ட அறை, கடைத் தொகுதி, பஸ்கள் மற்றும் வாகனங்கள் போன்ற இடங்கள் யன்னல்களின்றி மூடப்பட்ட இடங்களாக உள்ளதனால் இவ்வாறான வைரஸ் கிருமிகள் அந்த இடங்களுக்குள் அதிக நேரம் காற்றில் பரவியிருப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவேதான் வளிச்சீராக்கி பொருத்தப்பட்ட இடங்கள் கொவிட் தொற்றுக்கு அதிக வாய்ப்புள்ள இடங்களென மக்களுக்கு எச்சரிக்கை செய்யப்படுகின்றது.

எனவே கொரோனா தொற்றுக்கு இலக்கான ஒவ்வொருவரும் மற்றவரிடம் இருந்தே இந்த வைரஸைப் பெற்றுக் கொண்டவர்களாவர். இவ்வாறான சமூக இடைவெளிக்கு அப்பால் சிலர் தாமாகவே வைரஸை தமக்குள் தொற்ற வைத்துக் கொள்வதுமுண்டு. அதாவது தமது கைகளை பல இடங்களிலும் தொடுகையில் வைத்த பின்னர் தவறுதலாக அதே கைகளால் தமது மூக்குப் பகுதியைத் தொடுகின்ற போது, எங்கோ இருந்த வைரஸ் சுவாசத் தொகுதிக்குள் பிரவேசித்துக் கொள்கின்றது.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கின்ற போது, ஒரு உண்மை எமக்குப் புலப்படுகின்றது. மக்கள் கடைப்பிடிக்கின்ற அலட்சியம் காரணமாகவே பெரும்பாலும் கொவிட் வைரஸ் அவர்களுக்குத் தொற்றிக் கொள்கின்றது என்பதுதான் அந்த உண்மை! எனவேதான் முகக்கவசம், கைகளின் சுத்தம் ஆகிய சுகாதாரப் பழக்கவழக்கங்களுக்கு அப்பால் சமூக இடைவெளியைப் பேணிக் கொள்வது முக்கியத்துவம் பெறுகின்றது.

சமூக இடைவெளியைப் பேணிக் கொள்வதென்பது ஒவ்வொரு தனிமனிதனதும் சமூகப் பொறுப்பு வாய்ந்த கரிசனை ஆகும். ஒவ்வொருவரும் இன்றைய நிலைமையின் பயங்கரத்தை சரிவர உணர்ந்து சமூக இடைவெளியைப் பேணிக் கொள்வார்களாயின் ஊரடங்கு உத்தரவோ அல்லது பொதுமுடக்கமோ நாட்டில் அவசியமில்லை.

மக்களில் பலர் இன்னும் கூட நிலைமையின் பாரதூரத்தை உணர்ந்து கொள்ளாதவர்களாக மற்றவர்களுடன் முண்டியடித்தபடி பொது இடங்களில் நடந்து கொள்வதனால்தான் பொது முடக்கம் போன்றவையெல்லாம் அவசியமாகின்றன. ஒவ்வொருவர் மத்தியிலும் விழிப்புணர்வு ஏற்படாத வரை கொரோனா அச்சுறுத்தலும் தொடரவே செய்யும் என்பதுதான் உண்மை!

editor.tkn@lakehouse.lk

# நல்லூரில் நாவலர் கலாசார மண்டபத்தின் அவல நிலை!

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் கட்டடத்தை மீளக்கையளிக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள்

இந்துக்களின் வரலாற்றுப் பெருமை மிகு யாழ்ப்பாணம் நல்லூரிலே நிறுவப்பட்டு, தற்போது பாழடைந்த நிலையில் நோக்கம் நிறைவேற்றப்படாத நிலையிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தின் நிலைமை இந்நாட்டின் இந்துக்கள் உள்ளத்தில் வேதனையை ஏற்படுத்துகின்றது. இந்துக்களின் புனித இடமாக நல்லூர் போற்றப்படுகின்றது.

அங்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள கலாசார மண்டபமானது தமிழுக்கும், இந்துசமயத்திற்கும் பெருஞ்சேவையாற்றி புகழ் பெற்ற, ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் நினைவாக நிர்மாணிக்கப்பட்டதாகும். இனத்திற்கு, மதத்திற்கு, மொழிக்கு சேவையாற்றியவர்களைப் போற்றிக் கௌரவிக்கும் பண்பு உலகளாவிய ரீதியில் காணப்படும் மரபு ஆகும். நம்நாட்டிலும் அவ்வாறான பெரியார்கள் போற்றப்பட்டு வருகின்றனர்.

தமிழுக்கும், சைவத்துக்கும் பெரும் பணியாற்றிய பெரியாராக நாவலர் பெருமான் விளங்குகின்றார். அவ்வாறு பணியாற்றியரை அவரது மண்ணில் கௌரவிப்பது முக்கியம். யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தை அது நிறுவப்பட்டதன் நோக்கம் பிறழாது பாதுகாக்க வேண்டிய கடமை சம்பந்தப்பட்ட அனைவருக்குமே உண்டு.



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முயற்சியால் அக்காலத்தில் இம்மண்டபம் நிர்மாணிக்கப்பட்டது. மேற்படி கலாசார மண்டபம் அன்று நிலவிய சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக யாழ்ப்பாணம் மாநகரசபையிடம் கையளிக்கப்பட்டது.

அவ்வாறு மாநகரசபையிடம் கையளிக்கப்பட்ட போது, சில நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டிருந்தன. குறித்த மண்டபத்தை உரிய முறையில் பராமரிப்பதும், பாதுகாப்பதும் யாழ் மாநாகர ஆணையாளரின் பொறுப்பு. அத்துடன் இம்மண்டபம் சமூக, கலாசார, கல்வி மற்றும் சமய நிகழ்வுகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இம்மண்டபத்திற்குள்ளும் அதன் சுற்றுப்புற எல்லைக்குள்ளும் அசைவ உணவு, மதுபானம் போன்றவை பயன்படுத்தப்படக் கூடாது. எதுவித சமூக சீர்கேடுகள் இடம்பெறுவதற்கும் இடமளிக்கக் கூடாது என்பதே அந்த நிபந்தனைகளாகும்.

இன்று அம்மண்டபத்தின் நிலைமையை நோக்கும் போது வேதனை வருகின்றது. ஏற்கனவே மண்டபம் யாழ் மாநகர சபையிடம் கையளிக்கப்பட்ட போது, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மண்டபத்தை தம்மிடம் மீள ஒப்படைக்குமாறு கோரும் போது அதற்கு இரண்டு மாத கால முன்னறிவித்தல் வழங்கப்படவேண்டுமென்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 2004 ஆம் ஆண்டு முதல் குறித்த நாவலர் கலாசார மண்டபத்தை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் மீளக்கையளிக்கும்படி பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகம் அதைக் கவனத்தில் கொள்ளவில்லையென்பதை ஆவணங்கள் வெளிப்படுகின்றன.



தமிழுக்கும் சைவத்துக்கும் அர்ப்பணிப்பான பணியாற்றிய பெரியாரை நினைவு கூருமுகமாக நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபத்தின் இன்றைய நிலைமையை ஆராயும் போது அது பாழடைந்த நிலையிலேயே காணப்படுவது தெளிவாகின்றது. குறித்த கலாசார மண்டபம் எதுவித பராமரிப்புமற்ற, கைவிடப்பட்ட, பாழடைந்த ஒரு கட்டடமாகவே காணப்படுகின்றது. தற்காலிக பொறுப்பேற்ற யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகம் இக்கட்டட பரிபாலனத்தை உதாசீனம் செய்துள்ளமையைக் கட்டடத் தோற்றமும் அதிலுள்ள உடைத்துக் குவிக்கப்பட்டுள்ள தளபாடங்களும், மலசலகூடங்களின் நிலைமையும், ஏனைய அனைத்து விடயங்களும் புலப்படுத்துகின்றன.




இவ்வாறான ஒரு கட்டடம் எதுவித பயன்பாட்டுக்கும் உட்படுத்தப்படாத நிலையில் யாழ்.மாநகர மத்தியிலே உள்ளமை கவலைக்குரியது, கண்டனத்திற்குரியது. முக்கிய ஒரு இடத்தில் அமைந்துள்ள இக்கட்டடம் உரிய முறையில் பயன்படுத்தப்படாது இருக்குமானால் உருவாக்கப்பட்ட நோக்கம் தவிர்ந்த வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தும் நிலைமையும் ஏற்படலாம்.

நாவலர் கலாசார மண்டபத்தை பராமரிக்கவோ, பயன்படுத்தவோ, பாதுகாக்கவோ முடியாத இயலாத நிலைமை உள்ளதை நன்றாகவே புரிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வாறுள்ள நிலையில் பொதுச்சொத்தான குறித்த கலாசார மண்டபத்தை, அதன் பாதுகாப்பை, பரிபாலனத்தை தொடர்ந்தும் உதாசீனம் செய்வது ஏற்புடையதல்ல. ஏற்கனவே இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கையின்படி அக்கட்டடத்தை மீளவும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்க வேண்டுமென்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது.

குறித்த கலாசார மண்டபத்தைப் பொறுப்பேற்கும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அதை உரியமுறையில் பராமரித்துப் பாதுகாப்பதுடன் நிறுவப்பட்ட நோக்கம் பிறழாது பரிபாலன ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும். இதுவே சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பு ஆகும்.

யாழ். மாநகர நிர்வாகம் குறித்த கலாசார மண்டபத்தை இந்துசமய அலுவல்கள் திணைக்களத்திடம் கையளித்து அதன் மூலம் சமூகப் பணிகள் தொடர இடமளிக்க வேண்டியதே நியாயம்.

**த.மனோகரன்...**
*(துணைத்தலைவர், கல்விக்குழு செயலாளர்)*
*அகில இலங்கை இந்து மாமன்றம்*

# கொவிட் இடர்காலத்துக்கு மத்தியிலும் அபான்ஸ் PLC ஈட்டிய அதிக இலாபம்

அபான்ஸ் PLC 2022 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் வரிக்கு முந்திய இலாபமாக ரூ.1.2 பில்லியனை பதிவு செய்துள்ளது. இது சென்ற வருடத்தை விட 131 வீத அதிகரிப்பாகும். கொவிட் தொற்று காரணமாக நாட்டின் பொருளாதாரத்தின் வேகம் மந்தமாகியுள்ள நிலையில், அபான்ஸ் பி.எல்.சி 2022 ஆம் நிதியாண்டின் முதலாவது காலாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் அபான்ஸ் பி.எல்.சி 2022 நிதியாண்டின் முதல் காலாண்டில் 10.6 பில்லியன் ரூபாயை வருமானமாக பெற்றுள்ளது. இது முந்திய வருடத்தில் முதலாவது காலாண்டில் 6.7 பில்லியன் ரூபாயாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.



Mrs. Aban Pestonjee, Chairperson and Founder of Abans Group of Companies.

Mr. Behman Pestonjee (Tito), Managing Director of Abans Group.

2022 நிதியாண்டின் முதல் காலாண்டில் குழுமத்தின் மொத்த இலாபம் 29 வீதம் ஆகும். இருப்பினும் இது முந்திய வருடத்தைப் பார்க்கிலும் குறைவான சதவீதமாகவே அமைந்துள்ளது. இதற்கான முக்கிய காரணம் உற்பத்திக் கலவையின் கேள்விகளுக்காக ஏற்பட்ட மாற்றமாகும்.

நிறுவனம் வரிக்கு முந்திய இலாபமாக 1.2 பில்லியன் ரூபாவை பெற்றுள்ளதோடு, அது முந்திய வருடத்தின் முதல் காலாண்டில் 526 மில்லியன் ரூபாவோடு ஒப்பிடுகையில் 131வீத அதிகரிப்பாகும். 2022 நிதியாண்டின் முதல் காலாண்டில் நிறுவனத்தின் வரிக்குப் பிந்திய இலாபம் ரூ.938 மில்லியன் ஆகும். இது முந்திய வருடத்தின் முதல் காலாண்டில் 381 மில்லியன் ரூபாவாக இருந்தது. தொற்றுநோய்க்கு மத்தியில் வருடத்திற்கு வருடம் ஒப்பிடுகையில் இது 146 வீத அதிசிறந்த வளர்ச்சியாகும்.

அபான்ஸ் குழுமம் 2022 நிதியாண்டின் முதல் காலாண்டில் வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 1.6 பில்லியனை பதிவு செய்துள்ளதோடு, இதில் இடைநிறுத்தப்பட்ட செயல்பாடுகளின் இலாபமாக ரூ.705 மில்லியனும் அடங்கும். கடந்த ஆண்டின் முதல் காலாண்டில் குழுமத்தின் வரிக்குப் பிந்திய இலாபமாக ரூ.347 மில்லியனை பதிவு செய்தது. அத்தோடு இடைநிறுத்தப்பட்ட செயல்பாடுகளின் மூலம் 30 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டது.

2022 நிதியாண்டில் முதல் காலாண்டில் நிறுவனத்தின் செயற்பாடு தொடர்பாக அபான்ஸ் பி.எல்.சி முகாமைத்துவப் பணிப்பாளர் பேமன் பெஸ்டொன்ஜி கருத்துத் தெரிவிக்கையில் 'தொற்றுநோய் பரவும் சூழலில் மிகவும் கவனமாக தமது மூலோபாய திட்டத்தை செயல்படுத்தி தேவையான முடிவுகளை எடுப்பதற்குரிய பன்முக துறைசார் நிபுணத்துவமிக்க உயர் முகாமைத்துவ குழுவொன்று எம்மிடம் உள்ளது. இதன் காரணமாக கடினமான சூழ்நிலையிலும் வெற்றிகரமான பெறுபேறுகளை எம்மால் எட்டுவதற்கு முடிந்துள்ளது. அத்தோடு, எமது மிகச் சிறந்த வணிக ஆற்றல்மிக்க நிபுணத்துவ முகாமைத்துவக் குழுவின் ஆதரவு மற்றும் வழிகாட்டுதலின் கீழ் எமது இலக்குகளை மிகவும் வெற்றிகரமாக அடைய முடிந்துள்ளது. நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத்தை மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்துவதால், எதிர்காலத்தில் நாடு மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதன் மூலம் பாரிய அளவிலான பொருளாதார செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதேபோல் இந்த வளர்ச்சியுடன் கடந்த காலத்தில் நாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களை பயன்படுத்தி எங்கள் பங்களார்களுக்கு மிகச் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்வதற்கான பின்புலத்தை உருவாக்கக் கூடிய சந்தர்ப்பம் அமையும்' எனக் குறிப்பிட்டார்.

2022 நிதியாண்டின் முதல் காலண்டில் நிறுவனத்தின் ஒரு பங்கு மீதான வருமானம் ரூ.0.42 ஆகும். இது சென்ற வருடத்தின் முதல் காலாண்டை விட இரண்டரை மடங்கு அதிகமாகும்.

அபான்ஸ் பி.எல்.சி தலைவி திருமதி.அபான் பெஸ்டொன்ஜி கருத்து தெரிவிக்கையில், உலகளாவிய தொற்றுநோய்க்கு மத்தியில், சவாலான வணிகச் சூழலில் தமது பங்காளிகளையும், பங்குதாரர்களையும் பாதுகாத்து வழிநடத்துவதற்கு அபான்ஸ் குழுமம் எப்போதும் அர்ப்பணிப்போடு செயலாற்றும் எனக் குறிப்பிட்டார்.

# மருதமுனை ஷம்ஸ் அதிபராக ஹிர்பஹான் பதவியேற்பு

மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின்(தேசிய பாடசாலை)அதிபராக கடந்த 12082021 அன்று பொறுப்பேற்றுள்ளார் இக்கல்லூரியின் பழைய மாணவரும்,பிரதி அதிபரும், முதலாம் தர அதிபருமான முகம்மது முஸ்தபா ஹிர்பஹான். மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் மூன்று வருடங்கள் அதிபராக இவர் கடமையாற்றியுள்ளார்.

இவர் மருதமுனையைச் சேர்ந்த முகம்மது முஸ்தபா உம்மு ஹபிழா தம்பதியின் இரண்டாவது பிள்ளையாவார்.ஆரம்பக் கல்வி முதல் க.பொ.த உயர்தரம் வரை மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியில் கற்று பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கலைமாணி பட்டப்படிப்பை 1994 ஆம் ஆண்டு பூர்த்தி செய்தார்.

1994ஆம் ஆண்டு நிந்தவூர் பிரதேச செயலகத்தில் சில காலம் கடமையாற்றி பின்னர் 1994.10.03 ஆம் திகதி அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் முதல் நியமனம் பெற்றார். பின்னர் 19951004 ஆம் திகதி ஒலுவில் அல்ஹம்றா மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று கடமையாற்றி வந்த நிலையில், 1997.01.10ஆம் திகதி மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார்.



அங்கு அளவையியலும் விஞ்ஞான முறையும் எனும் பாடத்தை உயர்தர மாணவர்களுக்கு கற்பித்து வந்தார். 2004ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா விருதைப் பெற்றுக் கொண்டார். 'அகவிழி' எனும் கல்விச் சஞ்சிகையில் கல்வி தொடர்பான ஆக்கங்களை எழுதி வருகின்றார்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் சிறப்புச் சித்தியும், கணனி விஞ்ஞான டிப்ளோமாவில் சிறப்புச் சித்தியையும், கல்வி முதுமாணி கற்கை நெறியையும், பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறியையும் பூர்த்தி செய்துள்ளார்.

கணனித் துறையில் பல கற்கை நெறிகளையும் பயிற்சி நெறிகளையும் பூர்த்தி செய்து அல்மனார் மத்திய கல்லூரியின் கணனிப் பிரிவுக்குப் பொறுப்பாகவிருந்தார். 2008 ஆம் ஆண்டில் இலங்கை அதிபர் சேவையில் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டு மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றினார்.

இந்த நிலையில் நிலையில் 2010.02.10 ஆம் SLPS2 இற்கு உள்வாங்கப்பட்டார். 2016.02.10 ஆம் திகதி அதிபர் சேவை தரம்1 இற்கு பதவி உயர்வு பெற்றுக் கொண்டார். 2016.08.13ஆம் திகதி மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரிக்கு இடமாற்றத்தில் சென்று அங்கு பிரதி அதிபராக கடமையாற்றி வந்தார்.இந்த நிலையில் இங்கு அதிபராகக் கடமையாற்றிய ஏ.எல் சக்காப் ஓய்வு பெற்றுச் செல்வதால் அக்கல்லூரியின் அதிபராக பொறுப்பை ஏற்றுக் கொண்டார் எம்.எம்.ஹிர்பஹான்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# அனைத்து சவால்களையும் முறியடித்து பேராதனை பல்கலைக்கழகத்தை முன்னேற்ற பாதையில் இட்டுச் செல்வேன்

## புதிய உபவேந்தர் பேராசிரியர் லமாவங்ஷ தினகரனுக்கு பேட்டி

பேராதனை பல்கலைக்கழகத்தின் 22 வது உபவேந்தராக சிரேஷ்ட மருத்துவப் பேராசிரியர் ஏ.டி. லமாவங்ஷ பதவியேற்றுக் கொண்டுள்ளார். இவர் ஒரு விசேட மருத்துவ சத்திரசிகிச்சை நிபுணர் ஆவார்.

'பேராதனை பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதில் ஏற்படுகின்ற அனைத்துவித சவால்களையும் முறியடித்து, வெற்றிகரமான தீர்மானங்களை மேற்கொள்வதில் நான் மனம் தளராது உறுதியாக இருக்கிறேன்' எனத் தெரிவிக்கும் புதிய உபவேந்தர், அவ்வாறான சவால்களுக்கு ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை எனவும் சுட்டிக் காட்டுகிறார்.

தற்போதைய தீவிர கொவிட் தொற்றுதலுக்கு மத்தியில் தமது பதவிக் காலத்தில் பல்கலைக்கழக முன்னெடுப்புகளை எவ்வாறு மேற்கொள்ளவுள்ளார் என்பது பற்றி தனது காரியாலயத்தில் வைத்து தினகரனுக்கு நேர்காணலொன்றை அவர் வழங்கினார்.

கேள்வி: மருத்துவத்துறையில் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ள நீங்கள் ஒரு பல்கலைக்கழகத்தின் தலைமைப் பதவியில் பணியாற்ற முன்வந்துள்ளீர்கள். உங்களைப் பற்றிய விபரங்களைக் கூற முடியுமா?

பதில்: முதலில் இந்த மாபெரும் நிறுவகத்தை வழிநடத்த என்னை நியமித்ததற்காக பேரவை, பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பணிவு மற்றும் சேவை நோக்குடன் இந்தப் பொறுப்பை ஏற்க நான் என்னை முழுமையாக அர்ப்பணிக்கிறேன். எனது ஆரம்பக் கல்வியை மாத்தறை, ஹக்மன, வட்டதொல கனிஷ்ட வித்தியாலயம், தெய்யந்தர மத்திய மகா வித்தியாலயம் மற்றும் வீரகெட்டிய ராஜபக்ஷ வித்தியாலயம் ஆகியவற்றில் பெற்றுக் கொண்ட நான், ருகுணு பல்கலைக்கழகத்தில் எனது வைத்தியப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டேன். வைத்தியத் துறையில் 36 வருட காலம் சேவையில் இருந்துள்ளேன். கடந்த 1991 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழக பேராசிரியராக இருக்கும் பொழுது வயம்ப பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் முதல் பீடாதிபதியாகவும், அதன் பின்னர் பேராதனை பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் பீடாதிபதியாகவும் இருந்துள்ளேன்.

கேள்வி: வைத்தியத் துறையில் பல்வேறு நிபுணத்துவம் பெற்றுள்ள நீங்கள், உங்களின் வைத்திய சேவை அனுபவம் குறித்து கூற முடியுமா?.

பதில்: எம்.பி.பி.எஸ், எம்.எஸ்.சிறப்பு, பி.எச்.டி,எப்.ஆர்.சீ.எஸ் போன்ற பட்டங்களை நான் பெற்றுள்ளதுடன், எமது நாடு பெருமை கொள்ளும் அளவுக்கு வைத்தியத் துறையூடாக பல சாதனைகள் புரிந்துள்ளேன். அதாவது, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள் மற்றும் சிறுவர் முதல் வயோதிபர் வரையும் பாரதூரமான வெட்டுக்காயங்களுடன் துண்டாடப்பட்ட உடல் உறுப்புகளை பொருத்துவதற்கான வெற்றிகரமான அறுவைச் சிகிச்சைகள் என்னால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



கேள்வி: பல்கலைக்கழகம் மற்றும் மருத்துவத் துறைகளுக்கு அப்பால் கடல் கடந்த நாடுகளிலும் நீங்கள் சேவைகள் புரிந்துள்ளீர்கள் அல்லவா?

பதில்: ரஷ்ய நாட்டில் நான் தூதுவராக இருந்துள்ளமை பற்றித்தான் கேட்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், ரஷ்யாவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தேன். இக்காலப் பகுதியில், இலங்கை மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளுக்கிடையிலும் நட்புறவை வளர்க்க அயராது பாடுபட்டு, ஆக்கபூர்வமான பணிகளை மேற் கொண்டிருந்தேன்.

### ஆற்றல் மிக்க பட்டதாரிகள் உருவாக்கப்பட வேண்டும்

கேள்வி: இவ்வாறான நிலையில் நீங்கள் பேராதனை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமனம் பெற ஏதும் விசேட காரணங்கள் உள்ளனவா?

பதில்: ஒரு கல்வியாளர், அறுவைச் சிகிச்சை நிபுணர் மற்றும் ஒரு தொழில்வாண்மையாளராக, நிபுணராக எனது திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள எனக்கு நிறைய வாய்ப்புகளை அளித்த இந்த ஆசீர்வதிக்கப்பட்ட இடத்திற்கு நான் திரும்பி வருவது மிகவும் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. அந்த வகையில் எதிர்வரும் 3 வருடங்களுக்கு இப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கடமையை பொறுப்பேற்றுள்ளேன்..

கேள்வி: நாட்டில் தற்பொழுது பாரிய அச்சுறுத்தலாக, இருந்து வரும் கொவிட் தொற்று பரவல் தங்களுக்குரிய பல்கலைக்கழக பணிகளை முன்னெடுத்து செல்வதற்கு ஒரு சவாலாக இருப்பதாக நீங்கள் நினைக்கவில்லையா?

பதில்: ஆம், நீங்கள் கூறுவது போன்று அது பெரும் சவாலாகத்தான் இருக்கின்றது. இருந்தாலும் அதனையும் தாண்டி பல்கலைக்கழகத்தை உலகளாவிய தரத்துக்கு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற உத்வேகம் எனக்கு உள்ளது. எதிர்வரும்ஆண்டுகளில் இப்பல்கலைக்கழகத்தின் முழுமையான வளங்களை முறையாகப் பயன்படுத்தினால் இப்பல்கலைக்கழகம் மென்மேலும் முன்னேறிச் செல்லும் என்பது எனது நம்பிக்கை ஆகும். அந்த வகையில் அடுத்த மூன்று ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைப்பதற்காக கிடைக்கக் கூடிய அனைத்து வழிமுறைகளையும் வளங்களையும் திரட்டுவேன் என பேரவைக்கு நான் உறுதியளித்துள்ளேன்.

மேலும், இன்றைய காலகட்டத்தில் பல்கலைக்கழகம் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பல்கலைக்கழகத்தின்முக்கிய செயற்பாடாக திறமையான பட்டதாரிகளை நாம் உருவாக்க வேண்டும். இதனையே சமூகம் எதிர்பார்க்கிறது. இந்த வகையில் பட்டதாரிகள் திறமையானவர்களாக இருப்பதை உறுதி செய்வது எமது முதன்மையான கடமையாகும். அது மட்டுமல்லாமல், நிகழ்காலமும் எதிர்காலமும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் மூலம் அப்பட்டதாரிகள் தேசிய அபிவிருத்தி மற்றும் உலகளாவிய சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பவர்களாகவும், பல்துறைகளிலும் சிறப்பான தொழில் வல்லுநர்களாகவும் ஆவார்கள் என்பதை உறுதி செய்வதும் கூட நமது முதன்மையான கடமையாகும். கொவிட் தொற்று காரணமாக பல்கலைக்கழக செயற்பாடுகள் கடுமையான சவால்களுக்கு உள்ளாகின. இருந்த போதிலும் பேராதனைப் பல்கலைக்கழகம் இந்த சவாலுக்குஎதிராக துணிச்சலுடன் செயற்பட்டுள்ளது. அந்த வகையில் பல்கலைக்கழகத்தை நிர்வகித்து வந்த முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் உபுல் திஸாநாயக்கவின் அர்ப்பணிப்பை நான் பாராட்டுகிறேன்.

இப்பல்கலைக்கழகத்தினால் புதிதாக உருவாக்கப்பட்ட முகக்கவசம் ஒரு முக்கிய உதாரணம் ஆகிறது. மேலும், 'அவசரகால தொலைநிலைக் கற்பித்தலை' உள்வாங்கிச் செயற்படுவதில் பல்கலைக்கழகம் முன்னணியில் உள்ளது. அத்துடன் தற்போது மிகவும் சவாலான விடயமான இணையவழி மதிப்பீடுகளை மேற்கொள்ளும் தளத்துக்கு பல்கலைக்கழகம் நகர்ந்துள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும். ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு போன்ற பல்கலைக்கழகங்களின் வளர்ச்சிக்கான அத்தியாவசிய கூறுகள் உள்ளிட்ட பலவற்றை பல்கலைக்கழகத்தின் நீண்ட கால மூடல் தாமதப்படுத்தி உள்ளதும் மாணவர் அனுமதி, பட்டப்படிப்பு மற்றும் பட்டமளிப்பு ஆகியவை தாமதமாகின. ஒரு உறுதியானஅமைப்பாக, இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டறியக் கூடிய வகையில் பேராதனை பல்கலைக்கழகம் திறன் கொண்டுள்ளதென நான் நம்புகிறேன்.

கேள்வி: பல்கலைக்கழக எதிர்கால முன்னேற்றம் குறித்து விசேட வேலைத் திட்டங்கள் உங்களிடம் உள்ளனவா?

பதில்: ஆம், சில வாரங்களுக்கு முன்பு இந்தப் பல்கலைக்கழகத்தில் ஓகஸ்ட் மாதத்துக்கான பேரவைக் கூட்டத்தில் நான் சில முக்கியமான சீர்திருத்தங்கள் தொடர்பில் உறுதியளித்தேன்.



எம்.ஏ.அமீனுல்லா...

# குழந்தைகளில் சிலருக்கு காய்ச்சல் வேளையில் வலிப்பு வருவது ஏன்?



குழந்தைகள் பெற்றோரின் ஈடு இணையற்ற செல்வங்கள். அச்செல்வங்களுக்கு நோய் நொடிகள் ஏற்படக் கூடாது என்பதில் பெற்றோர் எப்போதும் கண்ணுங் கருத்துமாக இருப்பார்கள். அவர்களுக்கு சிறு காய்ச்சல் ஏற்பட்டால் கூட தாய் தந்தையர் பரிதவித்துப் போய் விடுவார்கள். குழந்தைகளில் சிலருக்கு காய்ச்சல் ஏற்படும் போது காய்ச்சலுடன் வலிப்பு (Febrile seizures) ஏற்படுவதை நாம் கண்டிருக்கின்றோம்.

காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படும் குழந்தைகளின் பெற்றோருக்கு தம் குழந்தைகள் பற்றிய அச்சமும் அவர்களின் எதிர்காலம் பற்றி ஒருவித கவலையும் எப்போதும் இருக்கும். பெற்றோர் இதன் காரணமாக கடும் மனஅழுத்தத்துடன் காணப்படுவார்கள். எனவே இக்கட்டுரையின் நோக்கம் பெற்றோரின் சந்தேகங்களையும் வினாக்களையும் தீர்த்து அவர்களுக்கு உண்மையை தெரிய வைப்பதேயாகும்.

காய்ச்சலுடன் ஏற்படும் வலிப்பு பொதுவாக 6 மாதத்திற்கும் 5 வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளுக்கு, காய்ச்சல் ஆரம்பித்து முதல் 24 மணித்தியாலங்களுக்குள் அல்லது 48 மணி நேரத்திற்குள் பொதுவாக ஏற்படக் கூடும். ஆனால் காய்ச்சல் ஏற்படும் எல்லாப் பிள்ளைகளுக்கும் வலிப்பு ஏற்படுவதில்லை. சிறு பிள்ளைகளில் 3 வீதம் ஆனோருக்கு மட்டுமே இவ்வாறு காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படக் கூடிய சாத்தியம் உண்டு. கடுங்காய்ச்சலின் போது ஏற்படும் இந்த வலிப்பு சில வேளைகளில் மிதமான காய்ச்சலின் போது கூட ஏற்படலாம் என்பதை பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் காய்ச்சலுடன் கூடிய வலிப்பின் போது முழு உடலும் அல்லது ஒருபக்க அவயங்கள் மட்டும் அசைவுறுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

காய்ச்சலின் போது வலிப்பு ஏன் பிள்ளைகளில் ஏற்படுகின்றது என்னும் கேள்வி அநேகமானோரின் மனங்களிலே எழவாம். குழந்தைகளுக்கு பொதுவாக வைரஸ் காய்ச்சல் ஏற்படும் போதுதான் வலிப்பு ஏற்படுகிறது. ஆனால் அதைத் தவிர ஏனைய காய்ச்சல்களின் போதும் வலிப்பு ஏற்படக் கூடும். பிள்ளைகளிலே மூளை என்பது இன்னும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் ஓர் உடல் உறுப்பு ஆகும். பெரியவர்களின் மூளையின் அளவிற்கு அதன் தொழிற்பாடு முதிர்ச்சியடைந்து இருப்பதில்லை. எனவே பிள்ளைகளில் காய்ச்சலின் போது உடல் வெப்பநிலை அதிகரிக்கும் போது மூளையில் ஏற்படும் ஒருசில இரசாயன மாற்றங்கள் காரணமாக உடல் தசைகளில் ஏற்படும் தொடர்ச்சியான துடிப்பே வலிப்பாக வெளிப்படுகின்றது.

காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படுவதில் மரபணு காரணிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனால்தான் இந்நோய்த்தன்மை ஓர் குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைப் பாதிக்கிறது. உதாரணமாக பெற்றோரில் ஒருவருக்கு சிறுவயதில் காய்ச்சலுடன் வலிப்பு ஏற்பட்டிருந்தால், அவர்களது குழந்தைகளுக்கு இந்நோய் நிலைமை ஏற்படக் கூடிய சாத்தியம் மிக அதிகம். அதேபோன்று சகோதர சகோதரிகளில் ஒருவருக்கு காய்ச்சலுடன் வலிப்பு ஏற்பட்டு இருக்கும் எனின் மற்றையவர்களுக்கு அது வரக் கூடிய நிகழ்த்தகவு அதிகமாகும்.

காய்ச்சலுடன் ஏற்படும் வலிப்பு என்பது காக்கை வலிப்பு நோய் (Epilepsy) அல்ல என்பதை பெற்றோர் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். காய்ச்சலுடனான வலிப்பினால் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு எவ்வித பாதிப்புக்களோ அல்லது பின்விளைவுகளோ ஏற்படுவதில்லை. சிறுவர்களின் கற்றல் திறமைக்கும் வளர்ச்சிப் படிகளுக்கும் அது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. எனவே காக்கை வலிப்பை போன்று வலிப்பினைக் கட்டுப்படுத்தும் விசேடமான மருந்துகள் (antiepileptic drugs) காய்ச்சலுடனான வலிப்பில் பாவிக்கப்படுவதில்லை.

### பெற்றோர் உடனடியாக செய்ய வேண்டிய முதலுதவி

மேலும் 5 வயதைக் கடந்த பின் காய்ச்சலுடனான வலிப்பு ஏற்படும் பிள்ளைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டாலும் வலிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லை என்பது மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு விடயமாகும். ஆகவே காய்ச்சல் வலிப்பினால் நீண்ட கால பாதிப்புகள் ஏற்படும் என பெற்றோர் எள்ளவும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.



காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படும் குழந்தைகளைப் பெற்றோர் எப்படி பராமரிக்க வேண்டும்? நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இந்த வலிப்பானது காய்ச்சல் ஏற்பட்ட முதல் 48 மணித்தியாலங்களுக்குள்ளே மட்டுமே ஏற்படும். எனவே குழந்தைக்கு காய்ச்சல் இருப்பது போன்று சந்தேகம் ஏற்பட்டால் சரியானதொரு உடல் வெப்பமானியைப் பாவித்து வெப்பநிலையை அறிந்து கொள்ள வேண்டும்.

காய்ச்சல் இருப்பின், உடல் நிலைக்கேற்ப அல்லது வைத்தியர் அறிவுறுத்தலுக்கமைய 'பரசிட்டமோல்' மருந்தினைக் குழந்தைக்கு வழங்க வேண்டும். உடல் சூட்டைக் குறைக்க சில பெற்றோர் ஈரத்துணியினால் குழந்தையின் உடலைத் துடைப்பதைப் வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். எனினும் இச்செயலானது வலிப்பு ஏற்படுவதைத் தவிர்க்கும் என இதுவரை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவில்லை.

குழந்தைக்கு வலிப்பு ஏற்பட்டவுடன் அவர்களை இடப்பக்கமாக சரித்து படுக்க வைத்து அவர்கள் வாயிலிருந்து உமிழ்நீர் வெளியேறுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும். குழந்தையின் வாயினுள் ஏதேனும் பொருட்களையோ அல்லது விரல்களையோ உட்செலுத்தக் கூடாது. கைகளில் கூர்மையான பொருட்கள் வழங்குவதையும் தவிர்க்க வேண்டும். இத்தகைய செயல்கள் மூலம் காயங்களையும், உயிராபத்தையும் தவிர்க்கலாம்.

ஐந்து நிமிடங்களுக்கு மேல் வலிப்பு நீடிக்குமாயின் குழந்தையை பக்கவாட்டில் சரித்த வண்ணம் அருகிலுள்ள வைத்தியரிடமோ அல்லது வைத்தியசாலைக்கோ எடுத்துச் செல்ல வேண்டும். வலிப்பு ஓரிரு நிமிடங்களில் குணமடைந்தால் கூட வைத்தியரை அணுகி ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

காய்ச்சலுடன் ஏற்படும் வலிப்பு என்பது பெற்றோரையும், குடும்பத்தாரையும் பொறுத்தவரையில் மிகவும் பயங்கரமானதும், சவால் மிகுந்ததுமான ஒரு அனுபவமாகும். ஆனால் இந்நோய்த் தன்மையின் அடிப்படைக் காரணங்கள் என்ன என்பதையும், அது பிள்ளையின் மூளை வளர்ச்சிக்கு எவ்வித பாதிப்புகளையும் ஏற்படுத்தாது என்ற உண்மையையும் பெற்றோர் விளங்கிக் கொண்டால் இச்சவாலை முகங்கொடுக்க அது பெருமளவில் ஒத்தாசையாக அமையும்.

வலிப்பு ஏற்படும் போது மேற்கொள்ள வேண்டிய முதலுதவிகள் குறித்து அறிந்து வைத்திருப்பது பெற்றோருக்கும், குடும்பத்தாருக்கும் இன்றியமையாததாகும். மேலும் குறிப்பிட்ட வயதைத் தாண்டிய பின்னர் காய்ச்சலுடனான வலிப்பு ஏற்படக் கூடிய அபாயம் தானாகவே இல்லாது போய் விடும் என்பதும் மகிழ்ச்சிகரமான விடயமாகும். எனவே காய்ச்சலுடன் ஏற்படும் வலிப்பைப் பற்றி நன்கு கற்றறிந்து கொண்டு பெற்றோர் தம் குழந்தைச் செல்வங்களை கண்ணுங் கருத்துமாக பராமரித்தல் அவசியம்.

### விரிவான விளக்கம் தருகின்றார் குழந்தை மருத்துவ நிபுணர் கிருஷ்ணபிரதீப்

டொக்டர் கிருஷ்ணபிரதீப்...
*(சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் குழந்தை மருத்துவ நிபுணர்)*
*பேராதனை போதனா வைத்தியசாலை*
*skpradeep2000@gmail.com*

# அறிவுக்கண் திறக்கும் நூலகமாக வாழ்ந்த ஹபீபுர் ரஹ்மான் ஆசிரியர்

மாணவர்களால் அன்பாக 'கணக்கு ஸேர்' என்று அழைக்கப்படும் வெலிகமையை பிறப்பிடமாகக் கொண்ட கலாபூசணம் எம். ஏ. ஹபீபுர் ரஹ்மான் ஆசிரியர் காலமானார். எம். ஏ. ஹபீபுர் ரஹ்மான் என்ற பெயர் இலக்கிய உலகுக்கு மிகவும் பரிச்சயமானது. இலங்கையின் நாளேடுகளில் கவிதை, சிறுகதை, கட்டுரைகளை எழுதி வந்த இவர் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

'பேரழகும் பேரறிவும் நிறைந்த நபி யூஸுப் அலைஹிஸ்ஸலாம்' என்ற அவரின் புத்தக வெளியீட்டு விழாவின் போது ஹபீபுர் ரஹ்மான் ஆசிரியர் பற்றிய பல விடயங்களை அறிய முடிந்தது. இஸ்லாமிய மார்க்க ஞானமும் எழுத்தாற்றலும் ஒன்றிணைந்த அற்புதமான கலைஞர் அவர். அவரின் குடும்பமே ஒரு ஆலிம் பரம்பரையில் வந்ததாகும். தென்னகத்தில் புகழ் பூத்த மார்க்க அறிஞர்களில் ஒருவராக விளங்கிய மர்ஹூம் அஜ்வாத் உஸ்தாத் இவரின் தாய் மாமனார் ஆவர். ஹபீபுர் ரஹ்மான் ஆசிரியரின் தந்தையாகிய மர்ஹூம் அத்தாஉல்லா மௌலவி அவர்களும் தலைசிறந்த மார்க்க அறிஞர் ஆவார்.

இவர்களின் மார்க்க ஞானத்தில் ஊன்றி வளர்ந்த ஆசிரியர் மார்க்க சம்பந்தமான இன்னும் பல அரிய நூல்களை வெளியிட்டுள்ளார். அவற்றில் அருள்மழை பொழியும் ரமழான், ஸூரத்துல் கஹ்ப் உணர்த்தும் உண்மைகள், பாலைவனத்தில் ஒரு சோலைவனம் மற்றும் அல்குர்ஆன் அல் ஹதீஸ் அடிப்படையில் சொத்துப் பங்கீடு ( பாகப் பிரிவினை) எனும் நூல்களை குறிப்பிட முடியும். 'மண்ணூரின் மைந்தர்கள்' என்ற நூலின் மூலம் வெலிகமையில் வாழ்ந்த பெரியார்களையும் அறிஞர்களையும், கலைஞர்களையும், மார்க்க அறிஞர்களையும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்துள்ளார். இவர் தினமும் பத்திரிகைகள் படிக்கக் கூடியவராகவும் அவற்றில் வரும் முக்கியமான தகவல்களை சேர்த்து மற்றவர்களுக்கு வழங்கக் கூடியவராகவும் இருந்தார். தென் மாகாணத்தின் அரிய பல தகவல்களை ஆவணப்படுத்தி வைத்துள்ளார்.

### சமூகப்பணியாளனின் மறைவு பேரிழப்பு

ஹபீபுர் ரஹ்மான் ஆசிரியர் மாத்தறை தாருல் உலூமில் முதன் முதலில் கற்பித்தார். அதன் பின்னர் காலி கட்டுகொடை முஸ்லிம் ஆண்கள் வித்தியாலயத்தில் வெகு காலமாக கற்பித்தார்.

காலியில் கடமையாற்றிய காலத்தில் சீனங்கொல்லையில் அமைந்துள்ள தென்னிலங்கை இஸ்லாமிய செயலகத்தை தனது பொறுப்பில் எடுத்து நடத்தி அதனூடாக பல ஆக்கபூர்வமான சேவைகளை நிறைவேற்றினார். ஒரு நூலகத்தையும் நடத்தினார். அத்தோடு இளைஞர் முன்னணியை வழிநடத்தி தொழில்நுட்ப கற்கை நெறிகள், கணினி பயிற்சி நெறிகள், பெண்களுக்கு தேவையான பல கற்கை நெறிகளை அறிமுகம் செய்து அதற்கான வளவாளர்களை அழைத்து வந்து பரிபாலனம் செய்தவர் இவர். .

ஆசிரியர் தொழிலுக்கு ஓய்வு கொடுத்து விட்டு தனது விருப்பத்திற்குரிய புத்தகங்களோடு ஒரு வியாபாரத்தைத் தொடங்கினார். அஹதிய்யா பாடசாலை பரிசளிப்பு வைபவங்களின் போது பிள்ளைகளுக்கான புத்தகப் பரிசு வழங்க முடிவெடுக்கும் போது நினைவுக்கு வருபவர் ஹபீபுர் ரஹ்மான் ஆசிரியர். புத்தகப் பட்டியலை அவரின் கைக்கு கொடுத்தால் போதும் அடுத்த ஓரிரண்டு நாட்களில் தேவையான புத்தகங்கள் வீடு தேடி வந்து விடும்.

பின்னர் மார்க்க விடயங்களிலும் சமூக நல சேவைகளிலும் முற்றுமுழுதாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். வெலிகமை அல் இஹ்ஸான் நலன்புரி இயக்கம் இதற்கான வாய்ப்பை அவருக்குக் கொடுத்தது. அவர் நடத்திச் சென்ற நூலகம் ஒரு எடுத்துக்காட்டாகும். ஒவ்வொரு பள்ளிவாசலிலும் ஒவ்வொரு நூலகம் இருக்க வேண்டும் என்பதை தெரியப்படுத்தினார்.

வெலிகமையின் பல சமூகநலப் பணிகளுக்கு வித்திட்ட மாபெரும் ஆளுமை நிறைந்த மனிதர் எம்மை விட்டும் பிரிந்து சென்று விட்டார்.

கலைமணாளன்...

தமிழகத்தில் முதல் முறை: விளாத்திக்குளம் தாலுகா

# மருத்துவமனையில் ரூ.42 இலட்சத்தில் அவசர சிகிச்சைக் கட்டில்கள் அமைப்பு



தமிழகத்தில் முதல் முறையாக விளாத்திக்குளம் தாலுகா அரசு மருத்துவமனையில் ரூ.42 இலட்சத்தில் 22 ஆக்சிஜன் சிலிண்டர் மற்றும் பிராணவாயு அறை அமைக்கப்பட்டது.

விளாத்திக்குளத்தில் உள்ள அரசு மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு ஏகம் பவுண்டேசன் சமூகப் பொறுப்பு நிதி ரூ.38 லட்சம் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் ரூ.4.09 லட்சம் செலவில் பிராணவாயுக் கூடம், 60 ஆக்சிஜன் படுக்கைகள் மற்றும் 22 டி டைப் ஆக்சிஜன் சிலிண்டர்கள், 60 படுக்கைகளுக்கான உறிஞ்சு குழாய், பாதுகாப்பு அலாரம் ஆகியவை ஒவ்வொரு தளத்திலும் உள்ள உள்நோயாளிகள் பிரிவில் பொருத்தப்பட்டுள்ளன. இதில் ஒவ்வொரு சிலிண்டரும் 7 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்டதாகும்.

மேலும், ஏகம் பவுண்டேசன் சார்பில் ரிமோட் கன்ட்ரோலுடன் கூடிய 6 தீவிர சிகிச்சை கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சியர் கி.செந்தில் ராஜ் தலைமை வகித்தார். தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கலந்துகொண்டு, அரசு மருத்துவமனைக்கு 22 எண்ணிக்கை கொண்ட ஆக்சிஜன் சிலிண்டர் மற்றும் பிராணவாயு அறையைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

# தபால் சேவைகள் முடங்கும் அபாயம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா தலைமை தபால் நிலையத்தில் தபால்கள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா பரவல் காரணமாக தொடர்ந்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் கொழும்பில் இருந்து வடமாகணத்திற்கு அனுப்பப்படும் தபால்கள் அநுராதபுரம் மாவட்டத்தில் பெற்று கொள்ளப்பட்டு வருகின்றது.

குறித்த தபால்கள் அநுராதபுரத்திற்கு அதிகாலை 2 மணிக்கு கொண்டு வரப்படுகின்றது. அவற்றை யாழ். தபால் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனத்தில் எடுத்து வரப்பட்டு வவுனியாவிற்கு வழங்கப்படுகின்றது. இதனால் காலதாமதம் ஏற்படுவதுடன். காலை 6 மணியளவிலேயே வவுனியா தபால் அலுவலகத்திற்கு கடிதங்கள் கிடைப்பதாக குற்றம் சாட்டப்படுகின்றது. இவ்வாறு காலதாமதம் ஏற்படுவதால் தபால் ஊழியர்களிற்கு வேலைப்பளு அதிகமாக காணப்படுவதுடன், பொது மக்களிற்கு கிடைக்க வேண்டிய தபால்களும் உரியநேரத்தில் வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளும் வாகனத்தில் இடவசதி காணாமையினால் அநுராதபுரத்திலேயே தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்டது போல வவுனியா தபால் அலுவலகத்திற்கு சொந்தமான வாகனத்தினை அனுப்பி அநுராதபுரத்தில் உள்ள தபால்களை பெற்றுக் கொள்வதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வவுனியா தபால் திணைக்கள ஊழியர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மாத்தறை மாவட்டத்தில் 10,867 கொரோனா தொற்றாளர்கள்

( வெலிகம தினகரன் நிருபர் )

மாத்தறை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குற்பட்ட 17 பிரதேசங்களில் புதிதாக 479 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனம் காணப்பட்டதை அடுத்து மாத்தறை மாவட்டத்தில் 10867 ஆக தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இவற்றுள் மாத்தறை மாநகர எல்லைப் பிரதேசங்கள், வெலிகம, திக்குவல்லை, வெலிபிடிய, கொடபொல, அகுரஸ்ஸ, மாலிம்பட மற்றும் திஹகொட போன்ற பிரதேசங்களிலேயே அதிகமான தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார வழிமுறைகளை முறையாகவும் கண்டிப்பாகவும் பின்பற்றுவதன் மூலம் இவ் அதிகரிப்பை குறைக்க முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

## சிறுவர்களுக்கு...

சிறுவர்கள் லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார்கள் என்றும் அவர் அவர் கூறினார்.

இதேவேளை, பெற்றோர்கள் கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொண்டாலும் கூட, தமது குழந்தைகளின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்துவதுடன் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## நல்ல தீர்வு கிடைத்தால்...

பாதிக்கப்பட்டுள்ளன. எனவே அரசாங்கம் இதயசுத்தியுடன் எமது போராட்டத்திற்கான தீர்வினை முன்வைக்க வேண்டும். சரியான தீர்வு பெறப்பட்டால் அடுத்த தினமே ஆசிரியர்களால் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

மேலும் சாதகமான முடிவு பெறப்பட்டு எமது போராட்டம் வெற்றி பெறும் வரை அதிபர் ஆசிரியர்கள் இப்போராட்டத்திலிருந்து பின்வாங்காது தொடர்ச்சியாக போராட்டத்தை எம்முடன் இணைந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்காக தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் (18) அமைச்சரவை உப குழு அதிபர் ஆசிரியர் ஒன்றிணைந்த தொழிற்சங்க குழுவுடன் பேச்சுவார்த்தை ஒன்றினை நடத்தியது. அதில் அமைச்சரவை உப குழு நிதி அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தியதன் பின்னர் அவர்களுடைய யோசனையை தயாரிப்பதாக தெரிவித்தனர். சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கையாளும் ஒரு அணுகுமுறையாகவே இவ் அமைச்சரவை உப குழு அமைந்துள்ளது.

இந்நிலையில் அமைச்சரவை மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பாக கல்வி அமைச்சர் மாற்றப்பட்டுள்ளமையானது எமது பிரச்சினைக்கு தீர்வு காண்பதை இழுத்தடிக்கும் முயற்சியாகவே தோன்றுகின்றது. எனினும் நாடு முழுவதும் இடம்பெறுகின்ற அனைவராலும் அறியப்பட்ட எமது போராட்டம் பற்றி புதிய அமைச்சருக்கு மீண்டும் விளக்க வேண்டிய அவசியம் இல்லை.

## அமைச்சரவை உப குழுவின்...

தெரிவித்துள்ளார். ஆசிரிய தொழிற்சங்கங்களின் வேண்டுகோளுக்கிணங்க அமைச்சரவை உபகுழு ஆசிரியர் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்களுடன் இறுதிப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள நிலையில் அது தொடர்பில் இன்றைய தினம் நிதியமைச்சர் பெசில் ராஜபக்சவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு இறுதி அறிக்கையை தயார் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க அந்த அறிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, தமது சம்பள முரண்பாட்டு நெருக்கடிக்கு அரசாங்கம் உரிய தீர்வை பெற்றுத்தருமானால் தொழிற்சங்க நடவடிக்கைகள் நிறுத்தப்படும் என ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க ஆகியோர் தெரிவித்துள்ளனர். அதேவேளை மேற்படி ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் யோசனைகள் உள்ளடங்கிய அறிக்கையை தயாரிக்கும் வகையிலான பேச்சுவார்த்தையொன்று அமைச்சரவை உப குழுவின் அங்கத்தினர்களுக்கிடையில் நேற்று நடைபெற்றுள்ளது. ஆசிரியர் அதிபர்கள் தொழிற்சங்கங்கள் கடந்தகால ஒரு மாத காலத்திற்கு மேல் பணி பகிஷ்கரிப்பபை மேற்கொண்டுவருகின்றனர். தமது சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு காணும் வகையில் அவர்கள் கோரிக்கைகளை முன்வைத்து ஒன்லைன் மூலமான கற்பித்தல் நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளதுடன் அதனால் மாணவர்கள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## ஆப்கானில் ஷரீஅத்...

அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறியபின், அங்கிருக்கும் பெரும்பாலான மாகாணங்களை தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். தலைநகர் காபூலில் தலிபான்கள் நுழைந்ததை அறிந்த ஜனாதிபதி அஷ்ரப் கனி ஐக்கிய அரபு அமீரகத்துக்கு தப்பி ஓடிவிட்டார்.

காபூலில் ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றிய தலிபான்கள் ஆட்சி அமைக்கப்போவதாக அறிவித்துள்ளனர். கடந்த காலத்தில் தலிபான்கள் ஆட்சியில் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டன, கல்வி கற்கவும், வேலைக்குச் செலவும் அனுமதிக்கப்படவில்லை. ஆனால், ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியுள்ள தலிபான்கள் இந்தமுறை உலகிற்குத் தங்களை நவீன சிந்தனையுள்ளவர்களாகக் காட்டிக் கொள்ளவிரும்புவதாகவும்முஸ்லிம் சட்டங்களுக்கு உட்பட்டு பெண்களுக்கான உரிமைகள் வழங்கப்படும். சுகாதாரத்துறையில் பெண்கள் பணியாற்றலாம், கல்வி கற்கலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தலிபான்கள் ஆட்சிஅமைத்தால் யார் ஜனாதிபதியாக வரப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்து வருகிறது. ஆனால் தலிபான்களைப் பொறுத்தவரை உடனடியாக ஜனாதிபதி யாரும் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். முதலில் தலிபான் நிர்வாகக் குழு சேர்ந்து ஆப்கானிஸ்தானை நிர்வகிக்கும் என்று கூறப்படுகிறது. தலிபான்களில் மிக மூத்த தலைவரான ஹெய்பத்துல்லா அகுன்ஜதா நிர்வாகக்குழுவின் தலைவராக பொறுப்பேற்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே தலிபான் தீவிரவாத அமைப்பின் நிர்வாகிகள் ஒருவரான வஹீதுல்லாஹ் ஹஷிமி செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

“ ஆப்கானிஸ்தானில் ஜனநாயக ரீதியான ஆட்சிக்கு இடமில்லை. என்னவிதமான அரசியல்முறையை ஆப்கானிஸ்தானில் செயல்படுத்தலாம் என்றெல்லாம் நாங்கள் ஆலோசிக்கமாட்டோம். ஏனென்றால் எங்களுக்கு ஷரீஅத் சட்டம் இருக்கிறது. அதன்படி ஆட்சி நடக்கும். இங்கு ஜனநாயக முறைக்கு எந்த வழியும் இல்லை. ஏனென்றால் ஜனநாயக முறைக்கான எந்த அடிப்படைக் கட்டமைப்பும் இங்கு இல்லை. தலிபான் தலைவர்களுடான கூட்டம் இந்த வார இறுதியில் நடைபெற உள்ளது. அப்போது நாட்டை நிர்வாகம் செய்வது குறித்த முடிவுகள் எடுக்கப்படும்.

## அரச காணியை தனியார்...

இடம்பெயர்ந்து மீள்குடியேற முடியாத நிலையில் இருக்கும் அரச காணியை தனியார் அத்துமீறி ஆக்கிரமிப்பில் ஈடுபடுவதை வன்னி பாராளுமன்னற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் அவ் அரச காணிகளை அப்பகுதி காணியற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் பிரதேச செயலாளருக்கு பரிந்துரைத்துள்ளார்.

இவ் சம்பவம் தொடர்பாக பாதிபிற்குள்ளாகி வரும் மருதமடு கிராம மக்கள் தெரிவிக்கையில்

மன்னார் முசலி பிரதேசப் பிரிவிலுள்ள மருதமடு கிராம மக்கள் குடியிருந்த அரச காணியில் பிரச்சனை காலத்துக்கு முன்பு அதில் பரமப்பரையாக குடியிருந்து வாழ்ந்தனர்.

1990 ம் ஆண்டு இப் பகுதி மக்கள் இடம்பெயர்ந்து இந்தியாவுக்குச் சென்றிருந்த நிலையில் தற்பொழுது அயல் கிராமத்தவர்களின் ஓரிருவர் அவ் காணியை அத்துமீறி கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட தொடங்கியுள்ளனர்.

இவர்கள் அரச காணிக்கு அருகாமையிலுள்ள தங்கள் வயல் காணி உறுதியை காண்பித்துக் கொண்டு இந்த அரச காணியை தங்கள் வசமாக்குவதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது 14 ஏக்கர் காணியில் 16 குடும்பங்கள் வாழ்ந்த இந்த அரச காணிகளையே இவர்கள் அத்துமீறி தற்பொழுது கையகப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும்

அதாவது ஒருவர் இந்த மொத்தக் காணியை மூன்று பேருக்கு ரகசியமான முறையில் விற்பனை செய்துள்ளதாகவும் இவர்கள் இப்பொழுது இவ் காணிகளை அடைக்க முற்பட்டபோதே பிரச்சனை இவ் மக்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இடையே தலைதூக்கியுள்ளது.

அத்துடன் இந்த காணிப் பகுதியில் பெருந் தொகையான களிமண் குவித்து வைத்திருப்பதையும் சுட்டிக்காட்டி இவ் வாழ் மக்கள் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கவனத்துக்கும் கொண்டு சென்றனர்.

இதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் உடனடியாக அவ்விடத்துக்குச் சென்று சம்பவ இடங்களைப் பார்வையிட்டதுடன் முசலி பிரதேச காணி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலர்களையும் அவ்விடத்துக்கு அழைக்கப்பட்டு அவ் காணிகள் அரசாங்கத்துக்கு உரித்தானது என அடையாப்படுத்தப்பட்டிருந்த எல்லைகளையும் காண்பித்து உறுதிப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் மருதமடு பகுதியில் காணிகள் அற்ற நிலையில் இருக்கும் குடும்பங்களுக்கு அவைகளை பகிர்தளிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பிரதேச செயலாளரிடம் பரிந்துரைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நாட்டை மூன்று வாரங்களாவது...

அதாவுல்லா எம்.பி., தலைமையிலான கட்சிகள் உள்ளிட்ட 10 கட்சிகள் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மேற்படி கட்சிகள் ஏழு முக்கிய விடயங்களை யோசனைகளாக ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் சமர்ப்பித்துள்ளன.

'அபே ஜனபல' கட்சியின் தலைவர் அத்துரலிய ரத்தன தேரர், ஜனநாயக இடதுசாரி முன்னணி கட்சியின் தலைவர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, தேசிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச, பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் அமைச்சர் உதய கம்மன்பில, மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டிரான் அலஸ், இலங்கை மக்கள் கட்சியின் தலைவர் அசங்க நவரத்ன மற்றும் யுதுகம் தேசிய அமைப்பின் தலைவர் கெவிந்து குமாரதுங்க ஆகியோரினால் கையெழுத்திடப்பட்டு மேற்படி யோசனைகள் உள்ளடங்கிய கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

முன்னெப்போதும் இல்லாதவாறு நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ளதால் மரணமடையும் நபர்களின் எண்ணிக்கையும் அளவுக்கு மிஞ்சி அதிகரித்து செல்கின்றன என்பதை உங்களது கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

அது தொடர்பில் பல கட்சிகளின் தலைவர்களும் உங்களுக்கு யோசனைகளை முன்வைத்து வருகின்றோம்.

இக்காலகட்டத்தில் உங்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் நாடு முழுவதுமான தடுப்பூசி வேலைத்திட்டம் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்து வருகின்றமையை அறியமுடிகிறது. அதற்கான தலைமைத்துவத்தை வழங்கிவரும் உங்களுக்கும் சுகாதாரத் துறையினர் மற்றும் முப்படையினருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டில் 18 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்கும் நடவடிக்கைகள் நிறைவு பெறுவதற்கு ஆகக்குறைந்தது மேலும் ஆறு வாரங்கள் எடுக்கலாம். அதன் பிரதி பலன்கள் வெளிப்படுவதற்கு மேலும் ஒரு மாத காலம் எடுக்கலாம். இத்தகைய சுமார் 10 வார காலங்களுக்குள் நாடு பெரும் பாதிப்புக்குள்ளாகும் ஆபத்து நிலை உருவாகலாம்.

உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகம் இந்நாட்டின் உயர் மட்ட மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து தயாரித்துள்ள அறிக்கையை ஆய்வு செய்யும்போது அது தெளிவாகிறது.

அதற்கிணங்க எதிர்கால சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையிலேயே நாம் இத்தகைய யோசனைகளை முன் வைத்துள்ளோம்.

ஊடகங்கள் தெரிவிக்கும் கூற்றுப்படி நாட்டில் அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் திரிபுபடுத்தப்படுகின்றன. அதனோடு சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் எந்த பாரபட்சமுமின்றி தண்டனைக்கு உட்படுத்தி மக்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

நாம் முன்வைத்துள்ள யோசனைகளை நடைமுறைப்படுத்தும் போது தற்போது வெகு வேகமாக அதிகரித்து வரும் வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை குறைவடையும் அதேவேளை மரணங்களின் எண்ணிக்கை குறைவடைந்து மக்கள் மத்தியில் நிலவும் அச்சம் குறைவடையும். நோயாளிகள் எண்ணிக்கை குறைவடையும் போது சுகாதாரத் துறையினரின் சுமைகளும் குறைவடையும். அதனால் ஏற்படும் மக்களின் மன உறுதியானது நாட்டின் விரைவான பொருளாதார நடவடிக்கைகளுக்கும் பயனுள்ளதாக அமையுமென்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் மேற்படி 10 கட்சிகள் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஸ)

## மாணவர்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

என்றும் அழியாதது. அதுமட்டுமன்றி அறிவாற்றலானது தினம் தினம் புதுப்பிக்கப்படும். அதனால் தான் கல்வி அமைச்சுக்கு ஒரு உன்னதமான கௌரவம் உள்ளது.

டொனமூர் ஆளுநரின் காலத்தில் கல்விக்கு பெரும் தடைகள் ஏற்பட்டன. அந்த சந்தர்ப்பத்தில் அந்த அனைத்துத் தடைகளையும் வெற்றி கொண்டு சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா இலவசக் கல்வி சட்டத்தைக் கொண்டு வந்து ஒரே ஒரு வாக்கில் நிறைவேற்றினார். அன்று

நிறைவேற்றப்பட்ட அந்த சட்டம் மூலமே தற்போது புதிய புதிய வழிகள் மூலம் அறிவை பகிர்ந்து கொள்ளும் நிலை உருவாகியுள்ளது.

எமது நாட்டில் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநடுவில் விட்டுச் செல்கின்றனர். அத்தகைய மாணவர்களை சமூகத்தில் பலமுள்ள பிரஜைகளாக உருவாக்குவதற்கு பட்டப்பின் கல்வி நிறுவனங்களை உருவாக்குவது அவசியமாகும் என்றும் கல்வியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வில் முன்னாள் கல்வியமைச்சர் களான பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ், பந்துல குணவர்தன சுசில் பிரேமஜயந்த ஆகியோரும் கலந்துகொண்டுள்ளதுடன் அங்கு உரையாற்றிய அமைச்சர் ஜி எல் பீரிஸ் கடந்த இரண்டு வருடங்களாக கல்வித்துறையில் பெரும் சவால்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளதாகவும் சவால்களை வெற்றிக்கொண்டு பயனுள்ள பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஸ)

## ஒன்றுகூடல்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

நிலை இன்னமும் ஏற்படவில்லை. கடந்தகாலத்தில் சுகாதார வழிகாட்டல்களை மீறி திட்டமிட்டு மக்கள் ஒன்றுக்கூடல்கள் இடம்பெற்றன.

புதுவருடத்திற்குப் பின்னர் சுகாதார வழிகாட்டல்களை மீறியே அனைத்து ஒன்றுக்கூடல்களும் இடம்பெற்றிருந்தன. இந்த செயற்பாடுகளின் பிரதிபலனைதான் நாம் தற்போது கண்டுவருகிறோம். புதுவருடத்திற்கு கூடிய ஒன்றுக்கூடல் அல்லது அதற்கு பின்னர் கூடிய ஒன்றுகூடல் என வைரஸ{க்கு தெரியாது. அதேபோன்று இவை உரிமைகளுக்காக இடம்பெற்ற ஒன்றுகூடல் ஒன்றும் வைரஸ{க்குத் தெரியாது.

அதிக மக்கள் கூட்டங்கள் இருக்கும் இடத்தில் வைரஸ் இலகுவாக பரவலடைந்துவிடும். ஆகவே, இனிவரும் காலங்களில் சுகாதார வழிகாட்டல்களை இறுக்கமாக கடைப்பிடிப்பதன் ஊடாக கொவிட் தொற்றிலிருந்;து எம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்” என்றும் அவர் கூறினார்.

## டளஸ்... (03 ஆம் பக்கத் தொடர்)

வழிநடாத்தி மக்களின் அபிமானத்தை பெற்ற ஒருவராகவே நான் அவரை காண்கிறேன். அதேபோல் ஊடகத்துறையையும் திறம்பட வழிநடாத்துவார் என்பது எனது எதிர்பார்ப்பாகும். ஊடக சுதந்திரம், இன நல்லிணக்கம் என்பவற்றுக்கு அப்பால் ஊடகங்கள் சென்றுகொண்டிருக்கின்ற ஒரு காலகட்டத்தில் ஊடக அமைச்சராக டலஸ் அழகப்பெரும நியமிக்கப்பட்டுள்ளமை ஊடக சுதந்திர செயற்பாடுகளுக்கு கிடைத்த இன்னொரு வெற்றியாகும். மேலும் உயிரை பணயம் வைத்து இரவு பகலாக உழைத்துக்கொண்டிருக்கின்ற ஊடகவியலாளர்கள் நலனில் புதிய அமைச்சர் அக்கறையுடன் செயற்பட்டு அவர்களின் தேவைகளையும் நிச்சயம் நிறைவேற்றுவாரென தான் எதிர்பார்ப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள்...

கோட்டாபய ராஜபக்ஷ சுகாதாரத் துறை உயரதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுநோயாளிகளுக்கு உச்சளவில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலேயே அது தொடர்பில் ஜனாதிபதி முழுமையான அறிக்கையை கோரியுள்ளதாக கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சைகளை வழங்குதல் சம்பந்தமாக மேலும் சில திட்டங்கள் உள்ளதாக தெரிவித்துள்ள இராணுவத் தளபதி, எவ்வாறாயினும் கொரோனா வைரஸ் மரணங்களை தவிர்ப்பதற்கு ஒரே தீர்வு தடுப்பூசியைப் பெற்றுக் கொடுப்பது தான் என்றும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## வீடுகளில் சிகிச்சை பெறுவோர்...

தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டாம் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் விஷேட வைத்தியர் லால் பனாபிட்டிய தெரிவித்துள்ளார். வீடுகளில் வைத்து சிகிச்சை வழங்கும் எந்தவொரு நோயாளிகளையும் கைவிடவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஒரு வாரத்திற்கேனும்...

தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் கொரோனா வைரஸ் மிகத் தீவிரமாக பரவி வருவதையடுத்து முழு நாட்டு மக்களும் அச்சத்துக்கு முகங்கொடுத்து வருகின்றனர். வைரஸ் தொற்று நோயாளர்கள் போன்று மரணங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன என்பதை சுட்டிக்காட்டியுள்ள மேற்படி மகாநாயக்க தேரர்கள் நாட்டை ஒரு வாரத்திற்காவது முடக்குமாறு ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதேவேளை, நாட்டை சில தினங்களுக்கா வது முழுமையாக மூடுவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நாளைய தினம் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்ற உள்ளதாகவும் அதன் போது அவர் நாடு முடக்கப்படும் முறைமை தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்த உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.(ஸ)

## புதிய களனி பாலம்...

செய்தல், பாலத்திற்கு மின்விளக்குகள் இடல், பாதுகாப்பிற்காக இரும்பு வேலிகள் அமைத்தல் மற்றும் நிலத்தை செப்பனிட்டு அழகுபடுத்தல் ஆகியவை அடங்கும். அவற்றை உரிய தரத்திற்கு அமைவாக துரிதமாக நிறைவு செய்யுமாறு நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர் பிரேமசிறிக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.புதிய களனி பாலத்தின் முடிவிலிருந்து ஒறுகொடவத்தை சந்தி வரை வீதியின் இருபுறமும் மரங்களை நடுவதற்கு அமைச்சின் அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார். இதற்கு தண்ணீர் வழங்க நிலத்தடி நீர் குழாய் அமைப்பை உருவாக்குமாறும் இதன்போது அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

## நடமாடும் தடுப்பூசி...

இதன்படி இராணுவத்தில் 512 ஆவது பிரிகேட் பிரிவுக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வீடுகளுக்கு சென்று கொரோனா தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே நாடு பூராகவும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடமாடும் தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தின் ஒரு அங்கமாக யாழ். மாநகரசபையை உள்ளடக்கி குறித்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வில் யாழ் மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரி மற்றும் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதாரப் பிரிவினர் கலந்து கொண்டனர்.

## இலங்கைக்கு வரும்...

கொவிட் 19 க்கு எதிராக தடுப்பூசி செலுத்தப்பட்ட அல்லது ஒரு டோஸ் தடுப்பூசி மட்டுமே பெற்ற நபர்கள், பரிசோதனையில் வைரஸ் தொற்றுக்கு எதிர்மறையான முடிவினை வெளிப்படுத்தினாலும், 14 நாட்களுக்கு கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

முழுமையாக தடுப்பூசி செலுத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் எதிர்மறையான முடிவினை வெளிப்படுத்தினால் தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டிய அவசியம் இல்லை.

### அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் திட்டம்;

# இலங்கை மாணவர்களுக்கு உயர் கல்வியை தொடர புலமைப்பரிசில்

பாகிஸ்தானிய அரசாங்கம் அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இலங்கை மாணவர்களுக்கு மருத்துவம் உட்பட ஏனைய துறைகளுக்கான மாணவர்களை தெரிவு செய்து புலமைப்பரிசில் வழங்கி, பாகிஸ்தானின் முன்னோடியான பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி வருகின்றது.

அதனடிப்படையில் இவ்வருடத்திற்கான புலமைப்பரிசில் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு அம் மாணவர்களிலிருந்து புலமைப்பரிசில்களை தெரிவு செய்வதற்கான தெரிவுப்பரீட்சை வடகிழக்கு மாகாணத்தை சேர்ந்த மாணவர்களுக்கு ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாகிஸ்தானின் இலங்கைக்கான தூதுவராலயத்தின் இரண்டாம் நிலை செயலாளர் (அரசியல் பிரிவு) ஆயிஷா அபூபக்கர் பஹாட் , பாகிஸ்தானின் உயர் கல்வி ஆணைக்குழுவின் திட்டப்பணிப்பாளர் ஜெகன்செப் கான் மற்றும் அவரது குழுவினரும் கலந்து கொண்டனர்.

இத் தெரிவுப் பரீட்சையானது கடந்த காலங்களில் கொழும்பு பிரதேசத்திலேயே நடாத்தப்பட்டு வந்தது. ஆனால் இவ்வருடம் எமது பிரதேச மாணவர்களினது நலனைக் கருத்தில் கொண்டு இந்தப்பிரதேசத்திலேயே நடாத்தப்பட்டமை மாணவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதமாகும். இதற்கான ஒழுங்குகளை ஏற்பாடு செய்து தந்த பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அஹமட் அவர்களுக்கு பாகிஸ்தானின் இலங்கைக்கான தூதுவராலயத்தின் இரண்டாம் நிலை செயலாளர் (அரசியல் பிரிவு) ஆயிஷா அபூபக்கர் பஹாட் நன்றியைத் தெரிவித்தார்.

மேலும் பாகிஸ்தான் அல்லாமா இக்பால் புலமைப்பரிசில் பரீட்சையை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகளை மேற்கொண்ட பாகிஸ்தானிய தூதரகத்திற்கு ஹாபிஸ் நசீர் அஹமட் எம்.பி தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.


கடற்றொழில் அமைச்சு
அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால் வளர்ப்பு, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

**வழங்கல் அறிவித்தல்**

**ஷயுரு தூர்வாரி இயந்திரம் / துறைமுக தளத்தினை பழுதுபார்த்தல்**

**CFHC/SD/T/REPAIR-SAYURU/2021/42**

2021.07.19 ஆம் திகதி தினகரன் பத்திரிக்கையில் பிரசுரமான மனுக்கோரல் தொடர்பிலேயாகும். அதன்படி அம்மனுக்கோரல் மீண்டும் கோரப்பட்டுள்ளதுடன் முத்திரையிடப்பட்ட விலை மனுக்கள் 2021 ஆகஸ்ட் 20 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 31 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை கோரப்படுகின்றன. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை கூட்டுத்தாபனத்தின் இணையத்தளத்தில்(www.cfhc.gov.lk) பெற்றுக்கொள்ளமுடியும்.

தலைவர்
வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்
இல - 15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு - 15



# விலைமனு அழைத்தல்

## திஹகொட பிரதேச சபை

## திஹகொட பிரதேச சபையின் உணவு விற்பனை நிலையத்தை நிர்மாணித்தல்

01. திஹகொட பிரதேச சபையின் பெறுகைக் குழுத்தலைவரினால். திஹகொட பிரதேச சபை சார்பாக, திஹகொட பிரதேச சபையின் உணவு விற்பனை நிலையத்தை நிர்மாணிப்பதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக் கோரப்படுகின்றது. மதிப்பீட்டுத் தொகை ரூபா 2,901,387.87 ஆகும்.
02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரும் முறைமையின் பிரகாரம் விலைமனுக் கோரப்படும். செயற்றிட்டத்தின் மொத்த உத்தேச செலவினம் ஐம்பது மில்லியன் ரூபாவிற்குக் குறைவானபடியால், அரச நிதிச்சுற்றறிக்கை 4/2016 (iii) இன் பிரகாரம் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) கட்டிடங்களிற்காக C7 அல்லது C8 தரங்களில் தென் மாகாணத்தில் பதிவு செய்யப்பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிற்கு, இவ் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படும்.
[(Bidding will be conducted through National Competitive Bidding (NCB). Since the Estimated value of work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn. regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016(iii)]
03. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அலுவலக நேரங்களில் திஹகொட பிரதேச சபை செயலாளரிடம் இலவசமாக விலைமனுப்படிவங்களைப் பரிசீலனை செய்து கொள்ளல் மற்றும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
04. 2021.08.20 முதல் 2021.08.30 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலப்பகுதியில் திஹகொட பிரதேச சபையின் செயலாளருக்கு எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத படிவக் கட்டணமான ரூபா 1,000.00ஐச் செலுத்தி இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. விலைமனுக்களை, மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனத் தயாரித்து தனித்தனி உறைகளில் சேர்த்து மீண்டும் அவற்றை ஒரு உறையில் சேர்த்து அதன் இடது பக்க மேல் மூலையில், "திஹகொட பிரதேச சபையின் உணவு விற்பனை நிலையம் நிர்மாணித்தல்." எனக் குறிப்பிட்டு, முத்திரையிட்டு, 2021.08.31 அன்று பி.ப. 2.00 இற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மூலம் சமர்ப்பிக்கலாம்.
விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
06. விலைமனுக்கள், 2021.08.31 முதல் 77 நாட்களுக்குச் செல்லுபடியாகுதல் வேண்டும்.
07. அனைத்து விலைமனுக்களுடனும் ரூபா 30,000.00 இற்கான மீளளிக்கப்படும் பிணையமொன்று ரொக்கப்பணமாக அல்லது வங்கி வரைவு ஒன்றின் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் அது வங்கி வரைவு ஒன்றெனின், விலைமனுப் படிவங்களின் மாதிரிப்படிவத்தின் பிரகாரம் அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன். 2021.12.06ஆம் திகதி வரை செல்லுபடியாகுதல் வேண்டும்.

**தலைவர்,**
**திஹகொட பிரதேச சபையின் பெறுகைக் குழு,**
**திஹகொட பிரதேச சபை, திஹகொட.**
**தொலைபேசி/ தொலைநகல் : 041-2245275**
**thihagodaps@gmail.com**



**Huawei Nova 7i, FreeBuds 4i, FreeLace Pro**
**இன்றைய நேர்த்தியான தெரிவு**




உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனமான Huawei தனது உற்பத்திகளை விரிவுபடுத்தி பயனர்களுக்கு எளிதான சேவை வழங்கதுவதில் கவனம் செலுத்தியுள்ளது. அத்துடன் எதிர்காலத்தில் Huawei தனது பயனர்களுக்கு wireless earphones களை அறிமுகப்படுத்துவது புதிய அனுபவத்தையும் தரத்தையும் மேம்படுத்தும். இந்த wireless earphones கள் Huawei இன் smartphones, tablets உள்ளிட்ட ஸ்மார்ட் சாதனங்களுடன் கிடைக்கப்பெறும்.

Huawei Nova 7i சிறந்த அம்சங்களை உள்ளடக்கிய முன்னணியில் விற்பனையாகும் ஸ்டார்ட் போன்களாகும். நேர்த்தியான வடிவமைப்பு மற்றும் எதிர்கால அம்சங்களான Quad camera, 8GB RAM, 128GB storage, Kirin 810 chipset ஆகிய கலவையுடன் கூடிய Huawei Nova 7i, தொழில்நுட்ப ஆர்வலர்கள் மத்தியில் மிகவும் பிரபலமான சாதனமாக மாறுகின்றது. மிகவும் மெருகூட்டப்பட்டு வடிவமைக்கப்பட்ட Nova 7i மூன்று வர்ணங்களை உள்ளடக்கிய வகைகளுடன் வருகிறது. Sakura Green, Midnight Black மற்றும் Crush Green ஆகிய நிறங்களில் கிடைக்கின்றது. அத்துடன் வளைவான மூலைகளுடன் ஒரு matte finish ஐ கொண்டுள்ளது. Nova 7i இன் 6.4 அங்குல LCD display யில் கேம்களை விளையாடும்போது, வீடியோக்களைப் பார்க்கும்போதும் அற்புதமான அனுபவத்தை வழங்குகிறது.

இந்த இயர்போன்கள் வயர்கள் இல்லாது அணியும் ஆடம்பரத்தை வழங்குகின்றன. Huawei FreeBuds 4i இயர்போன்கள் Active Noise Cancellation (ANC) தொழில்நுட்பத்துடன் நெரிசலான சூழலிலும் தெளிவாக இசையை அனுபவிக்க முடியும். இயர்போன்களின் சென்சார்கள் சுற்றுப்புற சத்தத்தைக் கண்டறிந்து குறைக்கும் திறன் கொண்டவை, இதனால் பயனர்கள் எங்கிருந்தாலும் இசை அல்லது தொலைபேசி அழைப்புகளில் கவனம் செலுத்த முடியும். அத்துடன் அதன் இரட்டை மைக் சத்தமில்லாத சூழலில் தெளிவான தொலைபேசி அழைப்புகளை உறுதி செய்கிறது. 10mm dynamic driver இல் Huawei FreeBuds 4i சிறந்த தர ஒலி அனுபவம், தெளிவான குரல், punchy bass மற்றும் நேர்த்தியான சீரான ஒலியை வழங்குகின்றது.

FreeBuds 4i மிகவும் இலகுவானதாகவும் காதுகளில் வசதியாக பொருந்தக்கூடிய ஒரு சிறந்த வடிவமைப்பைக் கொண்டுள்ளது. Huawei FreeBuds 4i இன் குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்று, ஒரு முறை சார்ஜ் செய்தால் 10 மணிநேரம் தொடர்ச்சியாக இசையை கேட்க முடியும். 10 நிமிடங்கள் சார்ஜ் செய்தால் 4 மணிநேர இசையை கேட்க முடிகிறது. இது அதன் முன்னணி விரைவு சார்ஜ் தொழில்நுட்பத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு. FreeBuds 4i செராமிக் வெள்ளை, கார்பன் கறுப்பு மற்றும் சிவப்பு நிறங்களில் கிடைக்கிறது.

Huawei FreeLace Pro அறிமுகத்துடன் வயர்லெஸ் இயர் பட்ஸுக்கு பதிலாக Huawei மற்றொரு தெரிவை வழங்குகிறது - இது எப்போதும் பயனர்களுக்கு ஏற்ற neckband style earphone ஆகும். Huawei FreeLace Pro இரட்டை மைக் Active Noise ஐ நிறுத்தும் தொழில்நுட்பத்துடன் பயன்பாட்டுக்கு வரவுள்ளது. இது பயனர்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாது உயர் தரத்துடன் இசையை ரசிக்க முடிகின்றது. அதன் 14mm டைனமிக் டிரைவர் சுயாதீனமாக குறைந்த அதிர்வெண் ஒலி குழாய் மூலம் அதிர்வு விளைவை அடையக் கூடியதாக உள்ளதுடன் அது punchier மற்றும் deeper bass அடைய முடிகின்றது.


# ஊடகவியலாளர்கள் சமூகத்தின் கௌரவத்திற்கு உரியவர்கள்

### உள்நாட்டு இறைவரி திணைக்கள உதவி ஆணையாளர்




பெரியநீலாவணை விசேட நிருபர்

ஊடகவியலாளர்கள் என்பவர்கள் சமூகத்தின் கௌரவத்திற்கும் மரியாதைக்கும் உரியவர்கள் என உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் சிரேஸ்ட சட்டத்தரணி எம். ஏ.சி.எம். உவைஸ் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் போரத்தின் மாதாந்த ஒன்றுகூடலும் ரீசேட் வழங்கும் நிகழ்வும் அக்கரைப்பற்று நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை பிராந்திய அலுவலகம் முன்பாக உள்ள TFC ஹோட்டலில் அண்மையில் போரத்தின் தலைவர் எம்.ஏ. பகுர்தீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில், ஊடகவியலாளர்கள் சமூகத்தின் பெறுமதியான சொத்தாகும். இவர்கள் பொதுமக்கள் அபிப்பிராயத்தை உருவாக்கும் உன்னதமான பணியினை மேற்கொண்டு வருகின்றனர். ஊடகவியலாளர்களின் பணி கௌரவத்துடனும் மரியாதையுடனும் நோக்கப்பட வேண்டியது அவசியமான ஒன்றாகும். இதே நேரம் ஊடகவியலாளர்கள் சமூகத்தின் பொறுப்பு மற்றும் தேவை நோக்கம் கருதி நல்ல கருத்துக்களை விதைக்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

சமூகத்தில் வைத்தியர்கள், சட்டத்தரணிகள், பொறியியலாளர்கள் போன்று ஊடகவியலாளர்களும் மதிக்கப்பட வேண்டும். அவர்கள் ஒன்றிணைந்து இருக்கின்ற ஒரு சபையில் எனக்கும் பேச கிடைத்தமையை நான் பெரும் பேறாக கருதுகின்றேன் என்று தெரிவித்தார்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெற்ற இந் நிகழ்வில் ASRM நிறுவனத்தின் உரிமையாளர் எம். எம்.முசாதிக் ஹாஜியார், போரத்தின் செயலாளர் எம்.எஸ்.எம்.ஹனீபா, தவிசாளர் எம். சஹாப்தீன், பொருளாளர் எஸ்.எம். அப்துல் மலீக், பிரதித் தலைவர் ஏ.எல்.ஏ.நிப்றாஸ், உபதலைவர் வீ.சுகிர்த குமார் உட்பட போரத்தின் அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.


**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**
**சுற்றுலாத்துறை அமைச்சு**
**தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம், பேராதனை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**DNBG/F6/PRO/SWBG/Power.Dis.Net./2021-32**

தும்மோதர, சீத்தாவக்க உலர் வலய தாவரவியற் பூங்காவிற்கு குறைந்த வலுவுடைய மின் விநியோக வலையமைப்பை நிர்மாணித்தல் மற்றும் பூர்த்தி செய்தலுக்கான ஒப்பந்தம்

01. தும்மோதர, சீத்தாவக்க உலர் வலய பூங்காவிற்கு ஓர் குறைந்த வலுவுடைய மின்விநியோக வலையமைப்பை நிர்மாணித்தல் மற்றும் பூர்த்தி செய்தலுக்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சார்பாக திணைக்கள பெறுகைக்குழு (பாரிய தலைவர் அழைக்கின்றார்)
செயற்றிட்டத்தின் அமைவிடம் - அவிசாவளை, தும்மோதர, சீத்தாவக்க உலர் வலய தாவரவியற் பூங்காவின் வளாகம், மதிப்பிடப்பட்ட செலவு "4.3 மில்லியன்" ஆகும். ஒப்பந்த காலம் "60 நாட்கள்" ஆகும்.
02. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனு முறைமையின் ஊடாக நடத்தப்படும்.
03. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்படாதவராக இருத்தல்.
04. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கான தேவைப்படும் தகைமைகளின் குறைந்த வலுவுடைய மின் விநியோக வலையமைப்புக்களை நிறைவேற்றிய முன் அனுபவம் உள்ளடக்கப்படுகிறது.
05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பேராதனை, தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களத்திலிருந்து மேலதிக தகவல்களையும் விலைமனு ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
06. மீளளிக்கப்படாத கட்டணம், ரூ.3000 செலுத்துவதன் பேரில், 2021 ஓகஸ்ட் 14 முதல் 2021 செப்டெம்பர் 09ஆம் திகதி மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை அலுவலகத்திற்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.
07. விலைமனுக்கள் பேராதனை, தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களத்திற்கு விநியோகிக்கப்படல் வேண்டும். அல்லது 2021 செப்டெம்பர் 10ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு பேராதனை, தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களம், பிரதம கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள், சமுகமளிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாக திறக்கப்படும்.
08. எல்லா விலைமனுவுடனும் ரூ.60,000.00 உடைய ஓர் விலைமனுப்பிணையை இணைத்தல் வேண்டும். விலைமனுப்பிணை விலைமனு செல்லுபடியாகும் காலத்திற்கிடையில் 30 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும்.
09. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் பேராதனை, தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தில் 2021 செப்டெம்பர் 02ஆம் திகதி மு.ப.10.30 இற்கு நடைபெறும்.

**தலைவர்**
**கேள்விக்குழு**
**தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம்**
**பேராதனை**



திகதி 18.08.2021 புதன்கிழமை www.nlb.lk உத்தியோகபூர்வ முடிவுகள் NLB NATIONAL LOTTERIES

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் : 4540
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,385,200.00
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 5 6 9 3 1 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.25,917,517.20

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2835
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,034,700.00
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 03 21 38 74
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,455,385.60

**Mega POWER மெகா பவர்** கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 888
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.2,366,020.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.144,170,345.20
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து T
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 14 29 32 41

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம் : 570
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,366,820.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 15 18 30 34
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,348,303.60

**ஜாதிக சம்பத** JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் : 1138
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,833,120.00
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 8 9 4 1 4 2
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்'டத்தை கொண்டு வருகின்றது.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,839,019.30

18.08.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 454,639
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 17,985,860.00
ரூ. 1,000,000 00 பரிசுகள 01 ரூ. 100,000.00 பரிசுகள 21

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



**1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் பிரிவு 29D இன் கீழான விற்பனை.**

## மக்கள் வங்கி
## கடுகண்ணாவ கிளை
### பெறுமதி மிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை

மத்திய மாகாணம், கண்டி, மாவட்டம், யட்டிநுவர கந்துபலாத்த கோரளே, யட்டிநுவர பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட கடுகண்ணாவ நகர எல்லைக்குள், கடவத்கம கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடவத்கம அமைந்துள்ள , அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் டீ.ஆர்.அபேகோன் அவர்களால் 2010 மார்ச் 10ஆம் திகதி அளந்து வரையப்பட்ட 2344ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு "01" எனக் குறிப்பிடப்பட்டுள்ள "நிலிகமுவே கும்புர" என அழைக்கப்படும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்: ஏ-oo : றூ.00 : ப.27**
**அதிலுள்ள கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக.**
**கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் B 508/235இல் பதிவு செய்யப்பட்டது.**

**காணியை சென்றடைவதற்கான வழி:**
கடுகண்ணாவ நகரிலிருந்து கண்டி வீதி வழியாக பிலிமத்தலாவை நோக்கி சுமார் 750 மீற்றர் தூரம் வரை தர்மகர விகாரையை அடைந்ததும் (101வது மைல் கல்லை தாண்டி சுமார் 40 மீற்றர் செல்கையில் கடுகண்ணாவ நகர சபை விளையாட்டு மைதானத்திற்கு சில மீற்றர்களுக்கு முன்) பாதையின் இடது பக்கத்தில் அமைந்துள்ள குறித்த ஆதனத்தை சென்றடையலாம்.

**மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி**
**2021 செப்டெம்பர் 08ஆம் திகதி புதன்கிழமை**
**மக்கள் வங்கியின் கடுகண்ணாவை கிளை வளாகத்தில்**
**மு.ப. 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்**

**சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID-19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் இந்த ஏல விற்பனை நடைபெறும்.**

**வரையறுக்கப்பட்ட தயா அப்ரல் எக்ஸ்போட் (தனியார்) நிறுவனத்தினால் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்ட சொத்து**

**தீர்மான அறிவித்தலுக்கு**
தீர்மான அறிவித்தலுக்கு தயவு செய்து 2021 ஏப்ரல் 23ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2021 ஏப்ரல் 23ஆம் திகதிய டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை:**
ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் 2 ½ % (இரண்டரை சதவீதம்) ஏலதாரர் தரகு மற்றும் அதற்குப் பொருத்தமான வரிகள்
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1,500/-
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை கட்டணம்

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் முகாமையாளர், மக்கள் வங்கி, கடுகண்ணாவ அவர்களுக்கு செலுத்தப்பட வேண்டும்.

தொலைபேசி : 081 2570705

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும் உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்குறிப்பிட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

'முன்னறிவித்தலின்றி ஏல விற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

**ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம**

*ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்*
**129 வருடகால மகோன்னத சேவை**

**தலைமை அலுவலகம்**
**24, டொரிங்டன் வீதி, கண்டி.**
**தொலைபேசி : 081-2227593**
**தொலை/பக்ஸ் : 081-2224371**
**மின்னஞ்சல்:** schokmankandy@sltnet.lk

**நகர அலுவலகம்**
**6A, பெயார் பீல்ட் கார்ட்ன்,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி : 011-2671467, 011-2671468**
**தொலை/பக்ஸ் : 011-2671469**
**மின்னஞ்சல்:** schokman@samera1892.com

**இணையதளம்:** www.sandslanka.com



BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.
Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
Dinamina Daily News Thinakaran
LAKE HOUSE

# கேள்விக்கான அழைப்பு

## மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

## வட மத்திய மாகாணம்

1. வட மத்திய மாகாண சபையின் சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் நிர்மாணங்களுக்காக தகுதியுள்ள மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி சமர்ப்பித்தல் முறையில் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. தேசிய போட்டி கேள்வி கோரல் முறையில் விலைமனுக்கள் கோரப்பட்டபோதும் இப் பெறுகை வட மத்திய மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்துள்ள கேள்விதாரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
2. ஒப்பந்தங்களை வழங்குவதற்காக தகைமை பெறுவதற்கு வெற்றிகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன் கட்டிட நிர்மாணங்களுக்காக கீழ்க்காணும் ICTAD பதிவுத் தரத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
3. இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு பிரதம கணக்காளர், மாகாண சுகாதார சேவை திணைக்களம், பண்டாரநாயக்க மாவத்த அநுராதபுரம் (025-2050718) இடம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், கேள்வி ஆவணங்கள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் நிறுவனங்களுக்கு வருகை தந்து பரீட்சிக்கலாம்.
4. மீளளிக்கப்படாத கட்டணங்களை செலுத்திய பின்னர் 2021.09.09 வரை மு.ப. 9.00 பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் நிறுவனங்களுக்கு எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்த பின்னர் ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியை ஆங்கிலமொழியில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொடர் இல. | வேலை பற்றிய விபரம் மற்றும் இலக்கம் | நிதி நிலைமை | மதிப்பிடப்பட்ட வேலை செலவு (ரூ) | தேவைப்படும் குறைந்த பட்ச ICTAD தரம் | கேள்விப் பிணையின் பெறுதி (ரூ) | ஒப்பந்த காலம் | கேள்வி ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | கட்டியாவ புதிய கர்ப்பிணிகள் மற்றும் சிறுவர் சிகிச்சையக நிலையத்தை நிர்மாணித்தல் | RHDP | 7.28 மில்லியன் | C7 C6 | ரூ. 75,000.00 (105 நாட்கள் செல்லுபடியாகும்) | 120 நாட்கள் | ரூ. 3,000.00 |
| 02 | பதவிய தள வைத்தியசாலையின் வேலி மற்றும் வாயிற் கதவை நிர்மாணித்தல் | RHDP | 4.8 மில்லியன் | C8 C7 | ரூ. 50,000.00 (91 நாட்கள் செல்லுபடியாகும்) | 120 நாட்கள் | ரூ. 3,000.00 |
| 03 | மிஹிந்தலை சு.வை.அ. அலுவலகத்தின் சிகிச்சையக வசதிகளை மேம்படுத்துதல் | RHDP | 8.29 மில்லியன் | C7 C6 | ரூ. 85,000.00 (105 நாட்கள் செல்லுபடியாகும்) | 120 நாட்கள் | ரூ. 3,000.00 |
| 04 | அநுராதபுரம் பிரதேச மருந்துக் களஞ்சியத்தை பழுதுபார்த்தல் | வரிசை அமைச்சு | 4.99 மில்லியன் | C8 C7 | ரூ. 50,000.00 (91 நாட்கள் செல்லுபடியாகும்) | 120 நாட்கள் | ரூ. 3,000.00 |

05. நகல் பிரதியுடன் 2021.09.10 மு.ப. 11.00 இற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், வட மத்திய மாகாணம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிறுவனத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் இவ் வேளையில் சமுகமளித்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

06. சகல கேள்வியுடனும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதிக்கு சமமாக இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் கேள்விப் பிணையொன்றை அல்லது குறித்த தொகையை எமது திணைக்களத்தில் வைப்புச் செய்துபெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் - வட மத்திய மாகாணம் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், வட மத்திய மாகாணம்.**
2021.08.20


# சந்திரகாந்தனின் பிறந்தநாளை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு

***வெல்லாவெளி தினகரன், புதிய காத்தான் குடி தினகரன் நிருபர்கள்***



*தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும்,மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் 46ஆவது பிறந்தநாளை முன்னிட்டு கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் மாபெரும் இரத்ததான நிகழ்வு புதன்கிழமை (18) இடம்பெற்றது.*

*மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் குருதிதட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில், வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பொறுப்பதிகாரி விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவும், சந்திரகாந்தனின் பிறந்தநாளை முன்னிட்டும் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் சிரமதானம்,இரத்ததானம்,மரநடுகை நிகழ்வுகள்,போன்றன இடம்பெற்றுள்ளன.*

*இரத்ததான நிகழ்வு புதன்கிழமை (18) காலை 8.00 முதல் மாலை 5.00 வரையுள்ள காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள்,கட்சியின் ஆதரவாளர்கள் வருகை தந்து இரத்த தானம் வழங்கினர்.*

*தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கனடாக் கிளையின் ஏற்பாட்டில் கனடா கிளை ஒருங்கிணைப்பாளர் சாந்தலிங்கம் கண்ணனின் வழிகாட்டுதலில் 1000 பயனாளிகளுக்கான வாழைக்குட்டிகள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வும், வாழைக்குட்டிகள் நாட்டிவைக்கும் நிகழ்வும் கட்சியின் தலைமை செயலகத்தில் இடம்பெற்றது.*


# அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(3) பிரிவின் கீழ் மானெல் ட்ரீம் ஹவுஸ் (பீவீடீ) எல்டீடி (PV 85500) ஆனது Secure Investment (Pvt) Ltd. (PV 87766) உடன் ஒன்றிணைத்தல்.

பதிவிலக்கம் 85500 ஐக் கொண்ட மானெல் ட்ரீம் ஹவுஸ் (பீவீடி) எல்டிடீ மற்றும் பதிவிலக்கம் 87766 ஐக் கொண்ட Secure Investment (Pvt) Ltd. ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளினால் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 (2) இன் நியதிகளிற்கேற்ப ஒன்றிணைப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளன. என்பதோடு, அதன் மூலம் இரண்டு நிறுவனங்களும், Manel Dream House (Private) Limited என்ற பெயரில் தொடர்ந்தும் இயங்கும். சொல்லப்பட்ட ஒன்றிணைப்பானது 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் 27ஆம் திகதி முதல் அமுல்படுத்துவதற்கு அல்லது கம்பனிகள் பதிவாளரினால் அங்கீகரிக்கப்படும் திகதியொன்றிலிருந்து அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

சபையின் கட்டளைப்படி
**Manel Dream House (Pvt) Ltd.**
**Secure Investment (Pvt) Ltd.**
கம்பனி செயலாளர்,
இல: **SEC/1(b)(i)/2005/3215**


## மட்டக்களப்பில்

# இன்று முதல் வர்த்தக நிலையங்களை மூட தீர்மானம்

***புதிய காத்தான்குடி தினகரன், கல்லடி குறூப் நிருபர்கள்***

*மட்டக்களப்பில் இன்று வெள்ளிக்கிழமை 20ம் திகதி முதல் எதிர் வரும் 30ம் திகதி வரைக்கும் வர்த்தக நிலையங்களை மூடுவதென மட்டக்களப்பு வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளதாக வர்த்தக சங்கத்தின் தலைவர் எம்.செல்வராசா தெரிவித்தார்.*

*மட்டக்களப்பு வர்த்தக சங்க கூட்டம் புதன்கிழமை மாலை (18) மட்டக்களப்பில் நடைபெற்றபோதே இத் தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.*

*சில்லறைகடை, மருந்தகங்கள், பேக்கரி, பழக்கடை, சாப்பாட்டு கடை தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*கொவிட் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் பொருட்டு நாட்டின் இன்றைய சூழ்நிலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு மட்டக்களப்பு மாநகர சபை பிரிவிலுள்ள அனைத்து வர்த்தகர்களும் பூரண ஒத்துழைப்புக்களை தருமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.*

*இக் கூட்டத்தில் வர்த்தக சங்கத்தின் செயலாளர் தியாகராசா உட்பட அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.*

# அஹதியா ஆசிரியர்களுக்கு சீருடை துணிகள் வழங்கிவைப்பு

***பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்***

*புத்தசாசனம் கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால், இஸ்லாமிய சமய பாடசாலை (அஹதியா) ஆசிரியர்களுக்கான சீருடைத் துணிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.*

*இதன் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள இஸ்லாமிய சமய பாடசாலை அஹதியா ஆசிரியர்களுக்கான சீருடைத்துணிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (17) சாய்ந்தமருது ஜீம்ஆப் பள்ளிவாசல் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது.*

*இந்நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் ஏ.எச்.எம்.றிபாஸ் கலந்து கொண்டு அட்டாளைச்சேனை பிரதேச அஹதியா பாடசாலைக்கான ஆசிரியர்களுக்கான சீருடைத் துணிகளை பிரதேச அஹதியா பாடசாலை அதிபரும் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகருமான யு.எம்.நியாசிடம் வழங்கி வைத்தார்.*

*இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அஹதியா பாடசாலைகளின் மாவட்ட பணிப்பாளர் உட்பட அஹதியா பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், நிருவாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.*



**கொரோனா தொற்று நோயாளிகளின் நலன் கருதி கிண்ணியா தள வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வொன்று புதன்கிழமை (18) காலையில் கிண்ணியா தள வைத்திய சாலையில் இரத்த வங்கிக்குப் பொறுப்பான டொக்டர் முகைதீன் பாவா தலைமையில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வின் போது.**
*(திருமலை மாவட்ட விசேட, கிண்ணியா மத்திய நிருபர்கள்)*


# தேசிய கல்வி நிறுவகம்

## கல்வி முகாமைத்துவத்தில் கல்வி முதுமாணிப் பட்டம்

## MEd(Education Management-2021/2022 (SLQF 10)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்திதுறை மூலம் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாடநெறி நடாத்தப்படும் நிலையம்** : கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்தி துறை கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம் தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்க.

**பாடநெறி கால எல்லை** : இரண்டு வருடங்கள் (வார இறுதி நாட்களிலும் மற்றும் அவசியமேற்படின் வாரநாட்களில் மாலை 6.00 மணிக்குப் பின்னர் விரிவுரைகள் இடம்பெறும்)

**மொழி மூலம்** : சிங்களம்/தமிழ்

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா 150,000.00 (இரு தடவைகளில் செலுத்த முடியும்) பதிவுக் கட்டணம் ரூபா 5,000.00 + பரீட்சைக் கட்டணம்..

2021 நவம்பரில் பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்:**

(i) கல்விமாணிப் பட்டம் அல்லது ஏதேனும் பாடத்துறையுடன் தொடர்புபட்ட முதல் பட்டத்துடன் கல்வி பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பயின்றிருத்தலுடன்

(ii) இலங்கை கல்வி நிருவாக சேவை (SLEAS) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை (SLTES) இலங்கை அதிபர் சேவை (SLPS) இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை (SLTAS) இலங்கை ஆசிரியர் சேவை (SLTS) அல்லது கல்வி அமைச்சுடன் இணைந்த வேறும் கல்வித் தாபனங்களில் தலைவராக பணிபுரிபவராக இருத்தல்

**அனுமதி முறை:**

- நேர்முகப் பரீட்சை மூலம் அல்லது நுழைவுப் பரீட்சையுடன் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு இடம்பெறும். நுழைவுப் பரீட்சை 02 மணித்தியால கல்வி பற்றிய பொது விடயங்களைக் கொண்டதும், 01 மணித்தியால உளச்சார்பு வினாப்பத்திரமுமாக 2 வினாப் பத்திரங்களைக் கொண்டமையும்.
- விண்ணப்பிக்கப்படும் காலப் பகுதியில் விண்ணப்பதாரி தேசிய கல்வி நிறுவகத்தில் வேறு எந்தவொரு முழு நேர/பகுதி நேர பாடநெறிகள் எதுவும் மேற்கொள்ளாதவராயும் வேறு எந்த நிறுவனத்திலும் முழு நேர பாடநெறி எதையும் மேற்கொள்ளாதாவராயும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முறை:**

1. தேசிய கல்வி நிறுவகத்தின் உத்தியோகபூரவ இணையத்தளமான (www.nie.lk/olcmed2app21.aspx) உள்ள நிகழ்நிலை படிவத்தை (online Form) நிரப்புவதன் மூலம் மற்றும்
2. தேசிய கல்வி நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.nie.lk/naddpage.aspx) ஆங்கில மொழியிலுள்ள விண்ணப்பப்படிவத்தில் நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிலான இலங்கை வங்கிக் கணக்கு 7041168க்கு எந்தவொரு இலங்கை வங்கி கிளையிலும் விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1,500./- வைப்புச் செய்தல் அவசியம். கட்டண ரசீதை நிரப்பும் போது விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் MEd. (Education Management) எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

குறித்த ரசீதை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து பணிப்பாளர் கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்தி, கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடம் தேசிய கல்வி நிறுவகம் மீப்பே சந்தி, பாதுக்கே எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2021 செப்டம்பர் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரம் அனுப்பப்படும் கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் MEd (Education Management) 2021/2022- (சிங்களம்/தமிழ்) எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

- உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமைக்காக விண்ணப்பப்படிவ கட்டணம் மீளச்செலுத்தப்படமாட்டாது.
- மேலதிக விபரங்கள் வாரநாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையிலான கால எல்லையில் பின்வரும் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் 0117601436

**கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன,**
**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்.**
**மஹரகம**



# தேசிய கல்வி நிறுவகம்

## கல்வி முகாமைத்துவத்தில் கல்வி இளமாணிப் பட்டம்

## BEd(Education Management)-2021/2022 ( SLQF 5 )

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்தி துறையின் மூலம் நடாத்தப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாடநெறி நடாத்தப்படும் நிலையம்** : கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்திதுறை, கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடம் தேசிய கல்வி நிறுவகம், மீப்பே சந்தி, பாதுக்க.

**பாடநெறி கால எல்லை** : மூன்று வருடங்கள் (வார இறுதி நாட்களிலும் மற்றும் அவசியமேற்படின் வாரநாட்களில் மாலை 6.00 மணிக்குப் பின்னர் விரிவுரைகள் இடம்பெறும்)

**மொழி மூலம்** : சிங்களம்/தமிழ்

**பாடநெறிக் கட்டணம்** : ரூபா 150,000.00 (மூன்று தவணைக் கட்டணமாக செலுத்த முடியும்) பதிவுக் கட்டணம் ரூபா .1,000.00+பரீட்சைக் கட்டணம்...

**நடைபெறும் முறை** : கலவை முறை (Blended Learning)-online/Face to face

2021 நவம்பரில் பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

**விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்:**

(i) இலங்கை கல்வி நிருவாக சேவை (SLEAS)/ இலங்கை அதிபர் சேவை (SLPS)/ இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை (SLTAS) பதவி ஒன்றை வகித்தல்

**அத்துடன்**

(ii) கல்விப் பொது தராதர உயர் தரப் பரீட்சையில் ஆகக் குறைந்தது 03 பாடங்களில் S தரத்தைப் பெற்றிருப்பதுடன் ஆகக் குறைந்தது ஐந்து வருடங்கள் கற்பித்தலில் அனுபவம்

**அல்லது**

பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா (Diploma in School Management) பயின்றிருத்தல்

**அனுமதி முறை:**

- நேர்முகப் பரீட்சை மூலம் அல்லது நுழைவுப் பரீட்சையுடன் நேர்முகப்பரீட்சையின் மூலம் தெரிவு இடம்பெறும். நுழைவுப் பரீட்சை 01 மணித்தியால( கல்வி பற்றிய பொது விடயங்களைக் கொண்ட எழுத்து மூலப் பரீட்சை)
- விண்ணப்பிக்கப்படும் காலப் பகுதியில் விண்ணப்பதாரி தேசிய கல்வி நிறுவகத்தில் வேறு எந்தவொரு முழு நேர / பகுதி நேர பாடநெறிகள் எதுவும் மேற்கொள்ளாதவராயும் வேறு எந்த நிறுவனத்திலும் முழு நேர பாடநெறி எதையும் மேற்கொள்ளாதவராயும் இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முறை:**

1. தேசிய கல்வி நிறுவகத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தளமான (www.nie.lk/olcbedapp21.aspx) உள்ள நிகழ்நிலை படிவத்தை (online Form) நிரப்புவதன் மூலம்

**மற்றும்**

2. தேசிய கல்வி நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.nie.lk/naddpage.aspx) ஆங்கில மொழியிலுள்ள விண்ணப்பப்படிவத்தில் நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பெயரிலான இலங்கை வங்கிக் கணக்கு 7041168க்கு எந்தவொரு இலங்கை வங்கி கிளையிலும் விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1,500/- வைப்புச் செய்தல் அவசியம். கட்டண ரசீதை நிரப்பும் போது விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் BEd. (Education Mgt-2021/2022) எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

குறித்த ரசீதை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து பணிப்பாளர் கல்வி நிருவாகம் மற்றும் அபிவிருத்தி, கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடம் தேசிய கல்வி நிறுவகம் மீப்பே சந்தி, பாதுக்கே எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2021 செப்டம்பர் மாதம் 10ந் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்ப பத்திரம் அனுப்பப்படும் கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் BEd(Education Mgt) 2021/2022- (சிங்களம்/தமிழ்) எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்

- உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமைக்காக விண்ணப்பப்படிவ கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது.
- மேலதிக விபரங்கள் வாரநாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரையிலான கால எல்லையில் பின்வரும் தொலைபேசிக்கு தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் 0117601436

**கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன,**
**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**




# அறிவித்தலின்றி வர்த்தக நிலையங்களை மூடமுடியாது

## நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட



**நுவரெலியா தினகரன், தலவாக்கலை குறூப் நிருபர்கள்**

நுவரெலியா மாவட்டத்தில் வர்த்தக நிலையங்களை மூடுவதாக இருந்தால் பிரதேச செயலாளருக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவிக்க வேண்டும் என நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று (19.08.2021) ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இந்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

நுவரெலியா மாவட்டத்தில் நகரங்களை மூடுவதாக வர்த்தக சங்கங்கள் நடவடிக்கை எடுக்குமாக இருந்தால் இது தொடர்பாக பிரதேச செயலாளர் மற்றும் குறித்த பகுதியில் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். ஏனெனில் மக்களின் பொது வாழ்க்கையை எந்த இடையூறும் இல்லாமல் பராமரிக்க ஒரு திட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்ட செயலாளர் நந்தனா கலபடா கூறுகையில்,

தற்போதைய தொற்றுநோய் சூழ்நிலையால் நுவரெலியா மாவட்டத்தில் நகரங்கள் மூடப்பட வேண்டுமானால், பிரதேச செயலகம் மற்றும் அந்த பகுதியில் அமைந்துள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இது குறித்து அறிவிக்கப்பட வேண்டும், ஏனெனில் மக்களின் வாழ்க்கையை பராமரிக்க ஒரு திட்டம் உருவாக்கப்பட வேண்டும். ஒரு நகரத்தை மூடுவதற்கு முன்னர் எடுக்க வேண்டிய முன்நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்.

குறித்த பகுதியில் மொத்த விற்பனையை தொடரவும் மற்றும் மக்களின் அத்தியாவசிய உணவு பொருட்களை நடமாடும் சேவைகள் மூலம் வாகனங்களில் விற்கவும். நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஏனெனில் ஒரு நகரம் மூடப்பட்டு மற்றொரு நகரம் திறந்திருக்கும் போது திறந்திருக்கும் நகரத்திற்கு அதிகமான மக்கள் வருவார்கள். இதன்மூலமாக தற்போதைய சூழ்நிலையில் தொற்றுநோய் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்துவிடும். எனவே இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே முறையான அறிவித்தலின் பின்னர் கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்கும் எனவும் மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சேதன பசளை உற்பத்தி தினம் பிரகடனம்



சப்ரகமுவ மாகாண சேதன பசளை உற்பத்தி தினமாக செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண சேதன பசளை வழிநடத்தல் குழு கூட்டம் நேற்றுமுன்தினம்(18) நிகழ்நிலை ஊடாக இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவின் ஆலோசனைக் கமைய சப்ரகமுவ மாகாண விவசாயத்துறை அமைச்சினால் சஜீவயா வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சௌபாக்கிய நோக்கு திட்டத்தின் கீழ் நச்சுத்தன்மையற்ற உணவு வகைகளை மக்களுக்கு வழங்கும் நோக்கில் சேதன பசளை உற்பத்தி மற்றும் சிறந்த விவசாய நடைமுறையை ஊக்குவிப்பதற்கென மேற்படி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண விவசாயத்துறை அமைச்சின் கண்காணிப்பில் சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களம், விவசாய அபிவிருத்தி திணைக்களம், இரத்தினபுரி, கேகாலை மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பிரதேச விவசாயத்துறை அமைப்புகள், உள்ளூராட்சி சபைகள், அரச மற்றும் தனியார் வங்கிகள் பேராதெனிய பல்கலைக்கழகம் என்பன இணைத்துக் கொண்டு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி சேதன பசளை மற்றும் கிருமிநாசினி உற்பத்தி செய்வதற்கு சஜீவயா வேலைத்திட்டத்தின் மூலம் தேவையான பயிற்சி மற்றும் தொழிநுட்ப உபகரணங்கள் பெறுவதற்கான நிதி உதவிகளும் பெற்று கொடுக்கப்பட உள்ளது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் ரஞ்ஜனி ஜயகொடி,மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர என பலர் கலந்து கொண்டனர்.

## லொறியில் திருட்டில் ஈடுபட்ட கும்பல் பொலிஸாரால் சுற்றிவளைப்பு



**ஹற்றன் விசேட நிருபர்**

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென்ஜோன்டிலரி; பகுதியில் நீண்ட காலமாக உணவு பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களை கொண்டு சென்ற லொறிகளில் திருடிய கும்பல் ஒன்றினை நோர்வூட் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் (18) அதிகாலை திருடிய ஒரு தொகை மரக்கறி மூட்டைகளுடன் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலாங்கொடை எம்பிலிபிட்டிய, பொகவந்தலாவ மற்றும் நோர்வூட், மஸ்கெலியா, ஹற்றன் நுவரெலியா மாவட்டத்தின் பல நகரங்களுக்கு கொண்டுவரும் மரக்கறிகள் மற்றும் பழங்கள், தேங்காய் உள்ளிட்ட பொருட்களை ஏற்றி வரும் லொறிகளில் இந்த திருட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளது. பொகவந்தலாவ நோர்வூட் பகுதியில் வீதி அபிவிருத்தி பணிகள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நடைபெற்று வருகின்றது. இதனால் இந்த வீதியில் அதிகாலை வேளையில் செல்லும் லொறிகள் மெதுவாக செல்வது வழக்கம். இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்த கும்பல் லொறிகளில் ஏறி திருடியுள்ளனர். அதனைதொடர்ந்து பின்னால் வரும் முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்று வீட்டில் வைத்து ஒவ்வொரு மூட்டைகளாக கடைகளுக்கு விற்பனை செய்வதாகவும் தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் ஒரு தடவைக்கு சுமார் 25000 தொடக்கம் 50000 வரையான உணவு பொருட்கள் களவாடி விற்பனை செய்துள்ளதாகவும் இதனை நீண்ட காலமாக செய்து வந்துள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்டுஆரம்பகட்டவிசாரணையின் மூலம் தெரியவந்துள்ளன.

# கொரோனாவிலிருந்து பாதுகாப்பு பெற சுய பொறுப்புணர்வு அவசியம்



பல்வேறு திரிபுகளைக் கொண்ட கொரோனா வைரஸ் தொற்றின் பரவல்கள், நாளுக்கு நாள் இந்த உலகை ஆட்டிப்படைத்துக் கொண்டு இருக்கும் தற்போதைய சூழ்நிலையில் அனைவரும் சுய பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"நாட்டுக்குள் தற்போது வீரியம் கொண்ட கொரோனா வைரஸ் தொற்றின் பரவல் அதிகரித்துள்ளமையை, சுகாதாரத் தரப்பினர் உறுதி செய்துள்ளனர்.

"இந்நிலையில், நாட்டை முடக்குவது தொடர்பான கோரிக்கைகள், ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களின் ஊடாகத் தீவிரமாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.

"எவ்வாறாயினும், இந்த விடயத்தில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, அனைவரும் முன்வர வேண்டும். அதனை விடுத்து, ஒவ்வொருவரும் ஒவ்வொரு மன நிலையில் இருந்து கொண்டு, ஒருவரை ஒருவர் குறை கூறிக்கொண்டிருக்கும் நிலைமையையே இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது.

"இவ்வாறாக, ஒருவரை ஒருவர் குறை கூறிக்கொண்டு இருப்பதால், இந்த வைரஸ் தொற்றுப் பரவல் நிலை தடுக்கப்படப் போவதில்லை. மாறாக தொற்று மேலதிகமாக பரவி பாதிப்புகளை உள்ளாக்கி வருகின்றது.

"நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடியான நிலைமையில், நாட்டை முடக்குவதென்பது ஒரு முக்கிய வழி என்கின்ற போதிலும், அவ்வாறு நாட்டை முடக்குவதால், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலும் முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் வரப்போவதில்லை. சுயக்கட்டுப்பாட்டுடன் இருந்தால் மாத்திரமே முழுமையாக கொரோனா தொற்றுப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

கொரோனா வைரஸானது, வேறு வேறு வீரியங்களில், குறைந்த பட்சம் 4 ஆண்டுகளுக்கு நீடிக்க வாய்ப்புள்ளது. தொற்றுப் பரவலில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நாட்டை முடக்குவதாயின், இன்னும் 4 வருடங்களுக்கு தொடர்ந்து நாட்டை முடக்க முடியுமா என செந்தில் தொண்டமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

"இப்படி இருக்கும் பட்சத்தில், நாம் அனைவரும் சிந்தித்து செயற்பட வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை, அனைவரும் புரிந்துக்கொள்ள வேண்டும். மக்களுக்கு வழிகாட்டல்கள் தான் அவசியம். அவ்வாறான சிறந்த சுகாதார வழிகாட்டல்களை, உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளுக்கமைய, இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ளது.

"தடுப்பூசி ஏற்றிக்கொள்வதன் மூலம் தொற்று அபாயத்தைக் குறைத்து கொள்ள முடியும் என்பதுடன் நோய் எதிர்ப்புச் சக்தியையும் பெற்றுக்கொள்ள முடியும், முகக்கவசங்களை அணிந்துகொள்ளல், சமூக இடைவெளியைப் பேணல், பொது இடங்களில் கூடவேண்டாம், அநாவசியப் பயணங்களைத் தவிர்த்தல் போன்ற வழிகாட்டல்களை அரசாங்கம் வழங்கியுள்ளது. இவ்வாறான விடயங்களைக் கடைபிடிப்பதால், வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.

"இவற்றைக் கடைபிடித்தல் என்பது ஒவ்வொருவரினமும் சுய பொறுப்பாகும். எம்முடைய கவனக்குறைவு காரணமாகத்தான் அதிவேகமாக தொற்றுப் பரவல் ஏற்படுகின்றது. நாம் கவனக்குறைவாக நடந்துகொண்டு, இன்னொருவரைக் குறைகூறுவது தவறாகும்.

"இவ்விடயத்தில், அரசாங்கத்தையோ அல்லது எதிர்க் கட்சிகளையோ குறைகூறுவதில் அர்த்தம் இல்லை. இலங்கை மக்களின் பாதுகாப்பு தொடர்பான பொறுப்பும் கடமையும், இலங்கைப் பிரஜை என்ற வகையில் நம் ஒவ்வொவருக்கும் உள்ளது.

"அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், இலங்கைக்குப் போதுமானளவு தடுப்பூசிகளைக் கொண்டுவந்துள்ளது. இன்னும் கொண்டுவந்துகொண்டு இருக்கிறது என செந்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

# கொட்டகலை நகரத்திற்கு பூட்டு: தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுப்பு





**ஹற்றன் விசேட ,ஹற்றன் சுழற்சி, கினிகத்தேனை தினகரன், தலவாக்கலை குறூப் நிருபர்கள்**

கொட்டகலை நகரத்தில் அதிகரித்து வரும் கொவிட் 19 நிலைமையை கருத்திற் கொண்டு நகர வரத்தக சங்கத்துடன் இணைந்து நேற்று 19 திகதி தொடக்கம் எதிர் வரும் 26 ஆம் திகதி வரை சகல கடைகளையும் மூடவுள்ளதாக நகர சபையின் தலைவர் ராஜமணி பிரசாத் தெரிவித்தார்.

கடந்த சில தினங்களாக கொட்டகலை மற்றும் தோட்ட புறங்களில் அதிகரித்து வரும் மரண சம்பவங்களை அடுத்து குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் தேவையற்ற விதத்தில் நகருக்கு வருவதை தவிர்க்குமாறும் சுகாதார விதிமுறைகளை பேணி நாட்டில் சட்டதிட்டங்களை கடைபிடித்து முடிந்தளவு பாதுகாப்பாக இருக்குமாறும் அவர் பொது மக்களை கேட்டுக்கொண்டார்.

நேற்று (20) கொட்டகலை நகர சபையின் தலைவர் ராஜமணி பிரசாத்தின் வழிகாட்டலில் நகரம் முழுவதும் தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

நேற்று கொட்டகலை சில்லறை வர்த்தக நிலையங்கள் புடவை கடைகள் உள்ளிட்ட அனைத்து கடைகளும் மூடப்பட்டிருந்ததுடன் அரச நிறுவனங்கள் மாத்திரம் திறக்கப்பட்டிருந்தன.

இது குறித்த கொட்டகலை நகரசபையின் தலைவர் ராஜமணி பிரசாத் கருத்து தெரிவிக்கையில்

கொட்டகலை நகரத்திற்கு சமீபமாக கடந்த தினங்களில் கொரோனா தொற்றுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார். அவருடைய உறவினர்கள் நகரத்தில் பல பகுதிகளுக்கு சென்று வந்துள்ளதாக அறியப்படுகிறது. இந்நிலையில் மக்களை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் கொட்டகலை வர்த்தக சங்கத்துடன் இணைந்து நேற்று 19 திகதி தொடக்கம் எதிர்வரும் 26 திகதி வரை கடைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஆகவே வர்த்தகர்கள் கடைகளை மூடிவிட்டு முடிந்தளவு வீட்டிலேயே இருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரமின்றி அயலிலுள்ள மக்கள் நகரங்களுக்கு வராது ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இதே நேரம் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலின் கீழ் இந்த வராம் முழுவதும் தொற்று நீக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கண்டி தேசிய வைத்தியசாலையில் ஆர்ப்பாட்டம்



**(அக்குறணை குறூப் நிருபர்)**

கண்டி தேசிய வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் மற்றும் சுகாதாரத் துறை ஊழியர்கள் இணைந்து வைத்தியசாலைக்கு அருகில் அமைதியான முறையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொவிட் பரவுதலைக் கட்டுப்படுத்த நாட்டை சில நாட்களுக்கு முற்றாக முடக்க வேண்டும் என்றும் அப்படி இல்லாத பட்சத்தில் சுகாதார துறையில் கடமைபுரியும் தாமும் தமது குடும்பங்களும் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். இதனை அரசுக்கு வலியுறுத்தும் வகையில் இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## காவத்தை நகர வர்த்தக நிலையங்களுக்கு பூட்டு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

காவத்தை நகரில் அத்தியாவசிய வர்த்தக நிலையங்களை தவிர ஏனைய சகல வர்த்தக நிலையங்களும் இன்று முதல் பூட்டப்படவுள்ளன.

கொரோனா தொற்று அதிகரித்து வருவதன் காரணத்தால் காவத்தை நகரிலுள்ள அத்தியாவசிய வர்த்தக நிலையங்ளை தவிர ஏனைய சகல வர்த்தக நிலையங்களும் இன்று முதல் (20) எதிர்வரும் ஓகஸ்ட் 31ஆம் திகதி வரை 12 நாட்கள் மூடப்படவுள்ளன. காவத்தை பிரதேச சபை தலைவர் கே.எம். ஜினதாச, காவத்தை பிரதேச செயலாளர் கயணி கரனாதிலக்க, காவத்தை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஸ்ரீநி அலகப்பெரும, காவத்தை சுகாதார வைத்திய அதிகாரி லக்மால் சுமனவீர, காவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அதுல பெரேரா மற்றும் காவத்தை வர்த்தக சங்கம் என்பன ஒன்றிணைந்து இத்தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கின் குரல்

# சுயமாக முடங்குவதே மக்களுக்குள்ள ஒரே தீர்வு

### கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(அம்பாறை மாவட்ட குறூப்,காரைதீவு குறூப் நிருபர்கள்)

கோவிட் 19 மூன்றாம் அலையில் நாட்டில் டெல்டா மிக வேகமாக பரவி வருவதன் மூலம் கல்முனை பிராந்தியமும் அதற்கு விதிவிலக்கல்ல என்றும், பொதுமக்கள் தாங்களாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலமே நாட்டையும் மக்களையும் காப்பாற்ற முடியும் என கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி சுகுணன் தெரிவித்தார்.

கல்முனைப் பிராந்தியத்தின் தற்போதைய சுகாதார நிலைமை குறித்து கருத்துக் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், கடந்த 24 மணித்தியாலத்திற்குள் கல்முனைப் பிராந்தியத்தில் ஆறு பேர் மரணம் அடைந்துள்ளனர். ஒரு பிரதேசத்தின் அபாய நிலைமையை மரணத்தின் எண்ணிக்கை மூலமே அறியக்கூடியதாக இருக்கும். ஏனைய சுகாதார பிராந்தியங்களுடன் ஒப்பிடும் பொழுது கல்முனைப் பிராந்தியத்தின் மரண வீதம் நான்கு மடங்காக காணப்படுகின்றது.



இனவாதத்தையும் பிரதேச வாதத்தையும் சிலர் இக் காலப்பகுதியில் பரப்புரை செய்வதன் மூலம் அவர்களையும் அவர்களைச் சார்ந்த சமூகத்தினரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது புலனாகின்றது. இப்பிராந்தியத்தில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் பொதுமக்கள் 60 வயதை தாண்டியவர்கள் இருப்பினும், இதில் கிட்டத்தட்ட 5 தொடக்கம் 10 ஆயிரம் வரையான பொதுமக்கள் தடுப்பூசியை இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை.

இன்றுவரை அவர்களில் 100க்கும் அதிகமானவர்கள் இறந்து விட்டார்கள். சுகாதாரத் துறையை பொறுத்த வரையில் அத்துறையில் பணியாற்றுகின்ற சிற்றூழியர் தொடக்கம் வைத்தியர்கள் வரையில் அனைவரும் மிகவும் களைப்படைந்து இருக்கின்றார்கள். தற்பொழுது இருக்கும் ஆயிரம் நோயாளிகளில் 425 நோயாளிகளை மட்டும் தான் வைத்தியசாலைகளில் வைப்பதற்குரிய கட்டில்கள் காணப்படுகிறன. மிகுதி 575 நோயாளிகள் வீட்டிலேயே தங்கி சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

பிராந்தியத்தில் இப்பொழுது வைத்தியசாலைகளில் நோயாளிகளை வைத்து சிகிச்சை அளிப்பதற்கு போதியளவான கட்டில்கள் இல்லை, உபகரணங்கள் இல்லை. உயிரை காக்கின்ற ஒட்சிசன் கூட நாளை இருக்குமா என்று தெரியவில்லை. இருந்தாலும் ஓய்வின்றி சுகாதாரத்தறையினர் உங்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இங்கு பொதுமக்களோ எந்தவிதமான அக்கறையுமின்றி சந்தோசமாக குடும்பத்துடன் உலாவிக் கொண்டிருக்கிறார்கள்.

சுகாதாரத் துறையை சேர்ந்த பலர் உங்களை காப்பாற்ற அர்ப்பணிப்புடன் பணியாற்றியதனால் கொவிட் நோயாளிகளாக சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

இப்பொழுதாவது விபரீதத்தை உணர்ந்து கொண்டு உங்கள் பிரதேசங்களை நீங்களாக முடக்கி கொள்ளுங்கள். வர்த்தக சங்கங்கள், உள்ளூராட்சி சபைகள், கோவில்கள், பள்ளிவாசல்கள், சமூக நல நிறுவனங்கள் இதுவிடயத்தில் உடனடி கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## களுவாஞ்சிகுடியில் அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்றுமுதல் முடக்கம்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்



களுவாஞ்சிகுடி பிரதேசத்திலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்று வியாழக்கிழமை (19) மூடப்பட்டிருந்தன. மண்முனை தென் எருவில்பற்று பிரதேசத்திலுள்ள கிராமங்களில் சடுதியாக அதிகரித்துவரும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் வகையில் இப் பிரதேசத்திலுள்ள பொதுச்சந்தை உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களையும் வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை தற்காலிகமாக மூடுவதற்கு களுவாஞ்சிகுடி, பட்டிருப்பு வர்த்தக நலன்புரி சங்கத்தினால் சுயமாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி வர்த்தக சங்க தலைவர் வ.குணசேகரன் தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரவைத்திய அதிகாரிபிரிவில், கடந்த பத்து தினங்களில் 200 இற்கும் மேற்பட்ட கொரோனா தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். கொரோனா தொற்றின் மூன்றாவது அலைகாரணமாக களுவாஞ்சிகுடி பிராந்தியத்தில் 07 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து பிரதேசத்தில் பொதுமக்களை கொரோனா தொற்றில் இருந்து பாதுகாக்கும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் யாவரும் இறுக்கமான சுகாதார விதிமுறைகளை பின்பற்றுமாறும், அத்தியாவசிய தேவை தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக வீட்டில் இருந்து அநாவசியமாக வெளியில் வந்து நடமாடவேண்டாம் எனவும் கேட்கப்பட்டுள்ளனர்.

பிராந்தியத்தில் கொரோனா தொற்றுப்பரவலை கட்டுப்படுத்தும் விதமாக களுவாஞ்சிகுடி, பட்டிருப்பு வர்த்தக நலன்புரிச் சங்கத்தினர் அனைவரும் ஒருமனதாக தங்களது வர்த்தக நடவடிக்கைகளை நான்கு தினங்களுக்கு இடைநிறுத்தி வைப்பதற்கு தீர்மானித்துள்ளனர். இதனையடுத்து இங்குள்ள மருந்தகங்கள் தவிர்ந்த அனைத்து வர்த்தக நிலையங்களும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு மாகாண நிதிப் பிரிவு பிரதி பிரதம செயலாளராக நியமனம்

புளியந்தீவு குறூப் நிருபர்



கிழக்கு மாகாண சபையின் நிதிப் பிரிவுக்கான பிரதிப் பிரதம செயலாளராக எஸ்.குலதீபன் கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா ஜகம்பத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை செவ்வாய்க்கிழமை (17) பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் கணக்காளர் சேவையில் அதிவிடே தரத்தைச் சேர்ந்தவர். கிழக்கு மாகாணத்தின் பல திணைக்களங்களிலும், மத்திய அரசின் கீழ் பல அமைச்சுக்களிலும் பிரதம கணக்காளராக பதவி வகித்திருப்பது குறிப்பிடத்தக்கது. கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தவரையில் அதன் நிதித்துறையை கையாள்வதில் ஒரு சில சீரான மாற்றங்கள் இவரது காலத்தில் இடம்பெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவர் களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த அசிரியர் இ.சிங்கநாயகம் தம்பதிகளின் புதல்வராவர்

## அட்டாளைச்சேனையில் கொவிட் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)



தற்போது நாட்டில் நிலவிவரும் கொவிட் நிலைமையினை கருத்தில் கொண்டு அதனை கட்டுப்படுத்தும் பொருட்டு அட்டாளைச்சேனை பிரதேச சபை பிரிவில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் கூட்டம் புதன்கிழமை (18) அட்டாளைச்சேனை பிரதேச சபையில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல்.அமானுல்லா தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஏ.சாபிர், அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.அகிலன், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் உட்பட அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் பிரதேச ஜீம்ஆப் பள்ளிவாசல் மற்றும் வர்த்தக சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவ் விசேட கூட்டத்தின் போது அட்டாளைச்சேனை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களை கொவிட் தொற்றிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மைதானங்களில் விளையாடுதல், கடற்கரை பிரதேசங்களில் பொது மக்கள் ஒன்று கூடுதல், ஹோட்டல்களில் அதிகளவானோர் கூடியிருத்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு உடனடியாக தடைவிதித்தல் மற்றும் அதிகளவானோர் ஒன்று கூடி வயல் வெளிகள் சுற்றுலா பிரதேசங்கள் போன்ற இடங்களுக்கு சுற்றுலா செல்வது போன்ற செயற்பாடுகளில் இருந்து பொதுமக்களை தவிர்ந்து கொள்ளுமாறு அறிவுறுத்துவதுடன் பள்ளிவாசல் ஒலிபெருக்கிகளில் அறிவிப்புச் செய்தல்.

மேலும் சந்தைப் பகுதிகளுக்குச் செல்லும் பொது மக்கள் சுகாதார விதிமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டுமென்று அறிவுறுத்துவதுடன், இது தொடர்பில் பிரதேச செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் பிரதேச சபை அதிகாரிகள் ஒன்றிணைந்து மேற் கூறப்பட்ட இடங்களுக்குச் சென்று திடீர் பரிசோதனைகளை முன்னெடுத்தல் போன்ற தீர்மாணங்கள் இதன் போது எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மருதமுனையில் அல்மனார், ஷம்ஸ் மத்திய கல்லூரிகள் தரம் உயர்வு

(மருதமுனை தினகரன் நிருபர்)

மருதமுனையில் அல்மனார மத்திய கல்லூரி, ஷம்ஸ் மத்திய கல்லூரி என்பன தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் ஆயிரம் தேசிய பாடசாலைகள் உருவாக்கும் செயற்திட்டன் கீழ் இப் பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்படத்தக்கது.

இப் பாடசாலைகள் தரம் உயர்த்தப்பட்டமைக்கான உத்தியோக பூர்வ கடிதம் திங்கட்கிழமை (16) அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யு வீரசிங்கத்தின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

பாராளுமன்னற உறுப்பினரின் செயலாளர் சந்திரசிறி மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப், மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி அதிபர் எம்.எம்.ஹிர்பஹான் ஆகியோரிடம் தரம் உயர்த்தப்பட்ட பாடசாலைகளின் உத்தியோக பூர்வமான கடிதங்களை கையளித்தார். இந் நிகழ்வில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கான அமைப்பாளர் சர்மில் ஜஹான் கலந்து கொண்டார்.

## கொவிட் வைத்திய ஆலோசனைகளுக்கு அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம்

### கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர்

(ஒலுவில் விசேட நிருபா்)

கிழக்கு மாகாணத்தில் கொவிட் தொற்று பற்றிய வைத்திய ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவதற்கு புதிய அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ளவர்கள் 070 6800 368 என்ற இலக்கத்துக்கும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளவர்கள் 070 6800 369 என்ற இலக்கத்துக்கும், திருகோணமலை மாவட்டத்திலுள்ளவர்கள் 070 6800 370 என்ற இலக்கத்துக்கும் தொடர்பு கொண்டு கொவிட் 19 நோய் பற்றிய சகல ஆலோசனைகளையும் தாமதமின்றி பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்தார்.

அந்தந்த மாவட்ட மக்கள் குறித்த மாவட்டத்துக்கு வழங்கி வைக்கப்பட்ட அவசர தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு கொவிட் 19 நோய்த் தொற்று பற்றிய மேலதிக வைத்திய ஆலோசனைகளையும், அதற்கான தீர்வுகளையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவித்துள்ளார்.



கிழக்கு மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சமூக நல மருத்துவர்கள் மற்றும் வைத்தியர்கள் கடந்த வருடம் முதல் இற்றை வரையான காலம் வரை கொவிட் 19 நோய் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகளையும், நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும் இமியூன் வூஸ்ட்டர் பானங்களையும், துண்டுப் பிரசுரங்களையும் வீடு வீடாகச் சென்று வழங்கி வைத்து வருகின்றனர்.

குறிப்பாக, தனிமைப்படுத்தலில் இருக்கும் மக்களுக்கும், ஏனைய மக்களுக்கும், பாதுகாப்புப் படையினர், பொலிஸார், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கொவிட் 19 நோய்த் தொற்று பற்றிய மேலதிக வைத்திய ஆலோசனைகளையும், அதற்கான சிகிச்சைகளை பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கில் மத்திய அரசினால் கொவிட் 19 இற்கென அவசர தொலைபேசி இலக்கங்கள் நாடளாவிய ரீதியில் வழங்கி வைக்கப்பட்டு அதற்கான முன்னெடுப்புக்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனையில் 3000 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

(பெரியநீலாவணை விசேட நிருபர்)



கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நற்பிட்டிமுனை 01 கிராமத்தை சேர்ந்த 32 வயதுடைய இளைஞர் ஒருவர் சுமார் 3000 போதை மாத்திரைகளுடன் புதன்கிழமை (18) கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, பெரியநீலாவணை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, அம்பாறை மாவட்ட பிரிவுக்கு பொறுப்பான விஷேட அதிரடிப்படையினரின் சிரேஸ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி கொமாண்டர் ஜே. ஆர். சேனடீரா, மட்டக்களப்பு மாவட்ட பிராந்தியத்துக்கு பொறுப்பான கொமாண்டர் டீ..சி. விவிதவிதான ஆகியோரது ஆலோசனைக்கு அமைய பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பாளர் ஆர்.ஏ.டீ.சி.எஸ். ரத்னாயக்க தலைமையிலான குழுவினர் விரைந்து சூட்சுமமான முறையில் சுற்றிவளைத்தனர்.

இதன் போது சந்தேகத்திற்கிடமான சொறிக்கல்முனை பகுதியில் வைத்து குறித்த நபர் போதை மாத்திரைகளை ஸ்கூட்டி ரக மோட்டார் வண்டிக்குள் எடுத்துச் செல்வதற்கு முற்பட்ட போது, மாறுவேடம் தரித்து போதை மாத்திரைகளை வாங்குபவர்கள் போன்று குறித்த நபரை அணுகிய விசேட அதிரடிப்படையினர் போதை மாத்திரைகளுடன் சந்தேகநபரை கைது செய்தனர்.

மோட்டார் சைக்கிளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 3000 போதை மாத்திரைகள் மற்றும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை விசேட அதிரடிப்படையினர் கல்முனை பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் பிரபல வைத்தியசாலை ஒன்றில் சமையலறை பகுதியில் பணியாற்றுபவர் என்பதும், இந்த போதை மாத்திரைகளின் பெறுமதி சுமார் மூன்று இலட்சம் ரூபாவாக இருக்கலாம் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மூதூர் சுகாதார பிரிவில் தொற்றாளர்கள் அதிகரிப்பு; சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவிப்பு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தினமும் கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வரும் நிலையில், மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி என்.எம்.எம்.கஸ்ஸாலி, மூதூர் பிரதேச தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ், மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் ஆகியோரின் ஆலோசனைக்கமைய திங்கட்கிழமை (16) முதல், கீழ்க்காணும் நடைமுறைகளை பின்பற்றுமாறு பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வறித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இதுவரையில் 50 இற்கும் மேற்பட்ட தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். இரண்டு மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் பொது மக்கள் அவசர தேவையில்லாத பயணங்களை நிறுத்துவதுடன், முகக் கவசம் அணிதல், கைகளை சுத்தமாக வைத்திருத்தல், சமூக இடைவெளிகளை பேணியவாறு தமது கருமங்களை நிறைவு செய்வதுடன் வீடுகளில் இருக்குமாறும் வேண்டப்பட்டுள்ளனர்.

மேலும் குடும்ப ஒன்றுகூடல்களை தவிர்த்துக் கொள்வதுடன், திருமணம் உள்ளிட்ட ஏனைய சடங்குகளையும், பாடசாலை வகுப்புக்கள், ஏனைய வகுப்புக்கள் போன்றவற்றையும் நிறுத்துதல்.

இதேவேளை வணக்கஸ் தலங்களை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடுதல் போன்ற விடயங்களை மறு அறிவித்தல் வரை கவனத்திற்கொண்டு நடக்குமாறும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் குறிப்பாக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் கொரோனா அசாதாரண நிலைமையை கருத்திற் கொண்டு, தமது வர்த்தக நிலையங்களை மூடுவது தொடர்பாக ஆலோசிக்குமாறும் அவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இக்கட்டான காலத்தில் யாழ். மக்களுக்கு பெற்றுக்கொடுத்ததை இன்று மேலும் வலுவடையச் செய்துள்ளார் அமைச்சர் டக்ளஸ்

## வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ஐங்கரன் சுட்டிக்காட்டு!

வடபகுதி மக்களின் பிரச்சினைகளுக்கும் தேவைப்பாடுகளுக்கும் தீர்வை காண்பதற்கு அங்கீகாரம் பெறும்வகையில் அமைச்சரவை பத்திரம் சமர்பிக்கக்கூடிய அந்தஸ்துள்ள ஒருவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே இருக்கின்றார்.

இதை அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சீன மக்கள் குடியரசின் வெளிநாட்டு அமைச்சருக்கும் பகிரங்கமாக தனது அரசாங்கத்தின் வடக்கு, கிழக்கு மக்களின் சார்பான பிரதிநிதி என்றும் அறிவித்திருந்ததையும் அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

அந்தவகையில் யாழ் மாவட்டத்தில் எந்தத் துறைசார் திட்டத்தையும் யார் முன்னெடுத்ததாக கூறியிருந்தாலும் அதை பெற்றுக்கொடுப்பதற்கான திறன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மட்டுமே உள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வலிகாமம் கிழக்கு நிர்வாகப் பொறுப்பாளர் ஐங்கரன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

“சமுர்த்தி அருணலு” வேலைத் திட்டத்தின் கீழ் சமுர்த்தி பயனாளிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடு யுத்தத்தால் அழிந்துகொண்டிருந்தபோது வறிய மக்களின் வயிற்றிலடித்து தமது வர்த்தக நிறுவனங்களை பலப்படுத்திக்கொண்டவர்கள் இன்று மக்களின் மீது கரிசனை காட்டுவது வேடிக்கையாகவுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அன்றுமுதல் இன்றுவரை மக்களின் நலனையே கொள்கையாகக் கொண்டு அதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுத்துவருகின்றார்.



அந்தவகையில்தான் சமுர்த்தி திணைக்களத்தினூடாக கிடைக்கப் பெறுகின்ற நலன்களை வடபகுதி மக்களும் அனுபவிப்பதற்கான வழிவகையை அன்று செய்திருந்தது மட்டுமல்லாது அதன் தொடர்ச்சியாக இன்றும் கிடைக்க வழிசமைத்துக் கொடுத்துள்ளார்.

ஆனால் வறிய மக்களின் நலன்களை மட்டுமே நோக்காகக் கொண்டு எத்தகைய அச்சுறுத்தல்கள் வந்தபோதும் கூட ஓடி ஒழியாது பல தசாப்தங்களாக மக்களுடன் மக்களாக இருந்து சேவையாற்றுபவர்களுக்கும் இன்று சிலர் பாடம் கற்றுக்கொடுக்க முயற்சிக்கின்றனர்.

இத்தகையவர்களுக்கு இந்த சமுர்த்தித் திட்டம் எமது யாழ் மாவட்டத்திற்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பது கூட தெரிந்திருக்க வாய்ப்பிருக்காது. ஆனால் இன்று தாங்கள் தான் அத்தனையையும் மக்களுக்கு பெற்றுக்கொடுப்பதுபோல ஓடித்திருந்து மேடைகளில் தமக்கு அழைப்பு விடுக்கும்படி அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து விளம்பரம் தேடித்திரிவதுடன் தமது ஊடகங்களில் எம்மை நோக்கி சேறடிப்புகளையும் செய்கின்றனர்.

தற்போது நாட்டின் அசாதாரண சூழல் நிலையிலும் மக்களுக்கான பல அபிவிருத்தி திட்டங்களை ஜனாதிபதியுடன் கலந்துரையாடி உடனுக்குடன் பெற்றுத் தந்துகொண்டிருக்கின்றார். இதற்கு உதாரணமாக தடுப்பூசிகள் விடயத்தைக் கூறலாம்.

அதுமட்டுமல்லாது குறித்த நபர்களும் கடந்த நல்லாட்சியில் இருந்து மக்களை ஏமாற்றியதே தவிர வேறு எதனையும் செய்யவில்லை. ஆனால் இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்களை விரைவாகச் செய்துகொண்டிருக்கின்றார்.

அன்றைய காலகட்டத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த வேதனம் 2000 ரூபா. அவர்கள் மக்களுக்கான திட்டங்களை முன்னெடுக்கும் பொழுது ஈழ மக்கள் ஜனநாயக கட்சியுடன் இணைந்து அவர்களுக்கு சார்பான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்கிறார்கள் என சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மிரட்டப்பட்டது மட்டுமல்லாது சுட்டுக் கொல்லப் பட்டார்கள்.

ஆனால் அவர்கள் தமது உயிர்களை துச்சமாக நினைத்து. அதையும் தாண்டி மக்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் சென்றார்கள்.

அதுமட்டுமல்லாது தற்பொழுது கொரோனா வைரஸ் தாக்கம் காலகட்டத்தில் கூட மக்களுக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இன்றும் கூட அவர்கள் தங்களது உயிர்களை தியாகம் செய்கின்றார்கள்.

அந்தவகையில் சமுர்த்தி திட்டத்தின் ஊடாக மக்களுடைய வாழ்வாதாரத்தை மேலும் சிறப்பானதாக முன்னெடுப்பதற்கு பல யோசனைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னெடுத்து வருகின்றார். அதன் ஒரு அங்கமாகவே இந்த உதவித் திட்டமும் அமைகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் நடமாடும் கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டம்

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

நாட்டில் தீவிரமாக பரவி வரும் கொரோனா வைரஸ் நோயை கட்டுப்படுத்தும் நோக்கில் இராணுவ வைத்திய பிரிவினால் நடமாடும் கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்று (19) யாழ் போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இராணுவத்தின் 512 ஆவது பிரிகேட் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரினதும் வீடுகளுக்குச் சென்று கொரோனா தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏற்கனவே நாடு பூராகவும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடமாடும் தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டத்தின் ஒரு அங்கமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் குறித்த வேலைத் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# கொரோனா தொற்றால் பெண் மரணம்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பம்பைமடு தனிமைப் படுத்தல் மையத்தில் அனுமதிக்கப் பட்டிருந்த பெண் ஒருவர் கொவிட் தொற்று நோயால் நேற்று (19) மரணமடைந்துள்ளார்.

இப் பெண்ணுக்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அவர் பம்பைமடுவில் அமைந்துள்ள கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்துள்ளார்.

# கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு செல்ல மறுத்த ஹோட்டல் உரிமையாளருக்கு வழக்கு

வவுனியா விசேட நிருபர்

கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு செல்ல மறுத்த வவுனியாவின் பிரபல ஹோட்டல் உரிமையாளர் ஒருவருக்கு எதிராக சுகாதாரப் பிரிவினரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், நீதிமன்றில் வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, சின்னப்புதுக்குளம் பகுதியில் ஹோட்டல் நடத்தி வரும் அதன் உரிமையாளர் (வயது 59) ஒருவருக்கு கடந்த 11 ஆம் திகதி தொற்று உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து அவரை சிகிச்சை நிலையத்திற்கு கொண்டு செல்ல முற்பட்ட போது அவர் அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், உயர்மட்ட அழுத்தம் காரணமாக வவுனியாவில் 12 தொற்றாளர்கள் சிகிச்சை நிலையத்திற்கு கொண்டு செல்லப்படவில்லை என ஊடகங்களில் செய்தி வெளியாகிய நிலையில் மறுநாள் சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள், சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் குறித்த நபரை சிகிச்சை நிலையத்திற்கு கொண்டு செல்ல முயற்சித்த போது தொற்றில் உள்ளவர்களை வீட்டில் வைத்து சிகிச்சை செய்ய முடியும் என்ற சுற்று நிருபத்தை காட்டி அதற்கு மறுப்பு தெரிவித்திருந்தார்.

இதன்போது மருத்துவர்கள் அவரை வீட்டில் வைத்து சிகிச்சையளிப்பதற்கான சுற்று நிருபத்திற்கு அமைவாக அவரது உடல் நிலை உள்ளதா என பரிசோதித்த போது குறித்த தொற்றாளருக்கு சுகர் 9.8 மில்லிகிராம்/டில் காணப்பட்டதுடன், உடலில் ஒட்சிசனின் அளவும் குறைவாக இருந்துள்ளது. அத்துடன் நெஞ்சுப் பகுதியில் சத்திர சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. சுற்று நிருபத்திற்கு அமைவாக இவ்வாறான நபரை வீட்டில் வைத்து சிகிச்சையளிக்க முடியாது. இதனால் தொற்றாளருக்கு ஆபத்து ஏற்படக் கூடும் எனக் கருதிய சுகாதார பிரிவினர் அவரை சிகிச்சை நிலையத்திற்கு கொண்டு செல்ல முயசித்தனர். அவர் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை.

# தென்மராட்சியில் மனைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேலைத் திட்டம்

சாவகச்சேரி விசேட நிருபர்

"சமுர்த்தி அருணலு " திட்டத்தில் நாட்டில் இரண்டு இலட்சம் மனைப் பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று 13 திட்டங்கள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டன.

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக நிதி அமைச்சின் வழிகாட்டுதலில், சமுர்த்தி வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி உதவியுடன் குறித்த வேலைத்திட்டம் இடம்பெறுகிறது.



இதன் ஓர் அங்கமாக தென்மராட்சி பிரதேசத்தில் 13 சமுர்த்திப் பயனாளிகளுக்கு மாட்டுத் தொழுவம், ஆட்டுத் தொழுவம் மற்றும் கோழிக் கூடு ஆகியன அமைத்துக் கையளிக்கப்பட்டது.

சமுர்த்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் பிரதிநிதியுமான தி.தங்கவேலு, மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அலுவலக திட்ட மேற்பார்வையாளர் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளியிடம் வாழ்வாதாரத் திட்டத்தைக் கையளித்திருந்தனர்.

# அளம்பில் வடக்கில் காடழிப்பினை தடுக்க கோரிக்கை

புதுக்குடியிருப்பு விசேட நிரூபர்

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேசத்திற்கு உட்பட்ட அளம்பில் வடக்குப் பகுதியில் காடழிப்பு இடம்பெற்று வருவதாகவும் இதனைத் தடுக்குமாறும் முல்லைத்தீவு முள்ளியவளை வீதியில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இயற்கை வளத்தினை காப்பாற்றக் கோரி இனம் தெரியாதவர்களினால் இந்த வாசகங்கள் ஊடாக கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. வீதியில் மஞ்சல் வர்ணத்தில் எழுதப்பட்ட எழுத்துக்களில், 'இராணுவமே எமது அளம்பில் காட்டினை காப்பாறு, எமது காடுகளை விற்கும் கிராம அபிவிருத்திச் சங்கம், இலஞ்சம் வாங்கி அளம்பில் வடக்கு காடுகளை விற்போரே எமது வளத்தினை காப்பாற்றுங்கள்' போன்ற வசனங்கள் எழுதப்பட்டுள்ளன.

# தர்மபுரம் பகுதியில் புதையல் அகழ முற்பட்ட நால்வர் கைது

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அழகாபுரி பகுதியில் புதையல் தோண்ட முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய குறித்த பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் வவுனியாவைச் சேர்ந்த இருவர், யாழ்ப்பாணம், விசுவமடுப் பகுதிகளைச் சேர்ந்த தலா ஒருவர் என்று தர்மபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்களிடம் இருந்து புதையல் இருப்பதைக் கண்டுபிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஸ்கானர் கருவி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

கைதானவர்கள் நாளை நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# புதுக்குடியிருப்பில் நாளை தொடக்கம் வர்த்தக நிலையங்கள் பூட்டு

புதுக்குடியிருப்பு விசேட நிரூபர்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச வர்த்தக நிலையங்களை நாளை சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை பூட்டி கொரோனா தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இது குறித்து புதுக்குடியிருப்புப் பிரதேச வர்த்தக சங்கத்தினர் நேற்று வர்த்தக சங்கத்தினை கூட்டி தீர்மானம் எடுத்துள்ளார்கள்.

நாளை சனிக்கிழமை தொடக்கம் (21.08.21) எதிர்வரும் வெள்ளிக்கழமை 27.08.21 அதிகாலை வரை புதுக்குடியிருப்பில் உள்ள வணிக நிலையங்களை பூட்டி சுய கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்கான தீர்மானத்தினை வணிகர் சங்கம் எடுத்துள்ளது.

பிரதேசத்தில் உள்ள மக்களை கொரோனாவின் பிடியில் இருந்து பாதுகாத்துக்கொள்ளும் நோக்கில் முச்சக்கரவண்டி சங்க நிர்வாகம், சிகை அலங்கரிப்பு சங்க நிர்வாகம் என்பன வர்த்தக சங்கத்தின் ஒன்று கூடலில் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத் தலைவர் நீதன் அறிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு உட்பட்ட மக்கள் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது

இவ் அறிவித்தலை மதிக்காது தங்களது வர்த்தக நிலையங்களைத் திறந்தால் தங்களுக்கு எதிராக புதுக்குடியிருப்பு சுகாதாரப் பிரிவினரின் தனிமைப் படுத்தல் சட்டத்தின் கீழ் தாங்களும் தங்களது வர்த்தக நிலையங்களும் தனிமைப் படுத்தப்பட்டு அன்டிஜன் பரிசோதனையும் பீசிஆர் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு தாங்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவீர்கள் என்றும் வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

# நயினாதீவு வருவதை தவிர்க்குமாறு கோரிக்கை!

யாழ்.விசேட நிருபர்

கொரோனோ பெருந்தொற்று காரணமாக நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலயத்தினுள் மறுஅறிவித்தல் வரையில் பக்தர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது.

அது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று தாக்கத்தின் தீவிரத்தன்மை காரணமாக மறு அறிவித்தல் வரை ஆலயத்திற்குள் அடியார்கள் எவரும் அனுமதிக் கப்பட மாட்டார்கள் என்பதைத் தெரிவிப்பதுடன் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தருவதை முற்றாக தவிர்த்து தங்கள் இல்லங்களில் இருந்து அம்பாளை மனக்கண்ணினால் வேண்டி வழிபாடு செய்யுமாறு கேட்டு கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னாரில் 11 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

தலைமன்னார் விஷேட நிருபர்

மன்னாரில் புதன் கிழமை (18.08.2021) கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய 11 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் 05 நபர்களுக்கும் சமூகத்திலிருந்து 02 பேருக்கும், கடற்படை மற்றும் பொலிஸ் பகுதியிலிருந்து 04 பேருக்குமே இக் கொரோனா தொற்றுநோய் உறுதி செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிக்கை தெரிவிக்கின்றது.

இவ் அறிக்கையின்படி இது வரைக்கும் மன்னார் பகுதியில் மொத்தமக 1341 தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

# ஆலமுல் இஸ்லாம்

மஜ்லிஸ் மரிக்கார்

aalamulislam.tkn@lakehouse.lk

# தொற்று நோய்கள் உலகிற்கு புதியவையா?

ஒரு சுருக்க வரலாற்று நோக்கு



தொற்றுநோய்கள் காரணமாக வரலாறு நெடுகவும் பல மில்லியன் கணக்கான மக்கள் மரணமடைந்துள்ளார்கள். இதற்கு பிளேக் நோய் பரவல் நல்லதொரு உதாரணமாகும். இத்தகைய நிலையில் இன்றைய கொவிட் 19 தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியில் நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதே இன்றைய முக்கிய பேசுபொருளாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இஸ்லாத்தின் நோக்கங்களில் உயிரை பாதுகாப்பதும் முக்கியமான ஒன்றாகும். இவ்வகையில் நாம் எமது உயிரை பாதுகாத்துக் கொள்வதோடு பிற உயிரினங்களது உயிர்களைப் பாதுகாக்கவும் ஏவப்பட்டுள்ளோம்.

அந்த வகையில் இற்றைக்கு 650 வருடங்களுக்கு முன்னர் இது தொடர்பில் எழுதப்பட்ட புத்தகமாக 'பத்லுல் மாஊன் பீபழ்லித் தாஊன்' என்ற நூல் விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்நூலை ஹதீஸ் துறையில் நன்கு பரிச்சயமானவரும் ஸஹீஹுல் புகாரிக்கு விளக்கவுரை எழுதியவருமான இமாம் இப்னு ஹஜர் அல் அஸ்கலானி (ரஹ்) அவர்கள் எழுதினார்கள். அந்த நூல் இன்று நாம் எதிர்கொண்டுள்ள தொற்றுநோய்ப் பரவலை எதிர்கொள்ள அவரது வழிகாட்டல்கள் எவ்வளவு தூரம் அவசியமானது என்பதனை எடுத்துக்காட்டுகின்றது. அவர் தொற்று நோயொன்றின் அகோரத்தினால் தனது மூன்று பிள்ளைகளை இழந்தவராவார்.

இன்றைய உலக நிலைகளை பார்த்துக்கொண்டு பேசுவது போன்று அவர் அன்றே பேசியுள்ளார். அன்றும் தொற்று நோயினால் உலகளாவிய ரீதியில் உயிர் பீதி நிலவியுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தனிமைப்படுத்தல், சமூக இடைவெளி பேணுதல், பயணக்கட்டுப்பாடுகள், முற்காப்பு சட்டங்கள், வைரஸ் பாதிப்புக்கு உள்ளோருக்கான சிகிச்சைகள், தனியான மருத்துவமனைகள் உருவாக்கப்படல், பாதிப்புக்கு உட்பட்டோரை உடனடியாக வெளியேற்றுதல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்த நூலில் வரலாற்றில் இடம்பெற்ற ஐந்து தொற்றுகள் குறித்து அவர் குறிப்பிட்டுள்ளார். அதாவது நபி (ஸல்) அவர்களின் காலத்தில் மதாஇன் பிரதேசத்தில் 'ஷெரோயாஹ்' என்ற தொற்று ஏற்பட்டுள்ளது. உமர் (ரழி) காலத்தில் பலஸ்தீனில் 'இமவாஸ்' என்ற தொற்று ஏற்பட்டுள்ளது. அத்தோடு 'ஜாரிப்', 'பதயாத்', 'அஷ்ராப்' போன்ற பல தொற்று நோய்களும் பரவியுள்ளன. இந்நோய்களால் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளார்கள். ஹி 09 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் கொள்ளை நோய் (பிளேக் நோய்) ஐரோப்பாவில் பரவிய போது கருப்பு மரணம் எனப் பெயரிட்டார்கள். இந்நோயினாலும் இலட்சக்கணக்கான மக்கள் மரணித்துள்ளார்கள்.

அதேநேரம் தொற்று நோய்களால் பல முக்கியஸ்தர்களையும் உலகம் இழந்திருக்கின்றன. குறிப்பாக அபூ உபைதா இப்னுல் ஜர்ராஹ் (ரலி), ஷர்ஹபீல் இப்னு ஹஸனா(ரலி), யஸீத் இப்னு அபீ ஸுப்யான் (ரலி), முஆத் பின் ஜபல் (ரலி) போன்ற ஸஹாபிகளும் அபுல் அஸ்வத் அத்துஅலி, முஹம்மத் முர்தழா அஸ் ஸுபைதி போன்ற மொழியியலாளர்களும் இப்னுல் வர்தி, அப்துல் வஹ்ஹப் அஸ்ஸுப்கி போன்ற வரலாற்றாய்வாளர்களும் சுட்டிக்காட்டத்தக்கவர்களாவர்.

இந்நூலில் அவர் ஐந்து விடயங்களை விளக்கியுள்ளார். தொற்று நோய் என்பது ஒரு சோதனை என்று முதற்பகுதியிலும் அடுத்த பகுதியில் தொற்று நோய் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. இரத்தம் அசுத்தமடைவதால் காய்ச்சல் ஏற்பட்டு உடம்பு வீங்குவதுதான் தொற்று நோய் என்ற இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்களின் விளக்கம் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

அதேவேளை தொற்றுநோயின் வகைகள் பற்றி விளக்கும் போது நிணநீர் தொகுதியில் ஏற்படும் வீக்கம் காரணமாக வரும் தொற்று (Lymphatic), சுவாசத்துடன் தொடர்பான தொற்று (Pulmonary),

**யூ.கே. றமீஸ். எம்.ஏ.**
(சமூகவியல்)

இரத்தம் நஞ்சாதல் மூலம் ஏற்படும் தொற்று (septicemia)என்றபடி வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்நோய்களுக்கான சிகிச்சை காலம் மூன்று முதல் பத்து நாட்களாக அமையும். என்றாலும் நோய் திடீரென்று ஏற்பட முடியும் என்றும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அதேநேரம் தொற்று நோய் பரவுவதற்கும் காலநிலைக்கும் உள்ள தொடர்ப்பினையும் அவர் எடுத்து விளக்கியுள்ளார். கடந்த காலங்களில் தொற்று நோய்கள் குளிர் காலத்தின் இறுதியில் தொடங்கி கோடை காலத்தில் உச்ச கட்டத்தை அடைந்துள்ளன என்றே அவர் கருதுகிறார்.

இந்நூலின் அடுத்தடுத்த பகுதிகளில் தொற்று நோய் ஏற்பட்டால் அதனை சகித்துக்கொள்ளல், இத்தகைய சகிப்பின் பயன்கள், தொற்று உள்ள இடத்திலிருந்து வெளியேறாமல் இருத்தல், தொற்றுள்ள இடங்களுக்கு செல்லாதிருத்தல் என்பன தொடர்பிலான இஸ்லாமிய சட்டங்களும் எடுத்து கூறப்பட்டு விளப்பட்டுள்ளன.

அதேநேரம் 'சிங்கத்தைக் கண்டு விரண்டோடுவது போன்று குஷ்டரோகியை விட்டு விலகிவிடுங்கள் (ஆதாரம்: புகாரி) என்றும் தொற்றுநோய் உள்ள இடத்துக்கு நீங்கள் செல்ல வேண்டாம். அவ்வாறான இடத்திலிருந்து வெளியேறவும் வேண்டாம் (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்) என்றும். நோயுள்ள ஒட்டகைகளுடன் ஆரோக்கியமான ஒட்டகைகளை சேர்க்க வேண்டாம் (ஆதாரம்: புகாரி) என்றும் நபி (ஸல்) அவர்கள் வழங்கியுள்ள போதனைகளுக்கு அமைய சமூக இடைவெளி பேணல், தனிமைப்படுத்தல் போன்ற விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருப்பதையும் அவர் விளக்கத் தவறவில்லை.

இந்நூலின் இறுதிப்பகுதியில் தொற்று நோய்ககு உள்ளான நிலையில் கையாள வேண்டிய விடயங்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு தொற்று நோய்க்கு எதிரான ஒரு போராட்டத்தை முன்னெடுத்து தொற்றுகளை கட்டுப்படுத்தவும் சில வழிகாட்டல்களை வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு தொற்றை நீக்கி ஆரோக்கியத்தை வழங்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். குறிப்பாக அல்லாஹ்விடம் ஆரோக்கியத்தை கேட்பது,

நோயிலிருந்து பாதுகாப்பு தேடுவது, நோய் ஏற்பட்ட பின்னர் பொறுமையாக எதிர்கொள்வது, அல்லாஹ்வை குறை கூறாது திருப்தியுடன் ஏற்றுக்கொள்வது ஆகிய நான்கு விடயங்களைக் எடுத்துக்கூறியுள்ளார்.

ஆகவே கொவிட் 19 தொற்று போன்ற தொற்று நோய்கள் உலகிற்கு புதியவை அல்ல என்பது தெளிவாகின்றது. ஏற்கனவே பல தொற்று நோய்களை மனித சமூகம் கடந்து வந்திருக்கின்றது.

அதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட இந்நூலும் சான்றாக உள்ளது. அதன் காரணத்தினால் கொவிட் 19 தொற்று மிக வேகமாக பரவிக்கொண்டிருக்கின்ற தற்போதைய சூழலில் இஸ்லாம் வழங்கியுள்ள வழிகாட்டல்கள், மருத்துவ துறையினரின் அடிப்படை சுகாதாரப் பரிந்துரைகள், துறைசார் அறிஞர்களதும் சமூக தலைமைகளதும் அறிவுரைகள் என்பவற்றுக்கு ஏற்ப செயற்படுவதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். அப்போது இத்தொற்றின் பரவுதல் அச்சுறுத்தலையும் தொற்றையும் தவிர்த்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

# பணியாளை விடவும் சிறப்புக்குரியது

'(என் மனைவி) ஃபாத்திமா (ரலி) திரிகை சுற்றுவதால் தமது கையில் ஏற்பட்ட காய்ப்பு குறித்து (தம் தந்தை) நபி (ஸல்) அவர்களிடம் முறையிடுவதற்காகச் சென்றார்கள். ஏனெனில், (போர்க் கைதிகளான) அடிமைகள் சிலர் நபி (ஸல்) அவர்களிடம் வந்திருப்பதாக அவருக்குச் செய்தி வந்தது.

ஆனால் நபி (ஸல்) அவர்களைக் காணவில்லை. தாம் வந்த நோக்கத்தை ஆயிஷா (ரலி) அவர்களிடம் பாத்திமா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

நபி (ஸல்) அவர்கள் வீட்டுக்கு வந்த போது, ஆயிஷா (ரலி) அவர்கள் விடயத்தைத் தெரிவித்ததும் நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் வந்தார்கள். அப்போது நாங்கள் எங்கள் படுக்கைக்குச் சென்று இருந்தோம்.

(நபி(ஸல்) அவர்களைப் பார்த்த) உடனே நாங்கள் எழுந்திருக்க முயற்சி செய்தோம். அப்போது நபி (ஸல்) அவர்கள், 'நீங்கள் இருக்கும் உங்கள் இடத்திலேயே அமருங்கள்' என்று சொல்லி விட்டு, அவர்களே வந்து எனக்கும் ஃபாத்திமாவுக்கும் இடையே அமர்ந்தார்கள். அவர்களின் பாதங்கள் என் வயிற்றில் பட்டு அதன் குளிர்ச்சியை உணரும் அளவுக்கு நெருக்கமாக அமர்ந்தார்கள்.

அப்போது நபி (ஸல்) அவர்கள், 'நீங்கள் இருவரும் கேட்டதை விடச் சிறந்ததை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா? என்று கேட்டு விட்டு 'நீங்கள் இருவரும் உங்கள் படுக்கைக்குச் செல்லும் போது, 'சுப்ஹானல்லாஹ்' (அல்லாஹ் தூயவன்) என்று 33 தடவையும், 'அல்ஹம்துலில்லாஹ்' (அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்) என்று 33 தடவையும், அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று 34 தடவையும் சொல்லுங்கள். அது உங்களுக்குப் பணியாள் ஒருவர் இருப்பதை விடச் சிறந்ததாகும்' என்று அலி (ரலி) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

(ஆதாரம்: புகாரி)

இதன்படி வீட்டு வேலைக்கு பணியாள் வைத்துக் கொள்வதை விடவும் இந்த மூன்று வசனங்களும் எவ்வளவு பெறுமதி மிக்கது என்பது என்பது தெளிவாகின்றது. அதனால் தினமும் படுக்கைக்கு செல்லும் போது நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப இந்த வசனங்களை மொழிந்து இறையருளைப் பெற்றிடுவோம்.

**அப்துல்லாஹ் ...**

# முஹர்ரம் முதல் திட்டமிடலுடன் செயற்படுவோம்

முஹர்ரம் இஸ்லாமிய மாதங்களில் முதல் மாதமாவதோடு குர்ஆனில் குறிப்பிடப்பட்ட புனித நான்கு மாதங்களில் ஒன்றுமாகும்.இதுபற்றி அல்லாஹ்தஆலா அல்குர்ஆனில், 'நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் அல்லாஹ்வுடைய (பதிவு) ஏட்டில் வானங்களையும் பூமியையும் படைத்த நாளிலிருந்தே மாதங்களின் எண்ணிக்கை பன்னிரெண்டாகும். அவற்றில் நான்கு (மாதங்கள்) புனிதமானவை. இதுதான் நேரான மார்க்கமாகும். ஆகவே அம்மாதங்களில் உங்களுக்கு நீங்களே தீங்கிழைத்துக் கொள்ளாதீர்கள். (09:36) என்று குறிப்பிட்டிருக்கின்றான்.

முஹர்ரம் என்பது அல்லாஹ்வின் மாதம் என்பதுடன் அதில் நோன்பு நோற்பது மிகவும் சிறப்புக்குரியதுமாகும்.

இதனை நபி (ஸல்) அவர்கள்,'ரமழான் மாதத்தின் பின்னர் நோற்கப்படும் நோன்புகளில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் மாதம் முஹர்ரம் மாதத்தில் நோற்கப்படும் நோன்பாகும் எனவும் பர்ழான தொழுகைக்குப் பின்னர் மிகச் சிறந்த தொழுகை இரவுத் தொழுகை என்று கூறினார்கள். (ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்)

இன்னும் இந்த மாதங்களில் உங்களுக்கு நீங்களே அநியாயம் செய்து கொள்ளாதீர்கள் என்றும் அல்லாஹ் உத்தரவிட்டிருக்கிறான். அதனால்தான் கண்ணியமிக்க இந்த மாதங்களில் புரியப்படும் நல்லமல்களுக்கு அதிகபட்ச நற்கூலியும், பாவச் செயல்களில் ஈடுபடுவோர்களுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படும் என இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்திருக்கிறார்கள்.

**அஷ்ஷெய்க்**
**ஏ.எச்.எம். மின்ஹாஜ் முப்தி (காஷிபி)**

முஸ்லிம்களின் முதல் மாதம் முஹர்ரம் ஆகும். ஆனாலும் உமர் (ரலி) அவர்கள், தனது ஆட்சிக் காலத்தில் நபித் தோழர்களை ஒன்று சேர்த்து எப்பொழுது முதல் இஸ்லாமிய வருடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ஆலோசனை கேட்டார்கள். இதனடிப்படையில் பலரும் பல மாதங்களை குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பது நபி(ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றநாள் என்றும் முடிவெடுத்தார்கள்.

அந்தடிப்படையில் ஒரு புது வருடத்தில் நாம் நுழைந்திருக்கின்றோம். எமது கடந்த வருட வாழ்வை ஒருகணம் மீட்டிப்பார்த்து அதில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்து நடப்பு வருடத்திற்காக திட்டமிடுவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான ஒரு சந்தர்ப்பம் எமக்கு கிடைத்துள்ளது. இச்சந்தர்ப்பத்தினை நாம் சிறப்பாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வாழ்வின் அனைத்து பகுதிகளையும் தழுவியதாக எமது திட்டமிடல் அமைந்திருக்க வேண்டும்.

அல்லாஹ்வுடனான எனது தொடர்பு எப்படியிருந்தது? நடப்பு வருடம் எப்படியிருக்க வேண்டும்? அல்லாஹ்வின் கட்டளைகளையும், நபி(ஸல்) அவர்களது முன்மாதிரிகளையும் எந்தளவு எடுத்து நடந்தோம் என்பன குறித்து சிந்தித்துணர வேண்டும். அதேநேரம் அல்குர்ஆன் ஓதல், விளங்குதல், மனனமிடல், திக்ர், கடமையான, சுன்னத்தான தொழுகைகள் நிறைவேற்றுதல், இஸ்திக்பார் போன்றவற்றையும் எமது திட்டங்களில் உட்படுத்திக்கொள்ள முடியும். மேலும் அல்குர்ஆனை அதிகம் ஓதுதல், அதனை விளங்குதல், மார்க்க விளக்கங்களை பெற்று அறிவுபூர்வமாக வாழ்வை அமைத்துக்கொள்ளவும் வேண்டும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இஸ்லாமிய புத்தகங்களையும் ஏனைய நூற்களையும் வாசிக்க முயற்சிப்பதுடன் பொதுவான அறிவை பெற்றுக்கொள்வதுடன் துறைசார் நிபுணத்துவத்தையும் தத்தம் துறைகளில் பெற்றுக்கொள்ளவும் முனைய வேண்டும்.மேலும் ஆரோக்கியம் என்பது அல்லாஹ்வினால் எமக்கு வழங்கப்பட்ட மிகப் பெரும் அருட்கொடையாகும். இருப்பினும் எம்மில் அதிகமானவர்கள் அதில் அலட்சியாக இருப்பதனை அவதானிக்க முடிகின்றது. உடல் ஆரோக்கியமாக இருந்தால் எம்மால் இஸ்லாத்துக்காகவும் குடும்பத்திக்காகவும் சமூகத்திக்காகவும் உழைக்க முடியும். இவ்வகையில் தான் நபி (ஸல்) அவர்கள் ஹாரிஸ் இப்னு கல்தா என்ற வைத்தியரிடம் சென்று வைத்திய ஆலோசனை பெற்றுக்கொண்டதோடு ஸஃத் இப்னு அபீவக்காஸ் (ரலி) அவர்களையும் அதற்காகத் தூண்டினார்கள். வாய்க்கு ருசியான உணவைவிட ஆரோக்கியமான உணவை முற்படுத்துவதுடன் உடம்புக்கு போதுமான அளவு உணவு, பானங்களையும் உட்கொள்ள வேண்டும். அத்துடன் சுத்தம், சுகாதாரத்தை பேணுவதுடன் போதுமான அளவு ஓய்வையும் உடலுக்கு வழங்கவும் தவறக்கூடாது. உடம்புக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை செய்யுமாறு நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளமையை இச்சமயம் சிந்தித்துணர வேண்டும். இதில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அதேநேரம் பொருளாதார வளர்ச்சியை மையமாகக் கொண்டும் எமது எதிர்காலத் திட்டமிடலை அமைத்துக்கொள்ள வேண்டும். ஹலாலான வழிகளில் பணத்தினை சம்பாதிக்குமாறும் அதனை நல்ல வழிகளில் செலவளிக்குமாறும் பொருளாதார கோட்பாட்டை நபி (ஸல்) அவர்கள் ஏவியுள்ளார்கள். அத்தோடு செல்வம் ஒரு ரஹ்மத்தாகவும் பரகத்தாகவும் இருக்க வேண்டும். மாறாக அது சோதனையாக மாறிவிடக்கூடாது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளோம்.

அத்தோடு தனது மனைவி, பிள்ளைகளையும் முன்னேற்றும் விதமாக சிந்திக்க வேண்டும். இப்பொறுப்பு தொடர்பில் அல்லாஹ் எம்மை விசாரிப்பான் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். எம்மையும் எமது குடும்பத்தையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ளவும் வேண்டும். பிள்ளைகளின் இயல் புரிந்து சிறப்பாக வளர்த்தெடுப்பதுடன் உறவுகளை பேணிக்கொண்டு சுவனத்தை அடையவும் முயற்சிக்க வேண்டும்.

அயலவர்கள், நண்பர்கள், அநாதைகள், ஏழைகள் போன்றோர் தொடர்பிலும் கூட்டாக ஸகாத்தை நிறைவேற்றல், சமூக ஒற்றுமை பேணல், ஊர் விவகாரங்கள் போன்றவாறான விடயங்களில் ஈடுபாடு காட்டுதல் குறித்தும் ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ஒரு முஸ்லிம் அடுத்த முஸ்லிமை பலப்படுத்துகின்றவனாக இருப்பான். கஷ்ட துன்பங்களில் உதவுவான். தனக்கு விரும்புவதை பிறருக்கும் விரும்புவான்' என்றார்கள். எனவே மலர்ந்துள்ள புத்தாண்டை திட்டமிட்டு பயன்படுத்திகொள்வோம். எமது நாட்டிலும் முழு உலகத்திலும் ஏற்பட்டிருக்கும் சோதனை நீங்க வல்ல இறைவனை பிரார்த்திப்போம்.

# அன்பு, கருணையின் மகத்துவம்

பரந்து விரிந்த இந்த உலகில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் படைத்து, பரிபாலனம் செய்பவன் அல்லாஹ் ஒருவன் தான். அவன் எல்லோருக்கும் பொதுவானவன், எந்த தேவையும் இல்லாதவன். அதேநேரத்தில் தேவைகளை வேண்டி தன்னை நாடி வரும் அடியார்களின் தேவையை நிறைவேற்றும் இரக்க குணமுடையவன். அவன் மாபெரும் கருணையாளன். அவனிடம் இருகரம் ஏந்திக்கேட்டால் 'இல்லை' என்று சொல்லாதவனாவான்..

'அல்லாஹ் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையவன்' என்று அல் குர்ஆன் (1:3) குறிப்பிட்டிருகக்கின்றது.

அத்தகைய சிறப்பு மிக்க இறைவனின் அருளைப்பெற்றிடவென அவன் வழங்கியுள்ள வழிகாட்டல்களின் படி செயற்பட வேண்டும். அதாவது அல் குர்ஆனின் கட்டளைப்படியும், முகம்மத் (ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிமுறைகளைப் பின்பற்றியும் வாழ்ந்திட வேண்டும். குறிப்பாக இறையச்சத்துடன் வாழ்ந்து, கலிமா, தொழுகை, நோன்பு, ஸக்காத், மற்றும் ஹஜ் ஆகிய கடமைகளை நிறைவேற்றி வந்தால் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

அந்த வகையில் சக மனிதர்களிடம் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? என்று நபி (ஸல்) அவர்கள் விளக்கியுள்ளார்கள். அதாவது, 'ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். அவனுக்கு இவன் அநீதி இழைக்கவும் மாட்டான். அவனை (பிறரது அநீதிக்கு ஆளாகும்படி) கைவிட்டு விடவும் மாட்டான். எவர் தம் சகோதரனின் தேவையை நிறைவு செய்வதில் ஈடுபட்டிருக்கின்றாரோ, அவரது தேவையை நிறைவு செய்வதில் அல்லாஹ்வும் ஈடுபட்டிருக்கின்றான். எவர் ஒரு முஸ்லிமின் ஒரு துன்பத்தை நீக்குகின்றாரோ, அவரது மறுமை நாளின் துன்பத்தை அல்லாஹ்வும் நீக்குகின்றான். எவர் ஒரு முஸ்லிமின் குறைகளை மறைக்கின்றாரோ, அவரது குறைகளை மறுமை நாளில் அல்லாஹ்வும் மறைக்கின்றான்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(ஆதாரம்: புகாரி).

நம்மில் பலர் வசதி, வாய்ப்புகள் நிறைந்த வாழ்க்கையை அனுபவிக்கலாம். சிலருக்கு அந்த நிலை இல்லாமல் இருக்கலாம். இல்லாதவர்களுக்கு இருப்பவர்கள் கொடுத்து உதவ வேண்டும் என்பதையே இந்நபி மொழி வலியுறுத்துகிறது. அவ்வாறு ஒரு முஸ்லிம், சக முஸ்லிம்களின் தேவையை கருணையுடன் நிறைவேற்றினால்,

அல்லாஹ் அவரது தேவையை நிறைவேற்றுவான், துன்பங்களை நீக்குவான் என்பதை இந்நபி மொழி மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

நாம் ஒருவருக்கு ஒருவர் கருணை காட்டுவதிலும், அன்பு செலுத்துவதிலும் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்.

'ஒருவருக்கொருவர் கருணைபுரிவதிலும், அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் (உண்மையான) இறைநம்பிக்கையாளர்களை ஓர் உடலைப் போன்று நீ காண்பாய். (உடலின்) ஓர் உறுப்பு சுகவீனமடைந்தால் அதனுடன் மற்ற உறுப்புகளும் (சேர்ந்து கொண்டு) உறங்காமல் விழித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் (உடல் முழுதும்) காய்ச்சலும் கண்டுவிடுகிறது.'

(ஆதாரம்: புகாரி)

அந்த வகையில் ஒவ்வொருவரும் மற்றவருடன் கருணையுடன் நடந்துகொள்ளும் போது, இறைவனின் கருணைப்பார்வை கிடைக்கும் என்பதையும் நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருகக்கின்றார்கள். அதாவது '(படைப்பினங்களின் மீது) கருணை காட்டாதவர், (படைத்தவனால்) கருணை காட்டப்பட மாட்டார்'.

(ஆதாரம்: புகாரி)

மற்றொரு சந்தர்ப்பத்தில், 'ஒரு முஸ்லிம் மரம் ஒன்றை நட்டு அதிலிருந்து ஒரு மனிதனோ அல்லது (மற்ற) உயிரினமோ உண்டால் (அதன் காரணத்தால்) ஒரு தர்மம் செய்ததற்கான பிரதி பலன் அவருக்குக் கிடைக்காமல் இருப்பதில்லை'. (ஆதாரம்: புகாரி) என்றும் நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்

ஆகவே நாம் சக முஸ்லிம்களிடமும், பிற உயிர்களிடமும் அன்பு காட்டுவோம், கருணையுடன் நடந்துகொள்வோம். அவற்றின் ஊடாக இறைவனின் அருளையும், திருப்பொருத்தத்தையும் நாம் பெற்றுக்கொள்வோம்.

**பிந்த் இஸ்மாயீல்...**



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான



ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

மாணவர்களே! இம்மாதிரி வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுங்கள். (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன)

★ சரியான விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது கோடு மாத்திரம் இடுக.

★ செய்கை வேலைக்காக தாள் ஒன்றைப் பயன்படுத்துங்கள்.

1. பின்வரும் பந்தியை நனறாக வாசிக்க.

கும்மி பெரும்பாலும் பெண்களுக்கே உரிய கிராமியக்கலை வடிவம். பெண்கள் வட்ட வடிவமாய்க் கூடிநின்று கைகொட்டி ஆடுவது கும்மி என்று சொல்லப்படும். கும்மியடிக்கும்போது ஒரு குத்து விளக்கையோ கிருஷ்ணக்கடவுளின் சிலையையோ நடுவில் வைத்து அதைச் சுற்றிப் பல பெண்கள் பாடிக்கொண்டும் கைகளில் தாளம் தட்டிக் கொண்டும் குனிந்து நிமிர்ந்து ஆடுவர்.

பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) கும்மியடிக்கும்போது நடுவில் வைக்கப்படும் பொருள் யாது?

.................................................................

(ii) பெண்கள் கும்மியை எவ்வாறு ஆடுவர்?

.................................................................

(iii) "மகளீர்" என்பதற்கு ஒத்தகருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

.................................................................

(iv) பந்தியில் இடம் பெற்றுள்ள வினை எச்சச்சொல் ஒன்றை எழுதுக.

.................................................................

(v) பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழியை எழுதுக.

.................................................................

(vi) இப்பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) கிராமிய கலை (2) கும்மியாட்டம் (3) பெண்கள் கலை

2. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) வசுமதி பரீட்சையில் சித்தி பெறுவதற்காக காலாகாலமாக செயற்பட்டாள். காலாகாலமாக என்பதன் கருத்து ......................................
(இடைவிடாது / நீண்டகாலமாக) என்பதாகும்.

(ii) "நாம் பெற்றோருடன் **ஏட்டிக்குப் போட்டியாக** கதைத்தல் கூடாது" இவ்வாக்கியத்தில் தடித்த எழுத்தில் உள்ள மரபுத்தொடரின் கருத்து ......................................
(பிடிவாதமாக / விதண்டாவாதமாக) என்பதாகும்.

3. பொருத்தமான நிறுத்தக்குறியீடுகளை இடுக.

(i) அந்த மலரில் சிவப்பு நீலம் ஊதா ஆகிய நிறங்களுள்ள இதழ்கள் ஆறு உண்டு

(ii) ஐயோ அம்மா தம்பி அதனை எப்படிச் செய்வான்

4. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் தடித்த எழுத்துகளில் உள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான கருத்தை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

(i) மூத்தோரைப் பார்த்து **நாக்கு செறிக்கப் பேசுதல் கூடாது.** (மனம் நோக/ கெட்டவார்த்தை)

(ii) நாம் எமது கடமைகளில் **கண்ணாயிருத்தல்** வேண்டும். (அக்கறையாக/ மிகக்கவனமாக)

5. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

(i) கப்பலைச் செலுத்துபவன் .............................. (மாலுமி / மீகாமன்)

(ii) ஆறுகடலுடன் கலக்குமிடம் .............................. (களப்பு / கழிமுகம்)

6. பின்வரும் பாடலில் இருக்கும் வெற்றிடத்தை நிரப்புக.

என்னும் இப்பொன்னுரைகள் - நாட்டில்
எங்கும் எடுத்துரைத்தான்:
மன்னுயிர்காத்திடவே - மண்ணில்
.................................................................

7. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

(i) மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா? ..............................

(ii) கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா? ..............................

8. சொற்களை பொருத்தமாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வசனம் ஒன்றை அமைக்க.

(i) என்னும் ஊரில் / மழவராயன் / பெருங்குடி / என்ற / ஒருவன் / பெயருடைய / இருந்தான்.

.................................................................

(ii) பல / நாட்கள் / ஒன்று / சேர்ந்து / உழைத்து / கறையான்கள் / கட்டி / முடிந்தன / ஒரு / நல்ல / வீட்டைக்

.................................................................

9. மதுரக்கனிகள் என்னும் சொல்லைப் பிரித்தெழுதுக.

= .............................. + ..............................

10. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லின் கீழ்க்கோடிடுக. (கலாச்சாரம் / கலாசாரம்)

11. பளார் பளார் என்னும் இரட்டைக்கிளவி சொல்லை வைத்து வாக்கியமொன்றை எழுதுக.

.................................................................

.................................................................

12. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Country .............................. (ii) Night ..............................

13. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துகளிலேயே எழுதுக.

(i)  (ii) 

.............................. ..............................

14. பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்கு படுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

(i) That / a / black board / is ..............................

(ii) watering / am / I / Plants / the ..............................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

குருதுமி உகன்வெனவா ..............................

16. நாற்பத்தேழாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும்போது கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

.................................................................

17. இப்பெட்டியினுள் உள்ள எண்களுள் 9 இனாலும், 8 இனாலும் மீதி இன்றி வகுபடக்கூடிய எண் எது?

.................................................................

| | |
|---|---|
| 36 | 72 |
| 96 | 126 |


18. 20 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட சில எண்களை உருவாக்குவதற்கு நகுலனுக்கு ஈர்க்குத்துண்டுகள் தேவைப்பட்டன. 8 ஈர்க்குத்துண்டுகளைப் பயன்படுத்தி உருவாக்கத்தக்க உரோம எண்ணைக் குறிப்பிடுக.


.................................................................

19. (i) $\frac{2}{7}$ இன் சமவலுப் பின்னத்தை எழுதுக.

.................................................................

(ii) எதிரே தரப்பட்டுள்ள உருவின் 0.4 ஐ நிழற்றுக.



20. 

இந்த உருவுக்கு எத்தனை சமச்சீர்க்கோடுகளை வரையலாம்?

.................................................................

21. 260 பேனாக்களை 8 பேர்களிடையே சமமாக பங்கிடும் போது எஞ்சும் பேனாக்களின் எண்ணிக்கை யாது?

.................................................................

22. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகிக்கொண்டிருந்த சதுச பிற்பகல் 6.20 மணிக்கு நுண்ணறிவுப் பாடப் பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்தான். அப்பயிற்சிக்காக 1 மணித்தியாலம் 45 நிமிடங்கள் எடுத்தது. அவன் நுண்ணறிவுப் பயிற்சியை செய்து முடித்த நேரம் இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.

.................................................................

23. 3 லீற்றர் 750 மில்லிலீற்றர் கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு 250 மில்லிலீற்றர் கொள்ளளவுள்ள பாத்திரமொன்றினால் எத்தனை தடவைகள் நீர் ஊற்றல் வேண்டும்?

.................................................................

24. ஒரு இசை நிகழ்ச்சிக்காக நுழைவுச் சீட்டுக்களை விற்பதன் மூலம் ஜெயா சேகரித்த பணம் ரூ. 1625.00 ஆகும். குகன் சேகரித்த பணம் ஜெயா சேகரித்த பணத்திலும் பார்க்க ரூ. 235 இனால் கூடியது. சுமதி சேகரித்த பணம் ஜெயா சேகரித்த பணத்திலும் பார்க்க ரூ. 215.00 இனால் குறைவானது. மூவரும் சேகரித்த மொத்தப் பணம் யாது?

.................................................................

25. இக்கடிகாரத்தின் முகத்தை அவதானியுங்கள் மணித்தியாலக்கம்பிக்கும் நிமிடக்கம்பிக்கும் இடையே உள்ள கோணம் அடுத்து எத்தனை மணிக்கு செங்கோணமாக இருக்கும்.





.................................................................

26. வெற்றிடங்களை சரியாக நிரப்புக.

| சிற்றுண்டிகள் | இருந்த எண்ணிக்கை | விற்ற எண்ணிக்கை | எஞ்சிய எண்ணிக்கை |
|---|---|---|---|
| கட்லட் | ...................... | 219 | 202 |
| உழுந்துவடை | 650 | ...................... | 127 |
| பருப்பு வடை | ...................... | 843 | 107 |
| பற்றீஸ் | 680 | ...................... | 136 |

27. மாணவி ஒருத்தி சிறிய தண்ணீர் போத்தலை வெந்நீரினால் முற்றாக நிரப்பி அந்நீரை வெற்றுப் போத்தல் ஒன்றினுள் ஊற்றினாள். 8 தடவைகள் ஊற்றிய போது பெரிய போத்தல் முழுமையாக நீரினால் நிரம்பியது. பெரிய போத்தலில் ஒட்டப்பட்டிருந்த துண்டில் 2 $\ell$ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இத்தகவல்களின் படி சிறிய போத்தலின் கொள்ளளவு யாது? ..............................


28. சில நகரங்களுக்கிடையே உள்ள தூரங்கள் பின்வரும் உருவிலே கிலோமீற்றரில் தரப்பட்டுள்ளன.

| | | | புத்தளம் |
|---|---|---|---|
| | | கொழும்பு | 142 |
| | காலி | 116 | 258 |
| மாத்தறை | 45 | ............. | 303 |

மாத்தறையிலிருந்து காலி ஊடாக கொழும்புக்கு உள்ள தூரம் யாது?

.................................................................

29. ஒரு குழுவில் உள்ளவர்களிடமிருந்து அவர்கள் மிகவும் விரும்பும் மீன் வகைகள் பற்றிக் கேட்கப்பட்டு அத்தகவல்கள் குறிக்கப்பட்டன.





(i) பாரைமீனை விரும்புபவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க எத்தனை பேர் நெத்தலிமீனை கூடுதலாக விரும்புகின்றனர்?

.................................................................

(ii) 35 பேர் கயல்மீனை விரும்பினர். அதனை உரிய நிரலில் குறித்து நிழற்றுக.

.................................................................



# புலமைக் கதிர்

## தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





ஆசிரியர்:
எஸ்.ஏ.சந்திரபவன்
arumugamchandrabavan@gmail.com

13 ஆம் பக்கத் தொடர்

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் – II

- **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

30. இலங்கையில் காணப்படும் எமது நாட்டுக்கே உரியதாவரம்
(1) பலா (2) விளிம்பிக்காய் (3) காட்டிலுப்பை (4) ஆனைக்கொய்யா

31. நீரின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் மாத்திரம் இடம் பெறும் விடை
(1) வேங்கை, தணக்கு, கத்தாப்பு (2) தேங்காய், கத்தாப்பு, கடல் மாங்காய்
(3) எருக்கலை, இறப்பர், துத்திரி (4) கத்தாப்பு, தணக்கு, இறப்பர்

32. தாவரங்களுக்குப் பிராணிகள் செய்யும் நன்மையான செயல் அல்லாதது
(1) முசுறுகள் தாவர இலைகளைச் சேர்த்து கூடு அமைத்தல்.
(2) தேனீக்கள் தாவரங்களின் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுதல்.
(3) மண்புழுக்கள் மண்ணில் காற்றோட்டத்தை அதிகரித்தல்
(4) கறையான்கள் அடிக்கட்டைகளை மண்ணுடன் உக்கச்செய்தல்

33. பின்வருவனவற்றுள் இரவு நேரத்தில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?
(1) வேம்பு (2) முருங்கை (3) தூதுவளை (4) அகத்தி

34. தரப்பட்டுள்ள தாவரங்களில் கஞ்சி தயாரிக்கப் பயன்படாதது
(1) கொங்கவை (2) வட்டுக் கத்தரி இலை
(3) கோப்பை இலை (4) சிறுநாரத்தை

35. டெங்கு நுளம்புகள் குத்துவது நாளொன்றின் எந்நேரத்திலாகும்?
(1) நண்பகல் (2) இரவு (3) அதிகாலை (4) மாலை

36. நீரிழிவு நோயாளிகள் உண்ணக்கூடாத உணவு
(1) கேக் (2) கவ்பி (3) கீரை வகை (4) கோவா

37. காபோவைதரேற்று அதிகம் அடங்கிய ஓர் உணவுக்கான உதாரணம்
(1) கோதுமை மா (2) கவ்பி
(3) கடலை (4) பயறு

38. விற்றமின் A கிடைக்காமையால் ஏற்படும் நோய் எது?
(1) பெரிபெரி (2) மாலைக்கண் (3) ஸ்கேவி (4) என்புருக்கி

39. நீரில் மூழ்கிய ஒருவருக்கு முதலுதவி அளிக்கும்போது முதலில் செய்ய வேண்டியது யாது?
(1) நன்றாக சுவாசத்தை சோதித்தல். (2) திறந்தவெளிக்கு கொண்டு செல்லுதல்.
(3) நித்திரை செய்ய வைத்தல். (4) சுடுநீர் வழங்குதல்.

40. இலங்கையில் முதன் முதலாக அமைக்கப்பட்ட குளம்
(1) கலாவாவி (2) மின்னேரியா குளம்
(3) பசவக்குளம் (4) தீகவாவி

41. வெஹறகல அணைக்கட்டு, இலங்கை மஞ்சள் செவிக் கொண்டைக்குருவி காணப்படும் காசுத்தாள்
(1) 100 ரூபாய் (2) 500 ரூபாய்
(3) 1000 ரூபாய் (4) 5000 ரூபாய்

42. இலங்கைக்கு மிகவும் அண்மையில் அமைந்துள்ள நாடுகள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவு செய்க.
(1) பங்களாதேஷ், ரஷ்யா, பூட்டான் (2) நேபாளம், மாலைதீவு, கொரியா
(3) மாலைதீவு, ஸ்தான்புல், பங்களாதேஷ் (4) பங்களாதேஷ், மாலைதீவு, பாகிஸ்தான்

43. பின்வருவனவற்றுள் புரதக் குறைபாட்டு நோய் எது?
(1) என்புருக்கி (2) குவாசியக்கோர் (3) ஸ்கேவி (4) மாலைக்கண்

44. நீங்கள் பருகும் தேநீருக்கு அதிக அளவு சீனியை சேர்ப்பதால் பற்களுக்கு ஏற்படக் கூடிய சேதம் அல்லாதது
(1) பற்சொத்தையாகும் (2) பல்வலி ஏற்படுதல்
(3) பற்சிதைவு ஏற்படுதல் (4) பல் விழுதல்

45. எமது நாட்டின் பொதுப்போக்குவரத்து பேரூந்தில் இடம் பெறும் அம்சம் அல்லாதது
(1) ஆண்கள் பெண்களுக்கு வேறு வேறாக ஆசனம் ஒதுக்கப்பட்டிருத்தல்.
(2) குருமார்களுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருத்தல்.
(3) கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருத்தல்.
(4) வலது குறைந்தோருக்கு ஆசனம் ஒதுக்கப்பட்டிருத்தல்.

46. நாற்று மேடைகளிலிருந்து நாற்றுகள் பெறப்பட்டுப் பாத்திகளில் நடப்படுகின்ற பயிர் வகைகளை மாத்திரம் கொண்ட விடையைத் தெரிவு செய்க.
(1) கறி மிளகாய், தக்காளி, கத்தரி (2) பசளி, மரவள்ளி, கத்தரி
(3) போஞ்சி, பயற்றை, புடோல் (4) கறிமிளகாய், பயற்றை, வெண்டி

47. இலங்கைத் தேசப்படத்தில் சரணாலயம் எந்நிறத்தினால் குறிக்கப்பட்டிருக்கும்?
(1) மஞ்சள் (2) நீலம் (3) பச்சை (4) கறுப்பு

48. நிலத்தில் வளரும் புல்லினைச் சிரட்டையினால் மூடி வைத்துச் சில தினங்களின் பின்னர் பார்த்தபோது அப்புல் மஞ்சள் நிறமடைந்திருந்தது. இவ்வாறு நிகழ்வதற்கு,
(1) நீர்கிடைக்காமையே காரணம்
(2) வளமான மண் கிடைக்காமையே காரணம்
(3) காற்றுக்கிடைக்காமையே காரணம்
(4) வெளிச்சம் கிடைக்காமையே காரணம்


49. மண் தரங்குறைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக அமையாதது
(1) ஓடும் நீர் (2) காற்று
(3) சூரிய ஒளி (4) பிராணிகளின் நடத்தை


50. காற்றின் மூலம் தொழிற்படும் வாத்தியம் அல்லாதது
(1) புல்லாங்குழல் (2) கொம்பு வாத்தியம் (3) நாதஸ்வரம் (4) தம்பூரா

51. அண்மைக்காலங்களாக வவுச்சர்களை வழங்குவதன் மூலம் பாடசாலைகளில் இலவசமாக வழங்கப்படுவது
(1) பாடநூல்கள் (2) சீருடை (3) பகல் உணவு (4) புலமைப் பரிசில்

52. மைதானத்தின் நடுவில் பொருத்தப்படும் வலையின் இருபக்கங்களிலும் இருந்து விளையாடப்படும் விளையாட்டு அல்லாதது
(1) பட்மின்டன் (2) வலைப்பந்து (3) வொலிவோல் (4) டெனிஸ்

53. புத்தரின் தாடை எலும்பு வைத்துக் கட்டப்பட்டுள்ள தாதுகோபுரம்
(1) ருவன்வெலிசாய (2) தூபராம (3) அபயகிரி (4) ஜேத்தவனராம

54. 
உருவில் உள்ள உபகரணம் யாது?
(1) சீவுளி (2) இடுக்கி
(3) உளி (4) அரம்



55. இக்குறியீடு வெளிப்படுத்தும் கருத்து யாது?
(1) இலங்கை மின்சாரசபை
(2) மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு என்பதாகும்.
(3) மின்சார இணைப்பினை பெறும் நிலையம்
(4) மின் விநியோகிக்கும் நிலையம்

56. பயிர்களை வளர்ப்பதற்கு கையாளப்படும் மாற்று முறைகளில் நன்மையாக அமைவது.
(1) பயிர்களை பராமரிப்பது கடினமானதாக இருத்தல்.
(2) மழை, வெயில், பிராணிகள் ஆகியவற்றில் இருந்து இலகுவாக பாதுகாக்க முடியாதிருத்தல்.
(3) இடவசதி இல்லாத இடங்களில் பயிர் வளர்ப்பதற்கு ஏற்ற முறையாக இருத்தல்.
(4) தேவையான போது இடத்துக்கிடம் கொண்டு செல்ல முடியாதிருத்தல்.

57. உடலுக்கு சக்தி தருவதில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் உணவுச்சோடி
(1) சோறும், ஈரப்பலாக்காயும் (2) சோறும், பலாக்காயும்
(3) முட்டையும், இறைச்சியும் (4) பலாக்காயும், இறைச்சியும்

58. நல்ல வேளையுணவொன்றின் இயல்பாக அமையாதது
(1) நிறைவான போசாக்குப் பெறுமானமுடையதாக இருத்தல்.
(2) சுவைத்து உண்ணக்கூடியதாக இருத்தல்.
(3) வேளையுணவில் பானம் அடங்கி இருத்தல்.
(4) வேளையுணவு போதுமானதாக இருத்தல்

59. தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படும் பிரசித்திபெற்ற இலத்திரனியல் ஊடகம்
(1) செய்திப்பத்திரிகை (2) துண்டுப்பிரசுரம் (3) இணையம் (4) சஞ்சிகை

60. "எனது வீட்டுத்தோட்டம்" என்னும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம் பெறவேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாக இருக்க வேண்டும்.)

(1) ..............................................................................................................


(2) ..............................................................................................................

(3) ..............................................................................................................


## கடந்த வார (13.08.2021) வினாத்தாள் 1 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 2 | 11 | 1 | 21 | 2 | 31 | 1 |
| 02 | 3 | 12 | 2 | 22 | 1 | 32 | 3 |
| 03 | 1 | 13 | 3 | 23 | 1 | 33 | 3 |
| 04 | 2 | 14 | 2 | 24 | 2 | 34 | 2 |
| 05 | 1 | 15 | 2 | 25 | 2 | 35 | 2 |
| 06 | 1 | 16 | 3 | 26 | 3 | 36 | 2 |
| 07 | 2 | 17 | 3 | 27 | 1 | 37 | 1 |
| 08 | 3 | 18 | 3 | 28 | 2 | 38 | 1 |
| 09 | 1 | 19 | 3 | 29 | 2 | 39 | 3 |
| 10 | 1 | 20 | 2 | 30 | 2 | 40 | 2 |

## உலகில் பயன்படுத்தப்படும் பொதுவான குறியீடுகள்



உடையக் கூடியது


விமான நிலையம்



சிற்றுண்டிச்சாலை


உடல்வலுவிழந்தவர் (விசேட தேவையுள்ளவர்)


எரிபொருள் நிரப்பு நிலையம்


வைத்தியசாலை


நஞ்சு


கழிப்பறை (மலசலகூடம்)

# கொரோனா தடுப்பூசியை பெற மக்கள் இன்று முண்டியடிப்பு

## மரண வீத அதிகரிப்பே காரணம் என்கிறார் அமைச்சர் டளஸ்

(வெலிகம தினகரன் நிருபர் )

கொரோனா தடுப்பூசியை ஏற்றிக் கொள்ள மக்கள் ஆரம்பத்தில் அச்சம் கொண்டனர். மரணங்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரிக்க ஆரம்பித்ததும் பீதி அடைந்தமக்கள் தற்போது அதனை ஏற்றிக் கொள்ள நாட்டின் பல பாகங்களிலும் அணி திரள்வதை காணக்கூடியதாகவுள்ளதாக ஊடக அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டத்தில் கொரோனா பரவலைத் தடுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலிலே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், கொரோனா தடுப்பூசியை முதற் கட்டத்திலேயே மாத்தறை மாவட்டத்திற்கு பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொண்டிருந்தார். இதன் பிரகாரம் மாவட்டத்தில் 4 இலட்சம் பேருக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் தடுப்பூசி 2 இலட்சம் பேருக்கு இதுவரை ஏற்றப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கான தடுப்பூசிகள் எதிர்வரும் தினங்களில் பெற்றுக் கொள்ள முடியும்.

இலங்கையிலே ஏனைய மாவட்டங்களை ஒப்பீட்டுப் பார்க்கும் போது மாத்தறை மாவட்டம் தடுப்பூசி பெற்றுக்கொண்டதில் முன்னிலை வகிக்கின்றது. அதேபோல் புள்ளிவிபரப் படியும் நாம் மாற்றம் ஏதும் இல்லை. நாளுக்கு நாள் கூடுவது குறைவது சாதாரணமானது.

ஆரம்பத்தில் தடுப்பூசி ஏற்றுவதில் ஆர்வம் காட்டாதவர்கள் தற்போது ஆர்வம் காட்டுகின்றனர். மரணவீதம் அதிகரிப்பே இதற்கு பிரதான காரணம். வீணாக மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை.



இச்சந்தர்ப்பத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ள முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அமைச்சர் டளஸ் அழகப்பெரும விரைவில் குணமடைய வேண்டும் என பிரார்த்தித்தார். இக் கூட்டத்தில் மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வீரசுமனவீரசிங்க, கருணாகொடிதுவக்கு, மாத்தறை மாவட்டசெயலாளர் பிரதீப் ரத்னாயக்க உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# அநுராதபுரம் மாவட்டத்தில் கொவிட் தொற்றாளர்கள் அதிகரிப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுர மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் 11500 க்கும் அதிகமான கொவிட் தொற்றாளர்கள் அடயாளம் காணப்பட்டுள்ளதாக மாவட்ட தொற்று நோய் பிரிவின் விசேட வைத்தியர் ரத்னாயக்க தெரிவித்தார்.

மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக வேண்டி அநுராதபுர மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை நிலையங்களான அநுராதபுரம் மெத்சிரி செவன சிறுநீரக விசேட வைத்தியசாலை மற்றும் நொச்சியாகம, கெப்பித்திகொள்ளாவ, கலன்பிந்துனுவெவ,தம்மன்னாவ, வஹமல்கொள்ளாவ, தந்திரிமலை பதவிய உள்ளிட்ட சிகிச்சை நிலையங்கள் அனைத்திலும் நோயாளர்கள் நிரம்பிவழியும் நிலை ஏற்பட்டுள்ளதால் மேலதிகமாக கெகிராவ வைத்திய சாலையயும் தமுத்தேகம வைத்திய சாலையையும் சிகிச்சை நிலையங்களாக எடுப்பதற்கு சுகாதார தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதே சமயம் மெத்சிரி செவன அவசர சிகிச்சை பிரிவில் 45 க்கும் அதிகமான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அநுராதபுரம் போதனா வைத்திய சாலையின் இலக்கம் 12 மற்றும் 20 வது இலக்க வாட்டுத் தொகுதியும் கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றப் பட்டுள்ளது.

இரண்டாயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் கொரோனா நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 117 யும் தாண்டியுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட தொற்று நோய் பிரிவின் விசேட வைத்தியர் ரத்னாயக்க மேலும் தெரிவித்தார்.

# அநுராதபுரம்; மாவட்ட வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டுவர நடவடிக்கை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்தில் பல வைத்தியசாலைகளை விரைவில் மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமுன தெரிவித்தார்.

தம்புத்தேகம தள வைத்தியசாலைக்கு ஒரு தொகுதி வைத்திய உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள பல வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய வசதிகள் இன்னும் கிடைக்கவில்லை எனவும் அந்த வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் மற்றும் தாதியர்களினதும் கோரிக்கையின் காரணமாக இந்நடவடிக்கையினை எடுத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள



பெரும்பாலான வைத்தியசாலைகளுக்கு சென்றால் அந்த வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் உள்ளிட்ட சகல அலுவலகர்களும் அரசாங்கத்தை குறை கூறுகின்றனர்.

இந்த வைத்தியசாலைகள் வடமத்திய மாகாண சபையின் கீழ் செயற்படுவதனால் வைத்தியசாலைகளுக்கு குறைந்த பட்ச வசதிகளே கிடைப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறைந்த வசதிகள் உள்ளதனால் சிகிச்சைக்கு செல்கின்ற நோயாளர்களுக்கு சில அநீதிகள் நடப்பதாக அவர்கள் தொடர்ந்து குற்றம் சாட்டுகின்றனர். இந்த வைத்தியசாலைகளுக்கு செல்லும் எமக்கும் வைத்தியசாலை கட்டடம், வைத்திய உபகரணம், அலுவலக ஊழியர்களின் பற்றாக்குறை என்பன நன்றாகவே தெரிகின்றன. இந்த மாகாண சபையின் கீழுள்ள வைத்தியசாலைகள் மாத்திரமே பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது.

அதனால் அரசாங்கத்திடம் விசேட வேண்டுகோள் விடுத்துள்ளேன். தம்புத்தேகம, கெக்கிராவ, கஹட்டகஸ்திகிலிய, மதவாச்சி, கெப்பித்திகொல்லாவ மற்றும் பதவிய வைத்தியசாலைகளை மிக விரைவில் மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு வைத்தியசாலைகளின் குறைபாடுகளை விரைவில் பூர்த்தி செய்துதருமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

# பேருவளை நல்லஹேன வைத்தியசாலையில் புதிய "கொவிட்– 19" சிகிச்சை வார்ட்



பேருவளை நல்லஹேன ஆதார வைத்தியசாலையில் கொவிட் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக புதிய வார்ட் தொகுதியொன்று புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

நல்லஹேன ஆதார வைத்தியசாலையின் பொறுப்பாளர் டொக்டர் அவன்தி ரூபசிங்க, சீனன்கோட்டை அவசர கால நிவாரண அமைப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் மற்றும் சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் ஆகியோர்களுடன் அண்மையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலிலே இக் கோரிக்கை வைத்தியரினால் முன்வைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் மற்றும் சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் ஆகியவற்றின் ஆலோசனையின் பேரில் உடனடியாக களமிறங்கிய சீனன்கோட்டை அவசரகால நிவாரண அமைப்பினர் சீனன் கோட்டை பிரதேச முஸ்லிம் தனவந்தர்களிடம் சேகரித்த சுமார் 80 இலட்சம் ரூபா நிதியுதவியில் மேற்படி வைத்தியசாலையின் வார்ட் தொகுதியொன்றை உடனடியாக நவீன மயப்படுத்த திட்டமிட்டனர். கொவிட் நோயாளர்களை மையப்படுத்தி புதிதாக உருவாக்கப் பட்டுள்ள இந்த சிகிச்சை வார்ட்டுக்கு தேவையான நவீன வசதிகள் கூடிய கட்டில்கள், மருந்துப்பொருட்கள், கொவிட் சிகிச்சைக்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் திறப்பு விழா மிக விரைவில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் அங்குரார்ப்பண விழாவில் பிரதம அதிதியாக அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக சீனன்கோட்டை அவசர கால நிவாரண அமைப்பின் சார்பாக சியாம் மிஹ்லார் தினகரனுக்கு தெரிவித்தார்.



சௌபாக்யா உற்பத்தி கிராமத்திட்டத்தின் முதல் கட்ட கிராமமாக பாதுகாக்கப்பட்ட வீடுகளில் பயிர்களை சாகுபடி செய்தல் திட்டத்தின் கீழ் அநுராதபுரம் ஸ்ரீராவஸ்திபுரவில் 10 பங்காளிகளின் பங்கேற்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள கலப்பு மிளகாய் விதை திட்டத்தை இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கடந்த (12) பார்வையிட்ட போது பிடிக்கப்பட்ட படம்.
(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

### பேருவளை, மருதானையில்

# " 24 மணிநேர " தடுப்பூசி நடமாடும் சேவை

பேருவளை நகர சபை பிரதேசத்தில் கொரோனா தடுப்பூசி பெறாதோர்களுக்கான முதலாவது தடுப்பூசி வழங்கும் '24 மணிநேர' நடமாடும் சேவை இன்று (20), நாளை (21) காலை 9.00 மணி முதல் பேருவளை மருதானை பாஸியதுந் நஸ்ரியா மகா வித்தியாலயத்தில் பகல் இரவாக இடம்பெறவுள்ளது.

கல்வி இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் ஆகியோரின் வேண்டுகோளின் பேரில் இடம்பெறவுள்ள '24 மணிநேர' நடமாடும் சேவையில் முதலாவது தடுப்பூசி பெறாதோர் தங்களது தேசிய அடையாள அட்டையை காண்பித்து முதல் டோஸை பெற்றுக்கொள்ள முடியும். மேற்படி நடமாடும் சேவையை இராணுவத்தில் பணியாற்றுகின்ற சிறப்பு வைத்தியர்கள் முன்னெடுத்துச் செல்வர்.

இதேவேளை, கடந்த புதன், வியாழன் ஆகிய இரு தினங்களில் '24 மணிநேர' நடமாடும் சேவையொன்று தர்கா நகர் ஸாஹிரா தேசிய பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டது. இதில் பெருந்திரளானோர் சுமார் 2000க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரம் நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் 1 வாரம் பூட்டு

## அநுராதபுரம் ஐக்கிய வர்த்தக சங்கம் தீர்மானம்



அநுராதபுரம் தினகரன் நிருபர்

கொவிட் 19 பரவலை கட்டுப்படுத்துவதற்காக வேண்டி சுகாதார தரப்பினர் முன்னெடுக்கும் வேலைத் திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் ஒரு வாரத்திற்கு மூடுவதற்கு அநுராதபுரம் ஐக்கிய வர்த்தக சங்கம் தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

அதற்கமைவாக, 19 ஆம் திகதி நேற்று முதல் அநுராதபுரம் நகரிலுள்ள பார்மசிகள் மற்றும் அத்தியாவசிய தேவைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

கொவிட் பரவலை கட்டுப்படுத்துவதற்காக வேண்டி அரசாங்கமும் சுகாதார தரப்பினர்களும் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவேண்டி பொதுமக்கள் நகரில் ஒன்றுகூடுவதை தவிர்க்கும் வகையில் 19 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்திற்கு சுயவிருப்பத்தின் பேரில் வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு வர்த்தக சங்கம் கூடி ஏகமனதாக முடிவடுத்ததற்கு அமைவாகவே நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

அரசாங்கத்தை கஷ்டத்துக்குள்ளாக்கும் நோக்கில் இதனை மேற்கொள்ளவில்லை என அநுராதபுரம் ஐக்கிய வர்த்தக சங்கத்தின் தலைவர் சரத்முனசிங்க மேலும் தெரிவித்தார். நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தாலும் வங்கிகள் மற்றும் அரச அலுவலகங்கள், போக்குவரத்து சேவை என்பன வழமை போன்று இயங்குவதைக் காணக்கூடியதாக இருந்தாலும் பொதுமக்களுடய நடமாட்டம் மிக குறைவாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளத்தில் இரண்டாவது தடுப்பூசி வழங்கல்

(புத்தளம் தினரகன் நிருபர்)

கடந்த மாதம் 20 மற்றும் 22 ம் திகதிகளில் Pfizer முதலாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களுக்கான இரண்டாவது தடுப்பூசி செலுத்தும் திட்டம் இன்று வெள்ளிக்கிழமை (20) புத்தளம் பிரதேச செயலகம், பாத்திமா மகளிர் கல்லூரி, தில்லையடி முஸ்லிம் மகா வித்தியாலயம் பாலாவி மற்றும் அபயபுர விகாரை போன்ற இடங்களில் காலை 8 மணி முதல் வழங்கப்படவுள்ளது.

எனவே, முதல் தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள், பெற்றுக் கொண்டதற்கான தடுப்பூசி அட்டையையும் அடையாள அட்டையையும் தவறாது கொண்டுவந்து இரண்டாவது தடுப்பூசியை மேற்குறிப்பிட்ட நிலையங்களில் பெற்றுக் கொள்ளுமாறு புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் தெரிவித்தார்.

முதலாவது தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே இவ்விடங்களில் இரண்டாவது தடுப்பூசி செலுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமுத்தேகம பிரதேசத்தில் 550 கொரோனா தொற்றாளர்கள்

( கல்நேவ தினகரன் விசேட நிருபர் )

தமுத்தேகம பிரதேசத்தில் கொரோனா நோய் தொற்றாளர்கள் 550 பேர் இனங் காணப்பட்டுள்ளதாக தமுத்தேகம சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தமுத்தேகம பொது சுகாதார பரிசோதகர் புத்திக மல்லவாரச்சி தெரிவித்தார்.

தமுத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில் சகல கிராம சேவகர் பிரிவிலும் கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளதுடன் இவர்களில் 172 பேர் இதுவரை வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன், இதில் 8 சிறுவர்களும், 2 கர்ப்பிணி தாய்மார்களும் அடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுவரை 304 குடும்பங்களைச் சேர்ந்த 931 பேர் சுய தனிமைப் படுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் தனது பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்களின் தொகையை கட்டுப்படுத்துவதற்காக இதுவரை முதலாவது தடுப்பூசி 25000 பேருக்கும் இரண்டாவது தடுப்பூசி 4000 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர் புத்திக மல்லவராச்சி தெரிவித்தார்.

நோயாளர்கள் பெருந் தொகையானோர் தெல்கிரியாவ பிரதேசத்தில் இனங் காணப்பட்டதாகவும், அதில் அதிகமானோர் தமுத்தேகம பொருளாதார மத்திய நிலையத்துடன் தொடர்புடையவர்கள் எனவும் இதன் காரணமாக தமுத்தேகம பொருளாதார மத்திய நிலையமும் தற்போது மூடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.





பேருவளை பிரதேசத்திற்கான கொரோனா தடுப்பூசி வழங்கும் நிகழ்வு சீனன்கோட்டை அல்ஹுமைஸறா தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது இரண்டாவது டோஸ் தடுப்பூசிகளை சுமார் 1600 பேர் பெற்றுக் கொண்டனர். இதனை பெற்றுக் கொள்ள வருகை தந்தோரையும் தடுப்பூசி வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# கொடிய வியாதிகளிலிருந்து மக்களை பாதுகாக்க இரசாயன பசளைகளை முற்றாகவே ஒழிப்போம்!

அசேதன இரசாயனங்களுக்கு மாற்றாக உயிரியல் அடிப்படையிலான உரங்களின் தேவை அதிகரித்து வருகிறது. அத்துடன் விவசாயத்தில் செயற்கை இரசாயனங்களின் பாவனை காரணமாக உருவாகும் பாதகமான விளைவுகள் சேதன விவசாயம் பற்றிய தேவையை அதிகரித்துள்ளன.

சேதன உரங்கள் சிறு துணிக்கைகளாக்கப்பட்ட பாறை, தாதுக்கள், இயற்கை தாவர மற்றும் விலங்குப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. மேலும், சேதன விவசாயம் என்பது உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது மட்டுமல்லாமல் மண்ணின் பல்லுயிர் பெருக்கத்தையும் சேர்க்கும் உத்திகளில் ஒன்றாகும்.

இரசாயன உரங்கள் ஓர் குறித்த அளவிலான நைட்ரஜன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. மேலும் அவற்றின் அளவுக்கதிகமான பயன்பாடு நீர்நிலைகள் மற்றும் நிலத்தடி நீரை மாசடையச் செய்கிறது. இது சம்பந்தமாக உயிரியல் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, நிலையான முறையில் 'ஊட்டச்சத்து நிறைந்த உயர்தர உணவை' உற்பத்தி செய்வதற்கு சமீபத்திய முயற்சிகள் மேலும் அதிகப்படுத்தப்பட்டுள்ளன.





செயற்கை உரங்களின் கண்மூடித்தனமான பயன்பாடு மண் மாசுபடுவதற்கும், நீர்நிலைகள் மாசுபடுவதற்கும் வழிகோலுகின்றது. நுண்ணுயிர்கள் மற்றும் மண்ணின் வளத்தைப் பாதுகாக்கும் புழு, பூச்சிகளை அழித்து பயிரை நோய்களுக்கு ஆளாக்குவதுடன் மண் வளத்தையும் குறைக்கிறது. இவ்வாறு ஊட்டச்சத்து அகற்றுதல் காரணமாக மண்வளத்தை குறைத்தலானது சுற்றுச்சூழல் அபாயங்கள் குறித்த கவலைகளை அதிகரித்து எம்மிடையே நிலையான விவசாயத்திற்கான அச்சுறுத்தலை அதிகரிக்கின்றது.

குறைவான மூலப்பொருட்கள் மற்றும் குறைவான நுண்ணுயிர் செயல்பாடுகளைக் கொண்ட இத்தகைய 'மலட்டுத்தன்மையுள்ள' மண், கரையக் கூடிய இரசாயன மூலப் பொருட்களைதக்கவைக்கும்தன்மை அற்றது. ஆய்வுகளின் அடிப்படையில் 30 வீதத்துக்கும் குறைவான அசேதனப் பசளைகள் பயிர்களால் உறிஞ்சப்பட்டு ஏனைய 70 வீதமான இரசாயனப் பொருட்களும் நீரோடைகள், ஆறுகள், கால்வாய்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசனத் தொட்டிகள் மற்றும் தேங்கி நிற்கும் நீர்நிலைகளில் சேர்க்கப்படுகின்றன. இதனால் யூட்ரோஃபிகேஷன் மற்றும் ஹைப்பர்யூட்ரோஃபிகேஷனுக்கும் வழிவகுக்கிறது. அத்துடன் இதன் விளைவாக நீர்நிலைகளின் மேற்பரப்பில் சயனோபாக்டீரியா (நீலபச்சை அல்கா) மூலம் பாசி உருவாக்கம் ஏற்படுகிறது, அவற்றால் பல மனிதர்கள் உட்பட விலங்குகளுக்கும் தீங்கு விளைவிக்கும் நச்சுகளை இப்பாசிகள் உருவாக்குகின்றன.

காய்கறிகளில் கலக்கிற பூச்சிகொல்லிகளும், இரசாயனங்களும் நுண்சத்துகளை முழுமையாக அழித்து விட்டன. குறிப்பாக மாலிப்டினம், செலினியம் போன்ற தாதுக்களே கிடைப்பதில்லை. இதனால் நோய் எதிர்ப்பு சக்தி குறைவு, நீரிழிவு, ஆயுட்காலம் குறைவு, புற்றுநோய், இதயநோய் என்று பல பிரச்னைகளை சந்தித்து வருகிறோம். இப்போது நிலமே நஞ்சாகி விட்டதால் அந்தப் பாதிப்பு இன்னும் அதிகம் ஆகலாம்.

இதற்கு மாற்றீடான சேதன விவசாயம், பெரும்பாலும் மண்ணில் இயற்கையாக் காணப்படும் நுண்ணுயிர்களைச் சார்ந்துள்ளது. இது அனைத்து வகையான பயனுள்ள பக்டீரியா மற்றும் பூஞ்சைகளையும் பாதுகாக்கின்றது. ஆராய்ச்சிகளின் விளைவாக நுண்ணுயிரிகளின் பயனுள்ள விகாரங்களைக் கொண்ட தயாரிப்புக்கள் தோன்றியுள்ளன. இது இயற்கை முறையில் மண் வளத்தை மேம்படுத்துகிறது. இயற்கையில் பல பயனுள்ள மண் நுண்ணியிரிகள் உள்ளன. இவற்றில் தாவரங்களுக்கு ஊட்டச்சத்துக்களை உறிஞ்ச உதவும் திறமையான உயிரினங்களைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும், அவற்றை வளர்ப்பதன் மூலமும், நேரடியாகவோ அல்லது விதைகள் மூலமாகவோ அவற்றை மண்ணில் சேர்ப்பதன் மூலமும் பயிருக்கு தேவையான சத்து கிடைப்பதை உறுதி செய்யலாம். வளர்க்கப்பட்ட நுண் உயிர்கள் கடந்து பொருளுடன் கலக்கப்பட்டு பைகளில் அடைக்கப்பட்டு வயல் வெளிகளில் இடுவதற்கு ஏற்றதாக இருக்கும் உரமே உயிர் உரம் ஆகும். அதாவது இவவுயிர் உரங்களில் முக்கியமான உள்ளீடு நுண்ணுயிரங்கிகளாகும்.

### உயிர் உரங்களின் நன்மைகள்:

உயிர் உரங்கள் மண்ணில் உள்ள வளிமண்டல நைட்ரஜனை மண்ணிலும் வேர்முடிச்சுக்களிலும் நிலைநிறுத்தி பயிருக்கு கிடைக்குமாறு செய்கின்றன. அவை இரும்பு மற்றும் அலுமினிய பொஸ்பேட்டுக்கள் போன்ற பொஸ்பேட்டுக்களின் கரையாத வடிவங்களைப் பயிருக்கு கிடைக்கக் கூடிய வடிவங்களுக்கு மாற்றுகின்றன.

அவை மண் அடுக்குகளிலிருந்து பொஸ்பேட்டைத் தாவரங்களின் வேர்களுக்கு கொண்டு போய்ச் சேர்க்கின்றன. அவை வேர் வளர்சிச்சியை ஊக்குவிக்கும் ஹோர்மோன்களை உருவாக்குகின்றன.

அவை கரிமப் பொருள்களை சிதைத்து தாவரத்திற்கு எளிதில் கிடைக்கக் கூடிய கனியமாக மாற்றுகின்றன. விதை அல்லது மண்ணில் பயன்படுத்தும் போது, உயிர் உரங்களின் ஊட்டச் சத்துக்கள் கிடைப்பதை அதிகரிக்கின்றன. மற்றும் மண்ணையும் சுற்றுச்சூழலையும் மேம்படுத்தி விளைச்சலை 10 முதல் 25 வீதம் வரை மேம்படுத்துகின்றன.

### உயிர் உரங்களின் வகைகள்:

நுண்ணுயிர்களின் வகையின் அடிப்படையில், உயிர் உரத்தையும் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

பக்டீரியா உயிர் உரங்கள் – ரைசோபியம், அசோஸ்பிரிலியம், அசோடோபாக்டா, பொஸ்போபக்டீரியா, பூஞ்சை உயிர் உரங்கள் – மைக்கோரைசா, அல்கல் உயிர் உரங்கள் நீல பச்சை அல்கா மற்றும் அசோலா

ஒக்டினைமைசீட்ஸ் உயிர் உரங்கள் : பிரான்கியா

### பொதுவான உயிர் உரங்களின் சிறப்பி–யல்புகள்:

ரைசோபியம்: ரைசோபியம் ஒப்பீட்டளவில் மிகவும் பயனுள்ள மற்றும் பரவலாக பயன்படுத்தப்படும் உயிர் உரமாகும். ரைசோபியம், பருப்பு வகை பயிர்களுக்கு மிகவும் ஏற்றது. பருப்பு வகைகள் மற்றும் ரைசோபியம் பக்டீரியத்துடனான கூட்டுறவின் விளைவாக வளிமண்டல நைதரசனை நிலைநிறுத்தும் வேர்முடிச்சுக்கள் உருவாகின்றன. பருப்பு வகை பயிர்கள் இல்லாத நிலையில் மண்ணில் ரைசோபியத்தின் எண்ணிக்கை குறைகிறது. பரிந்துரைக்கப்பட்ட பயிர்கள்: பச்சை பயறு, உளுந்து, கொள்ளு, நிலக்கடலை, சோயாபீன்ஸ்

அசோஸ்பைரில்லம்: அசோஸ்பிரிலம் உயர் தாவர அமைப்புடன் நெருக்கமான துணை கூட்டுவாழ்வைக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. சோளம், வரகு, சாமை, பிற சிறு தினைகள் மற்றும் தீவன புல் போன்ற தானியங்களுடன் இந்த பக்டீரியாக்கள் இணைந்து தழைச்சத்தை அப்பயிருக்கு கொடுக்கிறது.

அசோடோபாக்டர்: இது ஒரு பொதுவான மண் பக்டீரியம். இந்த பக்டீரியாவின் வளர்ச்சியை தீர்மானிக்கும் முக்கியமான காரணி மண் கரிமப் பொருளாகும். பரிந்துரைக்கப்பட்ட பயிர்கள் கோதுமை, சோளம், பருத்தி, கடுகு, கரும்பு. இதுவும் மண்ணில் தழைச்சத்தை நிலைநிறுத்துகிறது.

நீலப் பச்சை அல்கா நெல் வயலில் ஏராளமாக இருப்பதால் நீல பச்சை அல்காக்கள் அரிசி உயிரினங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. நைட்ரஜன் நிலைநிறுத்தும்



பாஸ்போபக்டீரியா நுண்ணுயிரானது பயிருக்கு கிட்டா நிலையிலும், மண்ணில் கரையா நிலையிலும் உள்ள ஊட்டச்சத்துக்களை பயிருக்கு எளிதாக கிடைக்கும் நிலைக்கு மாற்றுகின்றது. அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். 10 – 30வீதம் விளைச்சலை அதிகரிக்கிறது. இவற்றை பாறை பொஸ்பேட் உடன் கலந்து உபயோகப்படுத்தலாம். இது வேரை சுற்றிலும் மற்றும் வேருக்குள்ளும் வாழும் பூஞ்சை, பூசண இழைகள் மண்ணில் அதிக பகுதிகளில் வளர்ந்து மிக தொலைவில் உள்ள சத்துக்களை வேருக்கு கொண்டு சென்று சேர்க்கிறது. இதனை அனைத்து பயிர்களுக்கும் பயன்படுத்தலாம்.

விவசாயத்தில் நுண்ணுயிர் பரிமாற்ற சிகிச்சை, பல்வேறு பயிர்களுக்கு தாவர நோய்களை கட்டுப்படுத்துவதற்கான ஒரு சாத்தியமான அணுகுமுறையாக இருக்கின்றது. இரசாயன உரங்களின் விலை மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் ஆகிய இரண்டின் பின்னணியில், இரசாயன உரங்கள் மீது அதிகப்படியான நம்பகத்தன்மை என்பன நீண்ட காலத்திற்கு சாத்தியமானதல்ல.

இந்த சூழலில், சேதன உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் உற்பத்தியை அதிகரிப்பது விவசாயிகளுக்கு சாத்தியமானதாக இருக்கும். திரவ உயிர் உரம் இப்போது ஒரு நம்பிக்கைக்குரிய தொழில்நுட்பம் என்பதுடன் வழக்கமான அடிப்படையிலான உயிர் உரங்களை விட அதிக நன்மைகளைக் கொண்டுள்ளது. மற்றும் இது உயிர் உரத் தொழில்நுட்பத் துறையில் ஒரு முன்னேற்றமானதொன்றாகக் கருதப்படுகிறது. மேலும் விவசாயிகள், விரிவாக்கத் தொழிலாளர்கள் மற்றும் வணிகர்களிடம் உயிர் உரங்கள் அதிக வரவேற்பைப் பெறுகின்றன.

விவசாய உற்பத்தி அமைப்பில், அதிக அளவு இரசாயன உள்ளீடுகள் விவசாய பயிர் உற்பத்தி முறைகளின் நிலைத்தன்மையை பாதித்துள்ளன. உற்பத்திச் செலவை அதிகரித்தது, மற்றும் உற்பத்தித்திறன்களில் சரிவை ஏற்படுத்தியது, மேலும் உலகளாவிய உணவு பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் தரத்தை பராமரிப்பதில் கடினமான சவாலாக மாறியுள்ளது. பரிந்துரை செய்யப்படாத மற்றும் சமநிலையற்ற உரங்கள் (பெரும்பாலும் யூரியா) மண்ணின் ஆரோக்கியத்தை கணிசமாகக் குறைக்க வழிவகுத்துள்ளன.

இந்த வளங்கள் மற்றும் ஆற்றல்கள் அனைத்தும் உண்மையான அர்ப்பணிப்புடன் செயற்பட்டால், சவால்களைச் சமாளித்து, மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான உணவை என்றென்றும் வழங்குவதற்காக சுற்றுச்சூழல் நட்புமுறையிலான இயற்கை விவசாயத்தை வெற்றிகரமாக அடைய முடியும். நமது எதிர்கால சந்ததியை ஆபத்தான நோய்களிலிருந்து காப்பாற்றுவோம்.



கலாநிதி.
**சந்திரகாந்தா மகேந்திரநாதன்**
சிரேஷ்ட விரிவுரையாளர் தாவரவியல் துறை,
விஞ்ஞான பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், வந்தாறுமூலை

# கொரோனா பரவும் ஆபத்தான இடங்களாக கல்முனை பிரதேசத்தின் சில கடற்கரைகள்!



**அலட்சிய சுபாவத்துடன்,**
**சமூக இடைவெளியை மறந்து**
**ஒன்றுகூடும் மக்களுக்கு**
**மருத்துவர்கள் எச்சரிக்கை!**



கொரோனா பரவலின் வேகம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. வைரஸின் திரிபுகள் வீரியம் கூடியவையாக உள்ளதால் உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன. சுகாதாரத் தரப்பு நாட்டின் பொருளாதாரக் கட்டொழுங்கு பாதிக்கப்படாத வகையில் தினமும் புதிய பாதுகாப்பு சுகாதார நடைமுறைகளை அமுல்படுத்துவதில் கவனம் செலுத்திக் கொண்டே வருகின்றது.

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறுகின்றவர்களை கைது செய்தல், மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துத் தடை, அலுவலகங்களில் ஊழியர் வரவைக் குறைத்தல், தடுப்பூசித் திட்டம், முகக்கவசம் அணியாதவர்கள் மீதான சட்ட நடவடிக்கைகள், பொது வைபவங்களுக்கான தடை, திருமண நிகழ்வுகளுக்கான தடை, ஊரடங்கு உத்தரவு ஆகியவற்றின் மூலம் கொவிட் பரவலை கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

பலவிதமான சவால்களையும் எதிர்கொண்டபடி அரசும் சுகாதாரத் துறையினரும் பாடுபடும் போது மக்களில் ஒரு பகுதியினர் அலட்சியம் செய்தபடி அறியாமையிலும் மடைமையிலும் மூழ்கி மனம் போன போக்கில் நடந்து கொள்வது சமூக ஆர்வலர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு அலட்சியமாக செயற்படுவோர் உண்மையிலேயே சுயநலமிகள் ஆவர். இத்தகையோர் நாட்டுப் பற்றில்லாதவர்கள். தங்களைப் பற்றியும் தங்கள் உறவுகளைப் பற்றியும் சிந்தித்துப் பார்ப்பதற்கு இவர்களுக்கு அக்கறையில்லை.

நெருக்கமாக சேர்ந்து பழகுவது, காற்றினால் வைரஸ் பரவ சந்தர்ப்பம் கொடுப்பது, முகக்கவசத்தை தாடை வரை இறக்கி விட்டுத் திரிவது, என்றெல்லாம் இவர்கள் அலட்சியமாகவே நடந்து கொள்கின்றனர். நாட்டின் சில பிரதேசங்களில் கொரோனா தொற்று பரவும் இடமாக கடற்கரை உள்ளது. கல்முனை பிரதேசத்தில் சில கடற்கரைகளை இதற்கான உதாரணங்களாகக் குறிப்பிட முடியும். இவ்வாறான பொறுப்பற்ற நிலையிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைப் பிரவு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் உள்ள கடற்கரைகளில் மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுப்பதற்கான பல்வேறு செயற்றிட்டங்கள் தொடராக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதார வழிமுறைகளைப் பேணாது கடற்கரைப் பிரதேசங்களுக்கு வருகின்றவர்கள் அண்டிஜன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.



கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி தலைமையில் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள் குழுவினரும் இராணுவத்தினரும் இணைந்து இதனை முன்னெடுக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ. ஆர். எம். அஸ்மி "கொரோனா தொற்று நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் ,கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் குறிப்பாக கல்முனை மற்றும் மருதமுனை கடற்கரை பகுதிகளில் பொதுமக்கள் ஒன்றுகூடுவதை கட்டுப்படுத்தும் முகமாக நாம் மிகக் கடுமையான சுகாதார நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளோம். குறித்த கடற்கரை பகுதிகளில் அதிகமாக பொதுமக்கள் ஒன்றுகூடுவதால் தொற்றுநிலை அதிகரிக்க வாய்ப்பபுள்ளது. முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டோம் என்பதால் சிலர் அலட்சியமாக நடக்கின்றனர்" என்றார்.

" கொரோனா கட்டுப்பாட்டுக்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் மிகவும் இறுக்கமான முறையில் இடம்பெறும். பொது இடங்கள், வீதிகளில் தேவையின்றி நடமாடுவது மற்றும் நெரிசலாக கூடுவது, சமூக இடைவெளி பேணாதிருப்பது, முகக்கவசம் அணியாமல் இருப்பது, கடற்கரைகளில் ஒன்றுகூடி இருப்பது போன்றவை இடம்பெறுமாயின் மிகவும் கண்டிப்பான முறையில் பாதுகாப்புத் துறையினரின் ஒத்துழைப்புடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார் அவர்.

இதேவேளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் அறிக்கைகளின்படி 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இதுவரை 103 மரணங்கள் (இக்கட்டுரை எழுதப்படும் வரை) இடம்பெற்றுள்ளதுடன் ,கல்முனை தெற்கு சுகாதார பிரிவில் 11 மரணங்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்த ஒவ்வொருவரும் பொதுநல சிந்தனையுடன் செயற்பட வேண்டும்.

நமது பொழுது போக்குகளையும் சந்தோசங்களையும் இன்றைய வேளையில் விட்டுக் கொடுக்க வேண்டும். கடற்கரை போன்ற இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். சுகாதாரத் துறையினர் முன்வைக்கும் கட்டுப்பாடுகளை உணர்ந்து செயற்பட வேண்டும். அப்போதுதான் கொரோனா பரவும் வேகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.



**ஜெஸ்மி எம்.மூஸா**
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# நிதி அறிக்கைகள்

## 2021 ஜூன் 30இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கானது

(இலங்கை மத்திய வங்கியின் திருத்தப்பட்ட
2005.09.30ஆம் திகதிய பணிப்புரைக்கு அமைவானவை)

## வருமானக் கூற்று

| | குறிப்பு | வங்கி: முடிவடைந்த 6 மாதங்களுக்கானது 30.06.21 ரூ. '000 | 30.06.20 ரூ. '000 | மாற்றம் % | வங்கி: முடிவடைந்த காலாண்டிற்கானது 30.06.21 ரூ. '000 | 30.06.20 ரூ. '000 | மாற்றம் % | குழுமம்: முடிவடைந்த 6 மாதங்களுக்கானது 30.06.21 ரூ. '000 | 30.06.20 ரூ. '000 | மாற்றம் % | குழுமம்: முடிவடைந்த காலாண்டிற்கானது 30.06.21 ரூ. '000 | 30.06.20 ரூ. '000 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | 21,418,037 | 22,171,596 | (3) | 10,328,194 | 10,875,160 | (5) | 21,664,330 | 22,411,396 | (3) | 10,427,366 | 10,977,528 | (5) |
| வட்டி வருமானம் | | 17,701,664 | 20,270,990 | (13) | 8,730,789 | 10,019,945 | (13) | 17,701,935 | 20,271,405 | (13) | 8,719,999 | 10,020,025 | (13) |
| வட்டிச் செலவினம் | | 12,100,554 | 14,352,231 | (16) | 5,808,377 | 7,085,007 | (18) | 12,086,848 | 14,333,540 | (16) | 5,790,550 | 7,075,172 | (18) |
| **தேறிய வட்டி வருமானம்** | | 5,601,110 | 5,918,759 | (5) | 2,922,412 | 2,934,938 | (0) | 5,615,087 | 5,937,865 | (5) | 2,929,449 | 2,944,853 | (1) |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | | 1,413,553 | 962,237 | 47 | 698,919 | 376,145 | 86 | 1,413,245 | 961,671 | 47 | 698,738 | 376,004 | 86 |
| கழி: கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | | 115,138 | 57,617 | 100 | 51,407 | 19,037 | 170 | 115,138 | 57,617 | 100 | 51,407 | 19,037 | 170 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | | 1,298,415 | 904,620 | 44 | 647,512 | 357,108 | 81 | 1,298,107 | 904,054 | 44 | 647,331 | 356,967 | 81 |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம் | 6 | 96,772 | 268,914 | (64) | 113,070 | 115,892 | (2) | 96,772 | 268,914 | (64) | 113,070 | 115,892 | (2) |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் நியமிக்கப்பட்ட நிதியியல் சாதனங்கள் மூலமான தேறிய இலாபம்/(நட்டம் | 7 | (1,175,624) | (556,204) | 111 | (307,933) | (152,317) | 102 | (1,175,624) | (556,204) | 111 | (307,933) | (152,317) | 102 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நிதிச் சொத்துகளின் நியாயப் பெறுமதியின் நியாய மதிப்பீட்டில் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | 1,321,855 | 37,408 | 3,434 | 887,457 | 37,398 | 100 | 1,321,855 | 37,408 | 3,434 | 887,457 | 37,398 | 100 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் - (தேறியது) | 8 | 2,059,817 | 1,188,251 | 73 | 205,892 | 478,097 | (57) | 2,306,147 | 1,428,202 | 61 | 316,035 | 580,526 | (46) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | | 9,202,345 | 7,761,748 | 19 | 4,468,410 | 3,771,116 | 18 | 9,462,344 | 8,020,239 | 18 | 4,585,409 | 3,883,319 | 18 |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு | | | | | | | | | | | | | |
| - ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்களும் வருமதிகளும் | | 1,573,613 | 1,386,185 | 14 | 1,065,355 | 812,638 | 31 | 1,573,613 | 1,386,185 | 14 | 1,065,355 | 812,638 | 31 |
| - ஏனைய நிதியியல் சொத்துக்கள் | | 71,644 | 111,522 | (36) | 232,789 | 70,423 | 231 | 71,644 | 111,522 | (36) | 232,789 | 70,423 | 231 |
| - ஏனையவை | | 3,452 | 9,172 | (62) | (5,008) | (12,867) | (61) | 3,452 | 9,172 | (62) | (5,008) | (12,867) | (61) |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | 7,553,636 | 6,254,869 | 21 | 3,175,274 | 2,900,922 | 9 | 7,813,635 | 6,513,360 | 20 | 3,292,273 | 3,013,125 | 9 |
| தொழிற்பாட்டு செலவினம் | | | | | | | | | | | | | |
| ஆளணிச் செலவினங்கள் | | 1,951,367 | 1,700,685 | 15 | 963,187 | 874,938 | 10 | 2,049,555 | 1,799,089 | 14 | 1,017,616 | 928,850 | 10 |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | | 480,582 | 447,063 | 7 | 245,861 | 226,589 | 9 | 505,004 | 474,496 | 6 | 258,191 | 240,152 | 8 |
புதிய வகை உருமாற்ற வைரஸ் ஏதும் இருக்கிறதா என்பதைக் கண்டறிய அவ்வப்போது முறைப்படுத்தப்பட்ட மரபணுரீதியான பரிசோதனை, கண்காணிப்பும் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு உருவாகும் உருமாற்ற வைரஸை எதிர்கொள்ளும் திறன் தடுப்பூசிக்கு இருக்கிறதா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

கோவிஷீல்ட் மற்றும் கோவாக்சின் தடுப்பூசி செலுத்தியிருந்தாலும் கூட, டெல்டா வகை வைரஸ்கள் உடலில் உருவாகியிருக்கும் நோய் எதிர்ப்புச் சக்தியை குறைத்து விடுகிறது என்பது ஆய்வில் தெரியவருகிறது.

# படித்துக் கொண்டு பழம் விற்கும் மாணவி



காரைக்குடி அருகே தந்தையை இழந்த பிளஸ் 2 மாணவி குடும்ப வறுமையால் நாவற்பழம் விற்பனை செய்து வருகிறார்.

காரைக்குடி அருகே நைனா பட்டியைச் சேர்ந்த மாணிக்கம், ராதா தம்பதி மகள் அஞ்சுகா (17). இவர் கானாடுகாத்தானில் உள்ள பள்ளியில் பிளஸ் 2 படித்து வருகிறார். தந்தை இறந்தநிலையில், அவரது சகோதரர் கூலி வேலைக்குச் சென்று குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார். இருந்தபோதிலும் போதிய வருமானம் இல்லாததால் சிரமப்படுகின்றனர்.

குடும்ப வறுமை காரணமாக மாணவி அஞ்சுகா நாவற்பழம் விற்பனை செய்கிறார். தற்போது கொரோனாவால் பள்ளி மூடியிருப்பதால் ஆன்லைனில் வகுப்புகள் நடக்கின்றன. இெதனால் அஞ்சுகா மொபைல் போன் மூலம் ஆன்லைனில் படித்துக்கொண்டே பழங்களை விற்பனை செய்து வருகிறார்.

இது குறித்து அஞ்சுகா கூறியதாவது:

எனக்கு இரண்டு அக்காள், ஒரு அண்ணன், ஒரு தங்கை உள்ளனர். இரண்டு அக் காள்களுக்கு திருமணமாகிவிட்டது. அம்மாவுக்கு உடல் நிலை சரியில்லாததால் அண்ணன் மட்டுமே வேலைக்குச் செல்கிறார். இருந்தபோதிலும் வருமானம் பற்றவில்லை.

கடந்த ஐந்து ஆண் டுகளாக சீசனுக்கு ஏற்ப பழங்களை விற்பனை செய்து வருகிறேன். அதில் கிடைக்கும் பணத்தில் எனது படிப்புச் செலவுக்குப் போக, மீதியை குடும்பத்துக்குக் கொடுப்பேன்.

தற்போது ஆன்லைன் வகுப்புக்காக வாங்கிய மொபைல் போன் கடனையும் அடைத்து வருகிறேன். பள்ளி திறந்திருந்த காலத்தில் ஓய்வு நேரம், விடுமுறை நாட்களில் வியாபாரம் செய்வேன். தற்போது கரோனாவால் பள்ளி மூடியிருப்பதால் தினமும் பகலில் பழங்களை விற்பனை செய்கிறேன்.

இதற்காக அதிகாலை 5 மணிக்கே எழுந்து மானகிரி பகுதி யில் உள்ள மரங்களில் இருந்து நாவற்பழங்களைப் பறித்து வந்து விற்பனை செய்கிறேன் என்றார்.

# மீரா மிதுன் யூடியூப் பக்கத்தை முடக்க பொலிஸார் நடவடிக்கை



பட்டியலின மக்கள் குறித்து அவதூறாக பேசிய நடிகை மீரா மிதுன் தனது யூடியூப் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டார். இதற்காக பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தாழ்த்தப்பட்டோர் குறித்து அவதூறு பரப்பும் வகையில் வீடியோ வெளியிட்ட மீரா மீதுனின் யூடியூப் பக்கத்தை முடக்க பரிந்துரை கடிதத்தை யூடியூப் நிர்வாகத்துக்கு மத்திய குற்றப்பிரிவு பொலிஸார் அனுப்பியுள்ளனர்.

### ஆங்கிலக் கடிதத்துக்கு இந்தியில் பதிலா?

# மாநில மொழியில் பதிலளிக்க மத்திய அரசுக்கு உத்தரவு



மதுரை எம்.பி.யின் ஆங்கிலக் கடிதத்துக்கு இந்தியில் பதில் கடிதம் அனுப்பிய விவகாரத்தில் மத்திய அரசும், அதன் அதிகாரிகளும் இந்திய அலுவல் மொழி சட்டத்தை முறையாகப் பின்பற்ற வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரை பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்த மனு:

'மத்திய ரிசர்வ் படையில் குரூப் பி மற்றும் குரூப் சி பிரிவில் 780 பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்துத் தேர்வு டிச. 20ல் நடைபெறுகிறது. இதற்குத் தமிழகம், புதுச்சேரியில் ஒரு தேர்வு மையம் கூட அமைக்கவில்லை. இதனால் இவ்விரு மாநில விண்ணப்பதாரர்களின் நலனுக்காக குறைந்தபட்சம் ஒரு தேர்வு மையம் அமைக்கக் கோரி உள்துறை அமைச்சகம் மற்றும் சி.ஆர்.பி.எஃப். பொது இயக்குநருக்கு அக். 9ல் கடிதம் அனுப்பினேன்.

எனது கடிதத்துக்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த ராய், நவ.9ல் இந்தி மொழியில் பதில் கடிதம் அனுப்பியிருந்தார். இந்தியில் பதில் அளித்தது சட்ட விதி மீறலாகும். இது தொடர்பாக உள்துறை இணை அமைச்சகத்திற்கு நவ. 19ல் எழுதிய கடிதத்துக்கு இதுவரை பதில் வரவில்லை. இந்தியில் அனுப்பிய கடிதத்தைத் திரும்பப் பெறவோ, ஆங்கிலத்தில் கடிதம் அனுப்பவோ நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, தமிழக அரசுக்கும், தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழக மக்களுக்கும் இந்தி மொழியில் கடிதம் அனுப்பக்கூடாது என்றும், ஆங்கிலத்தில் மட்டுமே கடிதங்கள் அனுப்ப வேண்டும் என்றும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். எனக்கு மத்திய உள்துறை இணை அமைச்சர் அனுப்பிய இந்தி கடிதத்தில் ஆங்கில வடிவத்தை உடனே வழங்கவும், விதியை மீறும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் உத்தரவிட வேண்டும்' என மனுவில் கூறப்பட்டிருந்தது.

ஒரு மாநில அரசு எந்த மொழியில் மத்திய அரசுக்கு விண்ணப்பம் அனுப்புகிறதோ, அதே மொழியிலேயே மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும். இதை இந்திய அலுவலக மொழிச் சட்டமும் உறுதி செய்கிறது.

ஆனால் மனுதாரரின் ஆங்கிலக் கடிதத்துக்கு இந்தி மொழியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதில் விதியை மீறும் எண்ணமில்லை என மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் மத்திய அரசு மற்றும் அதன் அலுவலர்கள் இந்திய அலுவல் மொழிச் சட்டத்தை முறையாகப் பின்பற்ற வேண்டும்'.இவ்வாறு நீதிபதிகள் உத்தரவில் கூறியுள்ளனர்.

# 2021–ல் 2021 பேர், 2021 நிமிடங்கள்: மதுரை மாணவர்கள் உலக சாதனை



மதுரையில் 2021 பேர் 2021 நிமிடங்களில் ஆன்லைனில் அபாகஸ் பயிற்சி மேற்கொண்ட நிகழ்வு, கலாம் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

மதுரை பிரைனிபாப்ஸ் இன்டர்நேஷனல் அபாகஸ் மூளை திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் சார்பில், 2021 நிமிட ஆன்லைன் அபாகஸ் பயிற்சி நடைபெற்றது. சுதந்திர தினமான ஆக. 15 காலை 6 மணி முதல் ஆக. 16 மாலை 4 மணி வரை 2021 நிமிடங்கள் (35 மணி நேரம்) தொடர்ந்து அபாகஸ் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் தமிழகத்தில் மதுரை, கரூர், விருதுநகர் உட்பட 12 மாவட்டங்கள், 5 மாநிலங்கள், அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், பிரிட்டன், கனடா, ஸ்வீடன் உள்ளிட்ட 8 நாடுகளில் இருந்து 4 முதல் 78 வயது வரையுள்ள 2021 பேர் பங்கேற்றனர்.

இந்தத் தொடர் அபாகஸ் பயிற்சி, கலாம் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது. சாதனை நிகழ்வை பிரைனிபாப்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 70 பேர், பல்வேறு ஊர்களில் இருந்து ஒருங்கிணைத்தனர்.

இது குறித்து பிரைனிபாப்ஸ் மேலாண்மை இயக்குநர் ஜெயபிரியா, வர்த்தக இயக்குநர் ஜோதிபாசு ஆகியோர் கூறுகையில், 'ஆன்லைன் கல்வியால் குழந்தைகள் போட்டிகளில் இல்லாமல் உற்சாகம் இல்லாமலும் உள்ளனர்.

இதனால் குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையிலும், அபாகஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இந்த சாதனை நடத்தப்பட்டது' என்று தெரிவித்தனர்.

# பாகிஸ்தானுக்கு எதிராக டாக்காவில் மறியல் போராட்டம்



வங்கதேசத்திலும் தென் கிழக்கு ஆசியாவிலும் சீர்குலைக்கும் சதி வேலைகளில் பாகிஸ்தான் ஈடுபட்டிருப்பதால் வங்க சுதந்திரத்துக்காக போராடிய சக்திகள் ஒன்றிணைந்து இதற்கு எதிராக போராட வேண்டுமென வங்கதேச விழிப்புணர்வு குடிமக்கள் குழு தன் அறிக்கையில் அறைகூவல் விடுத்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி பாகிஸ்தான் சுதந்திர தினத்தன்று இக்குழுவினர் டாக்கா பாக். தூதரகத்துக்கு முன்பாக மனித சங்கிலி போராட்டத்தை நடத்தினர். அப்போராட்டத்தில் 1971 விடுதலைப் போராளி சலாவுதீன் அஹ்மட், வங்கதேச கிறிஸ்தவ சங்கத்தலைவர்நிர்மல் ரொஸாரியோ ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் பாகிஸ்தான் பரப்புவதாகக் கூறியே இந்த எதிர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது. வங்கதேசத்தின் தினாஜ்பூர், ராங்பூர், குஷிதா ஆகிய இடங்களிலும் இந்த எதிர்ப்பு போராட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

கிழக்கு பாகிஸ்தான் வங்கதேசமாக உருவெடுத்த பின்னர் வங்கதேசத்திலும் தென்கிழக்கு ஆசியாவிலும் சதிமுயற்சிகளை பாகிஸ்தான் கட்டவிழ்த்து வருவதாகவும் வங்கதேச பிதாவான ஷேக் முஜிபுர் ரஹ்மானும் அவரது குடும்பத்தவர்களும் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இச் சதியின் ஒரு பகுதியாகும். தற்போது பாகிஸ்தான் ஆப்கானில் பயங்கரவாதிகளுக்கு உதவுவதோடு காஷ்மீரில் நிலமைகள் மோசமடைவதற்கும் காரணமாகியுள்ளது. அதன் நோக்கம் உபகண்டத்தின் ஸ்திரத்தை சீர்குலைப்பதேயாகும் என்று இந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரத்திலும் ஜனநாயகத்திலும் நம்பிக்கை கொண்ட அனைவரும் பாகிஸ்தானின் சதிமுயற்சிகளையும் பிரசாரங்களையும் எதிர்க்கவும் அணிதிரள வேண்டும் என டாக்கா மறியலில் கலந்துகொண்டோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஜம்மு காஷ்மீரில் கோலாகல சுதந்திரதினக் கொண்டாட்டங்கள்



இந்தியாவின் 75வது சுதந்திர தினத்தையொட்டி காஷ்மீர் குல்மார்கில் இந்தியாவிலேயே அதி உயரமான தேசிய கொடி பறக்கவிடப்பட்டது. இது நூறு அடி உயரம் கொண்டதாகும். இந்திய இராணுவமும் சோலார்குன்டஸ்ட்ரீஸ் என்ற தனியார் நிறுவனமும் இணைந்து இக்கொடியை உருவாக்கியிருந்தன. கடந்த மார்ச் மாதம் பாரதப் பிரதமர் காந்திஜியின் சபர்மதி ஆசிரமத்தில் நாட்டின் 75வது சுதந்திர தின கொண்டாட்டங்களை 'அஸாதிகா அம்ரிட் மகோத்சவம்' என்ற பெயரில் அங்குரார்ப்பணம் செய்தார். அதன் ஒரு பகுதியாகவே காஷ்மீரில் தொடர் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் 'ஆஸாதிகா அம்ருத் மகோத்சவம்' என்ற பெயரில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இராணுவ படைப் பிரிவினருக்கு இடையிலான துப்பாக்கி சுடும் போட்டி, சிறுவர் ஓவிய போட்டி என்பன நடைபெற்றன. கொவிட் போராளிகளாகத் தெரிவுசெய்யப்பட்ட ஐம்பது சுகாதார பணியாளர்களுக்கு ஜம்மு காஷ்மீர் லெப்டினன்ட் ஆளுநர் மனோஜ் சின்ஹா சான்றிதழ் வழங்கி கௌரவித்தார். ஜம்மு காஷ்மீரில் படுக்கை வசதி அதிகரிப்பு, ஒக்சிசன் வசதி, மருந்துகள் தாராளமாகக் கிடைத்தல் என்பன தேவையான அளவு கிடைக்கச் செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் அசம்பாவிதங்கள் இக்காலப் பகுதியில் நடைபெறுவதைத் தடுக்கும் வகையில் ஜம்மு காஷ்மீரில் படையினர் பாதுகாப்பை பலப்படுத்தியிருந்ததோடு 'ட்ரோன்' விமானங்கள் ஊடாக நடமாட்டங்களைத் தொடர்ச்சியாக கண்காணித்து வந்தனர்.











# உயர்ச்சிக்கு வறுமையும் சேர்வதே வலிமை....

## சமூக சேவையாளர் இமாம்தீன் மசாய்டீன்

**"பணம் படைத்தவர்கள் தான் சமூக சேவையில் ஈடுபட முடியும் என்பதை மறுதலித்து மனம் இருக்கும் அனைவராலும் உதவி செய்ய முடியும்"...**

இளம் வயதினர் சமூக சேவைகளில் ஈடுபடுவது சமூகத்தில் காண்பது அரிதாகவே இருக்கும். ஏனென்றால் இளம் வயதில் வாழ்க்கையின் வலிகள் புரியாது என்பார்கள். முதுமையிலேயே முற்றும் துறக்கப்படும் வாழ்க்கையில் வலிகளும் கஷ்டங்களும் அறிந்தவர்களாக இருப்பதோடு சமூக சேவையிலும் அதிக ஈடுபாடு காட்டுவதே சமூகத்தில் நாம் காணும் வழமையான செயற்பாடாக உள்ளது. ஆனால் கெக்கிராவ நகரத்தில் வாழும் 43 வயதான இமாம்தீன் மசாய்டீன் சமூக சேவைகளிலும் சமூக அக்கறையிலும் அதிக ஈடுபாடு உடையவராக காணப்படுகிறார்.இளம் வயதில் இவர் செய்யும் சமூக சேவைகளை நாம் கட்டாயம் பாராட்டியாக வேண்டும்.இன்று எமது நாடு முகம் கொடுத்திருக்கும் இக்கட்டான சூழலில் இவர் போன்ற மனிதர்கள் எம் நாட்டை காப்பாற்றக்கூடியவர்களாக திகழ்கிறார்கள். கடந்த வாரம் இவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி அநுராதபுரம் மெத்சிரி செவன கொரோனா இடைத்தங்கல் நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நிலையில் ஏழு நாட்களில் அவர் குணமடைந்த நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர் 14 நாட்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது அக்காலப் பகுதியில்.கொரோனா நோயால் தான் பட்ட துன்பங்களை தன்னுடன் இருந்த சக நோயாளிகளும் அனுபவிக்கக் கூடாது என்பதற்காக தனது சொந்த செலவில் அந்த நோயாளர்களுக்கு தேவையான உணவுகள் மற்றும் தேனீர் போன்றவற்றை வழங்கியுள்ளார்.

தனக்கு நோய் வந்ததை கூட பொருட்படுத்தாமல் மற்றவர்களுக்க உதவி செய்வதையே நினைக்கும் இவரின் குணம் மோலோங்கி நிற்கிறது.'அல்லாஹ் கொடுக்கிறான் நான் செய்கிறேன்' என்று கூறுவதே இவரின் வழக்கமாகும்.

ஆனால் இமாம்தீன் மஷாய்டீனின் சிறுபராய வாழ்க்கை வலிகளும் வேதனைகளும் வறுமையுமே நிறைந்து காணப்பட்டது.குடும்பத்தில் 05 உறுப்பினர்களில் இவர் நாலாமவராவார்.

தந்தை 43 வயதில் காலமானதையடுத்து தாய் தான் குடும்பத்தை வழிநடத்தியதாக கூறும் அவர், தன் தாய் பெரும் கஷ்டப்பட்டு தன்னை வளர்த்ததாகவும் தன் தாய்க்கு நிகர் யாரும் இல்லை என்கிறார்.

பின்னர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சவூதி நாட்டுக்கு சென்று கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை சுகபோக வாழ்க்கைக்கு பயன்படுத்தாது பொது சேவைகளுக்காக வழங்கி வருகிறார். இளமையில் தந்தையை இழந்து தான் பட்ட கஷ்டத்தை உணர்ந்து ஏழை சிறுவர்களுக்கு கல்விக்குத் தேவையான வசதிகளை தனக்கு இயன்றவரை செய்து வருகின்றார். அத்தோடு மட்டுமன்றி பள்ளிவாசல், விகாரைகளுக்கு பண உதவிகளை செய்துள்ளார்.

தான் பாடசாலைக்கு செல்லும் காலத்தில் குளத்துக்கு சென்று மீன்பிடித்து கொடுத்துவிட்டு செல்வதாக கூறும் மஷாய்டீன், பாடசாலை விட்டு வயல்களில் நெற்கதிர்களை சேர்த்து அரிசியாக்கி கொண்டு வீடு வருவதாக தான் பட்ட துன்பங்களை படிபினையாக



கொண்டு முன்னேறியதாக கூறுகிறார்.

அரசை சிமர்சிக்கும் பலரின் மத்தியில், அரசின் நல்ல திட்டங்களை வரவேற்கும் இவரின் மனநிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபிட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் இயற்கைப் பசளைகளை பயன்படுத்தி பயிர்ச் செய்யும் செயற்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் வகையில் கம்போஸ் உரம் தயாரிக்கும் பணியிலும் இவர் ஈடுபட்டுள்ளார். இவரின் தயாரிப்பில் ஒரு மாதத்துக்கு ஒரு இலட்சம் கிலோ கொம்போஸ் உரத்தை இலவசமாக வழங்கி வருகிறார். இதன் அடுத்த கட்டமாக 2 இலட்சம் கிலோ கொம்போஸ் உரத்தை தயாரிக்கும் பணியில் முதற்கட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். அத்தோடு எமது நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய மஞ்சள், இஞ்சி போன்ற பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டுள்ளார். அரசின் நல்ல திட்டங்களை விமர்சிக்கும் மனிதர்களுக்கு மத்தியில் தன்னால் என்று சிறு கைங்கரியத்தையாவது என் நாட்டுக்கு செய்துவிட வேண்டும் என்றும் நினைக்கும் இவரின் செயற்பாட்டுக்கு எம்மால் இயன்ற உதவியை செய்வோம். மகாவலி அதிகாரசபை இவர் தயாரிக்கும் கொம்போஸ் உரத்தின் தன்மையை கண்காணித்து அது தொடர்பான விளக்கங்களை வழங்கி வருகிறது.

இவர் வீட்டுதோட்ட செய்கையை தனது கிராமத்தில் ஊக்குவிப்பதற்காக மஞ்சள், இஞ்சி கன்றுகளை இலவசமாக வழங்கி வருகிறார். கெக்கிராவ பிரதேசம் அதிக உஷ்ணத்தை கொண்ட பகுதியாகும். ஆனாலும் இவரின் வீட்டு தோட்டம் பச்சை பசேலென உள்ளது. இவரின் அடுத்த கட்ட நடவடிக்கையாக 1000 இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கான திட்டமாகும்.


இவ்வாறான அனைத்து திட்டங்களுக்கும் உந்து சக்தியாக விளங்குவது தான் சிறுவயதில் அனுபவித்த கஷ்டங்களும் துன்பங்களுமே காரணம் என்கிறார் அவர். பணம் படைத்தவர்கள் தான் சமூக சேவையில் ஈடுபட முடியும் என்பதை மறுதலித்து மனம் இருக்கும் அனைவராலும் உதவி செய்ய முடியும் என்பதை தன் செயற்பாடுகளால் நிரூபத்து வருகிறார் மஷாய்டீன்.

**எம்.சதுர்தீன் (JP)**















# பரா ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வீரர்கள் இன்று (20) டோக்கியோ பயணம்

## ஈட்டி எறிதலில் சம்பத் ஹெட்டியாராச்சி பங்கேற்பு

பரா ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வீரர்கள் கொழும்பு ஹோட்டலில் தனிமைப்படுத்தப்பட்ட பின்னர் இன்று (20) டோக்கியோ பயணமாகின்றனர்.

ஆசிய பரா விளையாட்டு போட்டியில் பங்கேற்ற சம்பத் ஹெட்டியாராச்சி (F64 ஈட்டி எறிதல்) வெள்ளிப் பதக்கம் வென்றார். இம்மாதம் 24 முதல் செப்டம்பர் 5 வரை டோக்கியோவில் நடைபெறவிருக்கும் பரா ஒலிம்பிக்கிற்கு இருதரப்பு அழைப்பு இடத்தைப் பெற்றார் அவர். 2016 ஆம் ஆண்டு ரியோ விளையாட்டுக்குப் பிறகு பராலிம்பிக்கில் அவர் பங்கேற்பது இது இரண்டாவது முறையாகும். ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை பராலிம்பிக் அணியில் மூன்று பேர் ஈட்டி எறியும் போட்டிகளில் பங்கேற்கின்றனர். அணியின் தலைவர் தினேஷ் பிரியந்த ஹேரத் எஃப் 46 பிரிவு மற்றும் ஈட்டி எறிதல் சமிதா துலன் எஃப் 44 பிரிவு இருவரும் இந்த டோக்கியோ விளையாட்டுக்கு நேரடி தகுதி பெற்றனர்.




கடந்த 2016 ல் நடந்த ரியோ பராலிம்பிக்கில் நான் எஃப் 64 ஈட்டி எறிதல் போட்டியில் 9 வது இடத்தில் இருந்தேன், இந்த முறை அதிக அனுபவத்துடன் பதக்கத்திற்கு செல்ல முழு நம்பிக்கையுடன் இருக்கிறேன், எனது பயிற்சியாளர் பிரதீப் நிஷாந்த ஏற்கனவே முன்னேற நல்ல ஆதரவை வழங்கினார் ஹெட்டியாராச்சி. கடந்த 2018 ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடைபெற்ற பரா ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஹெட்டியாராச்சி 59. 32 மீ. வெள்ளிப் பதக்கம் வென்றார். மேலும், கடந்த பெப்ரவரியில் துபாயில் நடந்த உலக பரா காரண்ட் பிரிக்ஸ் போட்டியில் ஈட்டி எறிதல் F/38/42/63/64 போட்டியில் பங்கேற்ற சம்பத் ஹெட்டியாராச்சி 56.34 மீ தூரம் எறிந்து மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.




காலில் ஏற்பட்ட காயத்திற்குப் பிறகு ஹெட்டியாராச்சி 2012 இல் பரா தடகளத்திற்கு வந்தார். இலங்கை இராணுவத்தின் ஓய்வு பெற்ற சார்ஜன்ட் ஆன இவர். விஜயபாஹு காலாட்படை ரெஜிமென்ட்டில் போரின் போது வலது காலை இழந்து முழங்காலுக்கு கீழ் துண்டிக்கப்பட்டது, ஆனால் அவர் இந்த கடினமான பயணத்தில் வர பரா விளையாட்டுகளில் ஈடுபடுவதில் உறுதியாக உள்ளார்.

2012 மலேசிய பகிரங்க பரா போட்டியில் இரண்டு பதக்கங்களை எடுத்து நான் நன்றாக ஆரம்பித்தேன், அது எனக்கு பெரிய ஊக்கத்தை அளித்தது. சுகததாச அரங்கில் 2018 தேசிய பரா சம்பியன்ஷிப் போட்டியில் ஹெட்டியாராச்சி 62.11 மீற்றர் தனது சிறந்த சாதனையை நிலை நாட்டினர், இது 2011 ஆம் ஆண்டில் 59.82 மீ என்ற உலக சாதனையை விட சிறப்பாக இருந்தது, ஆனால் இது ஒரு சர்வதேச நிகழ்வாக இல்லாததால் தேசிய பரா சங்கத்தால் அங்கீகரிக்கப்படவில்லை. அவரது சிறந்த செயல்பாடுகளுக்காக திறந்த பிரிவின் சிறந்த விளையாட்டு வீரருக்கான விருது வழங்கப்பட்டது.

ஒரு இராணுவ வீரராக உறுதி எப்போதும் உயர்ந்தது, எங்கள் நோக்கம் நாட்டுக்கு மரியாதையை கொண்டு வருவதாகும். எங்கள் அர்ப்பணிப்பு மற்றும் பயிற்சியாளரின் ஆதரவு இந்த விளையாட்டின் வெற்றி மற்றும் எனது பயிற்சியாளர் பிரதீப் நிஷாந்த அணியுடன் எப்போதும் எங்களுக்கு பலம். வாய்ப்பு கிடைக்கும். பராலிம்பிக்கில் நுழைவது எளிதான காரியமல்ல, தேசிய பரா ஒலிம்பிக் சங்கம் மற்றும் விளையாட்டு அமைச்சு இந்த நிலையை அடைய எப்போதும் தங்கள் சிறந்த முயற்சி வழங்குவதை மறக்கவே முடியாது என்று ஹெட்டியாராச்சி கூறினார்.

# உலக கனிஷ்ட மெய்வல்லுநர் முதல் நாளில் இலங்கை வீரர்களுக்கு பின்னடைவு



கென்னியாவின் நைரோபி நகரில் இடம்பெற்றுவரும் உலக கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் முதல் நாளில் இலங்கை வீரர்கள் சிறந்த முயற்சியை மேற்கொண்டாலும்,பதக்கத்தைவெல்லும் வாய்ப்பை இழந்தனர்.

உலக கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் செவ்வாய்க்கிழமை கென்னியாவின் நைரோபி நகரில் உள்ள நயயோ விளையாட்டரங்கில் உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியது. இந்த நிலையில் முதல் நாளில் (18) இலங்கை வீரர்கள் சிலர் தமது போட்டிகளில் பங்கேற்றனர்.

இதில், 4×400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்ட தகுதிச் சுற்றில் இலங்கை வீரர்கள் சிறந்த திறமையினை வெளிப்படுத்தியதன் மூலம் 3 நிமிடங்கள் 26.62 செக்கன்களில் போட்டியை நிறைவு செய்து ஐந்தாவது இடத்தைப் பெற்றனர். எனினும், நேரக் கணிப்பீட்டின்படி இலங்கை அணி இறுதிப் போட்டிக்காக தெரிவாகியது.

இன்னிலையில், இறுதிப் போட்டியில் இலங்கை அணியால் ஏழாவது இடத்தினையே பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது. இலங்கை வீர வீராங்கனைகள் இந்தப் போட்டித் தூரத்தை 3 நிமிடங்கள் 26.39 செக்கன்களில் நிறைவு செய்தனர்.

இலங்கை சார்பாக குறித்த அஞ்சலோட்ட அணியில் இசுரு கௌஷல்ய, கருணாரத்ன, ஜயசுந்தர மற்றும் சயுரி லக்மாலி ஆகிய வீர வீராங்கனைகள் பங்கேற்றிருந்தனர்.

உலக கனிஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் வரலாற்றில் இலங்கை வீரர்கள் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை இது முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கான 100 மீற்றர் அரையிறுதிப் போட்டியில் இலங்கையின் பதக்க எதிர்பார்ப்பு வீராங்கனையாக இருந்த மெதானி ஜயமான்ன போட்டித் தூரத்தை 11.96 செக்கன்களில் நிறைவு செய்து 7ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

முன்னர் இடம்பெற்ற தகுதிச் சுற்றுப் போட்டியில் போட்டித் தூரத்தை 12.01 செக்கன்களில் நிறைவு செய்த மெதானி ஆறாவது இடத்தைப் பெற்றுக் கொண்டார். எனினும், நேரப் பதிவுக்கு அமைய அவர் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் மற்றொரு வீரரான இசுரு அபேவர்தன, ஆண்களுக்கான 400 மீற்றர் தகுதிச் சுற்றில் போட்டித் தூரத்தை 48.02 செக்கன்களில் நிறைவு செய்து ஏழாவது இடத்தைப் பெற்றுக்கொண்டார். அவருக்கு அரையிறுதிக்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது.

# சம்மாந்துறை ரியல் மெட்ரிக் விளையாட்டு கழக சீருடை அறிமுக நிகழ்வும் வீரர்கள் கௌரவிப்பும்



சவளக்கடை குறூப் நிருபர்

சம்மாந்துறை ரியல் மெட்ரிக் விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் அக்கழகத்தின் புதிய சீருடை அறிமுக நிகழ்வும் வீரர்கள் கௌரவிப்பும் சம்மாந்துறை தனியார் விடுதியில் ரியல் மெட்ரிக் விளையாட்டுக்கழக தலைவரின் தலைமையில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எஸ்.எம்.எம். முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு கழக சீருடையை அறிமுகம் செய்து வைத்தார். இந்நிகழ்வில் மேலும் சட்டத்தரணி ஏ.எம். பிர்னாஸ், சாய்ந்தமருது கிரிக்கெட் சங்கத்தலைவரும், சாய்ந்தமருது சஹறியன் விளையாட்டுக்கழக பிரதானியுமான எம்.எச்.ஏ. காலிதீன், சாய்ந்தமருது கிரிக்கட் சங்க நிர்வாக சபை தவிசாளரும், சாய்ந்தமருது நியு ஸ்டார் விளையாட்டு கழக உப செயலாளருமான எம்.எஸ்.எம். சியாட் உட்பட கழக வீரர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# அமெரிக்க பகிரங்க டென்னிசில் இருந்து டொமினிக் திம் விலகல்



நடப்பு சம்பியனும், உலக தரவரிசையில் 6வது இடத்தில் இருப்பவருமான ஆஸ்திரியாவின் டொமினிக் திம் அமெரிக்க பகிரங்க டென்னிசில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க டென்னிஸ் போட்டி நியூயார்க்கில் எதிர்வரும் 30ம் திகதி முதல் செப்டம்பர் 12ம்திகதி வரை நடக்கிறது. இந்த போட்டியில் இருந்து நடப்பு சம்பியனும், உலக தரவரிசையில் 6வது இடத்தில் இருப்பவருமான ஆஸ்திரியாவின் டொமினிக் திம் விலகுவதாக நேற்று முன்தினம் அறிவித்தார். அத்துடன் இந்த பருவத்தில் எஞ்சிய போட்டிகளிலும் விளையாடப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து 27 வயதான டொமினிக் திம் தனது டுவிட்டர் பதிவில், ‘அமெரிக்க பகிரங்கம் மற்றும் இந்த ஆண்டுக்கான எஞ்சிய பருவத்தையும் நான் தவறவிடுகிறேன். அமெரிக்க பகிரங்க பட்டத்தை தக்க வைக்க முடியாமல் போவது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. கடந்த ஜூன் மாதம் எனது மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் இன்னும் குணமடையவில்லை.

டாக்டர்களின் அறிவுறுத்தலின்படி போதிய மருத்துவ சிகிச்சை எடுத்து மீண்டும் பயிற்சியை தொடங்குகையில் வலி ஏற்பட்டதால் டாக்டர்களை சந்தித்து ஆலோசனை பெற்றேன். காயம் குணமடைய கூடுதல் காலம் ஓய்வு எடுக்க வேண்டியது அவசியம் என்று டாக்டர்கள் அறிவுறுத்தி இருப்பதால் அமெரிக்க பகிரங்க போட்டியில் இருந்து விலகும் கடினமான முடிவை எடுத்தேன்’ என்று தெரிவித்துள்ளார்.

முழங்கால் காயத்துக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டியது இருப்பதால் முன்னாள் நம்பர் ஒன் வீரரான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) இந்த போட்டியில் இருந்து விலகுவதாக சமீபத்தில் அறிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# 20க்கு20 உலகக்கிண்ணத்துக்கான அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானில் நடைபெறவுள்ள ஐசிசி 20க்கு20 உலகக்கிண்ணத்துக்கான அவுஸ்திரேலியாவின் 15 பேர் கொண்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அணியின் தலைவராக ஆரோன் பின்ச் நியமிக்கப்பட்டுள்ளதுடன், பங்களாதேஷ் மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரிலிருந்து வெளியேறியிருந்த முன்னணி வீரர்கள் மீண்டும் குழாத்துக்குள் அழைக்கப்பட்டுள்ளனர்.

பெட் கம்மின்ஸ், டேவிட் வோர்னர், மார்கஸ் ஸ்டொய்னிஸ், கிளேன் மெக்ஸ்வெல் மற்றும் கேன் ரிச்சட்சன் ஆகியோர் அணிக்கு திரும்பியுள்ளனர். அத்துடன், முழங்கை உபாதைக்கு முகங்கொடுத்திருந்த ஸ்டீவ் ஸ்மித் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளார்.

அணியின் முக்கிய மாற்றமாக, மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் தொடரில், தலைவராக செயற்பட்ட அலெக்ஸ் கெரி நீக்கப்பட்டுள்ளார். இவருக்கு பதிலாக விக்கெட் காப்பாளராக புதுமுக வீரர் ஜோஸ் இங்லிஸ் இணைக்கப்பட்டுள்ளார். இவர், இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த வைட்டாலிட்டி ரி 20 பிளாஸ்ட் தொடரில் அதிக ஓட்டங்களை பெற்றிருந்தார்.


சுழல் பந்துவீச்சை பொருத்தவரை மேற்கிந்திய தீவுகள் தொடரில் சிறப்பாக செயற்பட்ட மிச்சல் சுவெப்ஸனுடன், அடம் ஷாம்பா மற்றும் அஷ்டன் ஆகர் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன், மேலதிக வீரர்களாக டேன் கிரிஸ்டன், நேதன் எல்லிஸ் மற்றும் டேனியல் சேம்ஸ் ஆகியோர் இணைக்கப்பட்டுள்ளனர்.

**அவுஸ்திரேலிய அணி**

ஆரோன் பின்ச் (தலைவர்), பெட் கம்மின்ஸ் (உப தலைவர்), அஷ்டன் ஆகர், ஜோஸ் ஹெஷல்வூட், ஜோஸ் இங்லிஸ், மிச்சல் மார்ஷ், கிளேன் மெக்ஸ்வெல், கேன் ரிச்சட்சன், ஸ்டீவ் ஸ்மித், மிச்சல் ஸ்டார்க், மார்கஸ் ஸ்டொய்னிஸ், மெதிவ் வேட், டேவிட் வோர்னர், அடம் ஷாம்பா, மிச்சல் சுவெப்ஸன்.

போமியுலா 01 கார் பந்தயம்:

# ஜப்பான் கிராண்ட்பிரி போட்டி இரத்து



இந்த ஆண்டுக்கான ‘போமியுலா 01’ கார் பந்தயம் 22 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதுவரை நடந்துள்ள 11 சுற்றுகள் முடிவில் நடப்பு சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹமில்டன் (மெர்சிடஸ் அணி) 195 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

இந்த போட்டி தொடரின் 17வது சுற்றான ஜப்பான் கிராண்ட்பிரி போட்டி ஒக்டோபர் 10ம் திகதி அங்குள்ள சுசுகா ஓடுதளத்தில் நடக்க இருந்தது. கொரோனா பரவல் அதிகரிப்பு காரணமாக இந்த போட்டியை இரத்து செய்வதாக ஜப்பான் அரசு அறிவித்துள்ளது. இதனால் இந்த போட்டி வேறு இடத்தில் நடைபெறுவது குறித்து ஆலோசித்து பின்னர் முடிவு செய்யப்படும் என்று ‘போமியுலா 01’ போட்டி அமைப்பு குழு தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டும் கொரோனா பாதிப்பு காரணமாக ஜப்பான் கிராண்ட்பிரி இரத்து செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆப்கானிஸ்தானின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராகும் அவிஷ்க குணவர்தன



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக இலங்கை அணியின் முன்னாள் வீரர் அவிஷ்க குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த இந்த விடயம் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபையின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அவிஷ்க குணவர்தனவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருந்த இரண்டு வெவ்வேறான ஊழல் குற்றச்சாட்டுகளை, ஐசிசியின் ஊழல் தடுப்பு தீர்ப்பாயம் கடந்த மே மாதம் நிராகரித்திருந்தது. அத்துடன், அவர் மீண்டும் கிரிக்கெட் சார்ந்த விடயங்களில் ஈடுபட முடியும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அவிஷ்க குணவர்தன 6 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 61 ஒருநாள் போட்டிகளில் இலங்கை அணிக்காக விளையாடியுள்ளார். அத்துடன், இலங்கை தேசிய அணியின் பயிற்றுவிப்பாளர் பதவிகளையும் வகித்திருந்த இவர், ஊழல் குற்றச்சாட்டு காரணமாக இடைநீக்கம் செய்யப்பட்டார். அவிஷ்க குணவர்தன ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அணி அடுத்ததாக பாகிஸ்தான் அணிக்கு எதிரான மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்த தொடர், இலங்கையின் ஹம்பாந்தோட்டை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது. ஆப்கானிஸ்தானை முழுமையாக தலிபான்கள் கைப்பற்றியுள்ள போதும், ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் எப்போதும் போன்று செயற்படமுடியும் என அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டீன் ஸ்டார் விளையாட்டு கழக சீருடையை அறிமுகம் செய்து வைத்தார் முதல்வர் அகமட் ஸகி





அக்கரைப்பற்று டீன் ஸ்டார் விளையாட்டு கழகத்தின் வருடாந்த புதிய சீருடை அறிமுக நிகழ்வு புதன்கிழமை (18) அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி அவர்களின் தலைமையில் அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர் கூடத்தில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இடம்பெற்றது.

குறித்த இந்நிகழ்வின் போது "டீன்ஸ் ஸ்டார்" விளையாட்டு கழகத்தின் தலைவர் ஜே.சாஜித் அக்ரம், செயலாளர் எஸ்.நப்லான், பொருளாளர் ஏ. ஏ. ஹாலிக் மற்றும் ஏ.எம்.ரஹீம் உள்ளிட்ட அணியின் முக்கியஸ்தர்கள், அணியின் வீரர்கள் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பரா ஒலிம்பிக் போட்டிகள் பெரும்பாலும் பார்வையாளர்கள் இன்றி நடத்தப்படும்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில், கிருமிப்பரவலால் அவசரகால முடக்க நிலை நடப்பில் இருப்பதால், போட்டிகள் பெரும்பாலும் பார்வையாளர்கள் இன்றி நடத்தப்படும் எனத் தகவல்கள் வெளிவந்துள்ளன. எதிர்வரும் 24ஆம் திகதி போட்டிகள் தொடங்கவிருக்கின்றன. ஒலிம்பிக் போட்டிகள், கடந்த எட்டாம் திகதி முடிவடைந்தன. அந்தப் போட்டிகளைப் போன்றே, பெரும்பாலும் பார்வையாளர்கள் இன்றி பரா ஒலிம்பிக் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறும் என ஏற்பாட்டுக் குழு வட்டாரங்களை மேற்கொள்காட்டி Yomiuri நாளிதழ் தகவல் அளித்தது.சில விளையாட்டுகள் நடத்தப்படும் அரங்குகளில் 5,000 பேர் வரை கலந்துகொள்ள அனுமதிக்கப்படலாம் என்றும் அது குறிப்பிட்டது. பள்ளிப் பிள்ளைகளை நிகழ்ச்சிகளுக்கு அழைப்பது பற்றி ஏற்பாட்டாளர்கள் இன்னும் பரிசீலனை செய்வதாகவும் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 ஒகஸ்ட் மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கேள்வி அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின், விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு கீழ்க்காணும் வழங்கல்களுக்காக உள்ளூர் கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| தொ. இல | வேலையின் விபரம் | ஒப்பந்த இல | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்விகள் செல்லுபடி காலம் | | | கேள்வி ஆவணக் கட்டணம் |
| | | | காசாக எனில் | வங்கிப் பிணை மூலமாயின் | பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் | |
| 01 | விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு விதை தயாரிப்பு இயந்திரங்கள் 03ஐ வழங்கி, பொருத்தி செயற்படுத்துதல் | வி.தி/2/3/2 2021 (08) | 330,000/- | 660,000/- | 2022.01.07 | ரூ.10,000.00 |
| 02 | விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு 50-60 குதிரைவலு கொண்ட நான்கு சக்கர டிரெயிலர் உடன் நான்கு சக்கர டிரக்டர் 20 ஐ கொள்வனவு செய்தல் | வி.தி/2/3/2 2021 (09) | 720,000/- | 1,440,000/- | 2022.01.07 | ரூ.15,000.00 |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மேற்படி ஒவ்வொரு விடயத்துடனும் சம்பந்தப்பட்ட பெற்றுக்கொண்ட கேள்விப் படிவத்தை பாவித்து வேறுவேறாக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்படும் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விவசாயத் திணைக்களத்தின், நிர்வாகம் 02 கிளையில் நிர்வாக அதிகாரியிடம் சமர்ப்பித்து 2021.08.23 முதல் 2021.09.09 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த கேள்விதாரர்கள் 1987 இல.03 பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழான பதிவாளரின் கீழ் பதிவுசெய்திருப்பதுடன், அந்த பதிவுச் சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்றை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட சகல கேள்விகளும் "தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, நிர்வாகம் 02 கிளை, விவசாயத் திணைக்களம், பேராதனை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி முகவரியில் அமைந்துள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

சகல கேள்விதாரரும் மேற்படி அட்டவணையின் D இன் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு பிணைத்தொகையை வைப்புச் செய்வதுடன் வங்கிப்பிணையின் மூலம் பிணை வைப்பு செய்வதாயின், அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2021.09.10 முற்பகல் 10.30இற்கு முடிவடைவதுடன், உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விகளை சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**நிர்வாகம் 02 கிளை,**
**விவசாயத் திணைக்களம் பேராதனை.**

**2021.08.20**
**081-2388331.**

# கேள்விக்கான அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

### பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம் – அம்பாறை

பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம் - அம்பாறை இனால் மேற்கொள்ளப்படும் கீழ்க்காணும் நிர்மாணங்களுக்காக அறிவித்தலில் தரப்பட்டுள்ள குறைந்தபட்ச தரம் அல்லது அதற்கு மேல் இக்டாட் (ICTAD) சீடா (CIDA) பதிவுள்ள கேள்விதாரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

2021.08.16 முதல் 2021.09.13 பி.ப.2.00 வரை அலுவலக நேரங்களில் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அம்பாறை அலுவலகத்தில் கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாக பரீட்சிக்க முடியும் அத்துடன் அறிவித்தலில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புத்தொகையை செலுத்திய பின்பு அதனோடு சமபந்தப்பட்ட கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அதன்படி பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2021.09.13 மு.ப.10.00 இற்கு முன் இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் அட்டவணையில் குறிப்பிட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது பதிவுத்தபாலில் அனுப்புவதன் மூலம் ஒப்படைக்கலாம்.

அன்றே மு.ப.10.05 இற்கு கேள்விகள் திறக்கப்படும். அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேற்படி விடயம் சம்பந்தமான மேலதிக தேவைப்படும் தகவல்கள் இருப்பின் விவசாயத் திணைக்களத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அம்பாறை அலுவலகத்திற்கு வருகைதந்து அல்லது தொ.பே.இல.063-2223619 மூலம் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் தினம் மற்றும் நேரத்தை குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

| வேலையின் தன்மை | குறைந்தபட்ச பதிவு (இக்டாட்) (சீடா) | கேள்வி வைப்பு | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக்கப் படாத | மீளளிக்கப்படும் | |
| | | | காசாக செலுத்து வதாயின் | வங்கிப் பிணையை சமர்ப்பிப்பதாயின் |
| 01. அம்பாறை மல்வத்த பண்ணையின் ஆட்டு மேடை இல.04 பழுது பார்த்தல் (ரூ.1756342.98) | சீ - 08 | ரூ.2500.00 | ரூ.17600.00 | ரூ.35200.00 |
| 02. மேலதிக உணவு பயிரிடுதலுக்கான காணி அபிவிருத்தி (ரூ.2256000.00) | சீ - 08 | ரூ.2500.00 | ரூ.22600.00 | ரூ.45200.00 |

**பெறுகைக்குழுவின் தலைவர்,**
**பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம்,**
**டீ.எஸ்.சேனாநாயக்க வீதி,**
**அம்பாறை.**

**தொலைபேசி இல - 063-2223619**
**பெக்ஸ் இல - 063-2223619**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### சுற்றுலா அமைச்சு

### தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம்

# விலைமனுக்கோரும் அறிவித்தல்

DNBG/$F_6$/Pro/RBG/LED Panel/2021-36

## பேராதெனிய அரச தாவரவியல் பூங்காவில் 13'X8' அளவுடைய LED அறிவித்தல் பலகையொன்றை வழங்கி நிறுவுதல்

01. தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் உயர் மட்டப் பெறுகைக்குழுத் தலைவரினால் அரச தாவரவியல் பூங்காவில் 13'X18' அளவுடைய LED அறிவித்தல் பலகையொன்றைத் தயாரித்து நிறுவுவதற்காக தகுதியும் தகைமையும் பெற்றுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரப்படுகின்றது.

| பொதுவான விபரக்குறிப்புக்கள் | விலைமனுப் பிணையம் ரூபா | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| LED:SMD2727 Black light<br>Pixel Pitch: 6mm<br>Resolution:27777 Points/m2<br>Lamp IC:MBI 5124<br>Colour/Combinatior:1R1G1B<br>Module Resolution : 32*32<br>Module size (mm) 192*192<br>Pane lresolution: 128*128<br>Panel size(mm):768*768<br>Panel Weight≤30Kg/m2<br>working Voltage:DC+4.2V+5v | 76,000.00<br>90 நாட்கள் | 3000.00 |

02. விலைமனுக்கோரல், தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரும் முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், 2021.08.20 முதல் 2021.09.09 வரை அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை ரூபா 3000.00 இற்கான மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தைச் செலுத்தி, பேராதெனிய தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்தின் தேசிய அலுவலக கணக்குப்பிரிவில் இதற்கான விலைமனு மாதிரிப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்காக எழுத்துருவ விண்ணப்பக் கடிதமொன்று கண்டிப்பாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. மேற்படி விலைமனுப்பிணையமானது, அரச அங்கீகாரம் பெற்றுள்ள வணிக வங்கியொன்றிலிருந்து வழங்கப்படல் வேண்டுமென்பதுடன், அன்றேல், அது, பேராதெனிய தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தில் வைப்புச் செய்யப்படலாம். விலைமனுக்களுடன், தேசிய தாவரவியல் பூங்கா பணிப்பாளர் நாயகம் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட 90 நாட்கள் செல்லுபடியாகும் விலைமனுப் பிணையம் சமர்ப்பிக்கப்பட்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

05. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் இரண்டு பிரதிகளாக உரியவாறு முத்திரையிட்டு (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு) 2021.09.10 அன்று மு.ப.10.30 இற்கு முன்னர் தலைவர், திணைக்கள உயர்மட்டப் பெறுகைக்குழு) தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம், த.பெ.14, பேராதெனிய என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். விலைமனுக்களை அடக்கும் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் "அரச தாவரவியல் பூங்காவில் 13'X8' அளவுடைய LED அறிவித்தல் பலகையொன்றைத் தயாரித்து நிறுவுதல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

07. விலைமனு தொடர்பான தீர்மானமெடுக்கும் முழுமையான உரிமை திணைக்களப் பெறுகைக்குழுவிற்கு உரித்தாவதுடன் இவ் அறிவித்தலில் அல்லது விலைமனு மாதிரிப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப்பெறுகை தொடர்பான ஏதேனும் விடயம் தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமை, தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.

(இது தொடர்பான மேலதிக விபரங்களை 081-2388293 மூலம் பிரதான கணக்காளர் அல்லது 081-2388088 இலக்கத்தின் மூலம் அரச தாவரவியல் பூங்காவின் பிரதிப் பணிப்பாளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் உயர்மட்டப் பெறுகைக்குழு,**
**தேசிய தாவரவியல் பூங்காத் திணைக்களம்,**
**பேராதெனிய.**
**2021.08.18**

## இலங்கை துறைமுக அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/PT/6218 (EL) | AVR for the Generator of Transfers Cranes of JCT. | 20,000.00 | 1,000.00 | 21.09.2021 10.00 மணி |
| CES/FP/04/PT/6209 (EL) | 100 Nos. N/C Proximity Switches for Yard Cranes at JCT | 20,000.00 | 1,000.00 | 21.09.2021 10.00 மணி |
| CES/FP/05/PT/6196 (EL) | Supply, Install and Commissioning of Classification Society approved 20 KVA UPS for TSHD Hansakawa. | 75,000.00 | 1,000.00 | 21.09.2021 10.00 மணி |
| CES/FP/06/PT/6223 (MP) | Spares for Cummins 855 Engines Fitted with Mitsui Paceco Transfer Cranes at JCT. | 79,000.00 | 1,000.00 | 21.09.2021 10.00 மணி |
| CES/FP/02/PT/6203 (EL) | 100 Nos. Kokosha Receptacle for Reefer Container Sockets. | 35,000.00 | 1,000.00 | 23.09.2021 10.00 மணி |
| CES/FP/04/PT/6221 (MAR) | Hydraulic Pump Unit for the Aquamaster Unit of Tug Suranimala. | 12,000.00 | 1,000.00 | 23.09.2021 10.00 மணி |
| CES/FP/05/PT/6216 (MAR) | Spares for Engine Air Control Cabinet of TSD Hansakawa. | 18,000.00 | 1,000.00 | 23.09.2021 10.00 மணி |
| CMS/LP/21/PT/07/013 | Nut and Bolt | 28,000.00 | 1,000.00 | 13.09.2021 13.30 மணி |
| CMS/LP/21/PT/14/055 | 150 M Flexible Multi-Core Rubber Cable for Basket Spreader of STS Crane. | 35,000.00 | 1,000.00 | 13.09.2021 13.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது மூன்று (3) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2021ஆகஸ்ட் 20ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் மூடும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் மூடும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இல. : 2381652, 2470443**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service

## வரையறுக்கப்பட்ட சிலாபம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

# அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் காட்சிப்படுத்தல்

1992 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க மற்றும் 1983ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க திருத்தப்பட்ட, 1972ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டத்தின் விதிமுறைகளிற்கு அமைவாக, 1971.04.01 ஆம் திகதிய சிலா/311 இலக்கத்தின் கீழ் நிறுவப்பட்ட, வரையறுக்கப்பட்ட சிலாபம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவம் பெற்று 2021.06.30ஆம் திகதியன்று முழுமையான அங்கத்தவர் பெயர்ப்பட்டியல் 2021.08.18 முதல் 2021.08.31 ஆம் திகதி வரை பின்வருமாறு காட்சிப்படுத்தப்படுவதுடன், பெயர் மாற்றம் அல்லது உட்படுத்துவதற்காக மேன்முறையீடுகள் அல்லது எதிர்ப்புக்கள் ஏதும் இருப்பின் அவற்றையும் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| தொடர் இலக்கம் | பிரதேச இலக்கம் | பிராந்தியக் கிளை | காட்சிப்படுத்தப்படும் நிலையம் |
|---|---|---|---|
| 01 | இலக்கம் 01<br>இலக்கம் 19 | சிலா/தெற்கு லேக் வீதி | சிலா/துணி கிளை |
| 02 | இலக்கம் 02 | சிலவ் கோப்சிட்டி வர்த்தக நிலையம் | சிலவ் கோப்சிட்டி வர்த்தக நிலையம் |
| 03 | இலக்கம் 06 | மூவர் வீதி | மூவர் வீதி வர்த்தக நிலையம் |
| 04 | இலக்கம் 07<br>இலக்கம் 18 | அலுத்வத்த<br>வட்டக்கல்லிய | சிலா/துணி கிளை |
| 05 | இலக்கம் 08<br>இலக்கம் 10 | அம்பகந்தவில<br>இரணவில | அம்பகந்தவல மினி கோப்சிட்டி வர்த்தக நிலையம் |
| 06 | இலக்கம் 09 | வெல்ல | வெல்ல மினிகோப் சிட்டி வர்த்தக நிலையம் |
| 07 | இலக்கம் 11 | முன்னேஸ்வரம் | முன்னேஸ்வரம் கிராமிய வங்கி |
| 08 | இலக்கம் 12 | கன்ஜுக்குளிய | கன்ஜுக்குளிய பிராந்திய வர்த்தக நிலையம் |
| 09 | இலக்கம் 13 | கர/இலிப்பதெனிய | கன்ஜுக்குளிய பிராந்திய வர்த்தக நிலையம் |
| 10 | இலக்கம் 14 | ஆரியகம | ஆரியகம பிராந்திய வர்த்தக நிலையம் |
| 11 | இலக்கம் 15 | பங்கதெனிய | பங்கதெனிய பிராந்திய வர்த்தக நிலையம் |
| 12 | இலக்கம் 16 | தெமட்டபிட்டிய | தெமட்டபிட்டிய பிராந்திய வர்த்தக நிலையம் |
| 13 | இலக்கம் 17<br>இலக்கம் 26 | குமாரகட்டுவ மண்டலான | குமாரகட்டுவ பிராந்திய வர்த்தக நிலையம் |
| 14 | இலக்கம் 20 | திகன்வெவ | பங்கதெனிய கிராமிய வங்கி |
| 15 | இலக்கம் 21 | திஸ்ஸோகம | மானுவன்கம கிராமிய வங்கி |
| 16 | இலக்கம் 22 | எளிவிட்டிய | குமாரகட்டுவ பிராந்திய வர்த்தக நிலையம் |
| 17 | இலக்கம் 23 | ஊர் உடியன்தளுவ | ஊர் உடியன்தளுவ பிராந்திய வர்த்தக நிலையம் |
| 18 | இலக்கம் 27 | முகுனு வட்டவன | முகுனு வட்டவன கிராமிய வங்கி |

**செயலாளர்**
**வ/ப சிலாபம், ப.நோ.கூ.சங்கம்**
**இல.41, கொழும்பு வீதி, சிலாபம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை பொலிஸ்

### இலங்கை பொலிஸ் துறைக்காக 595,000 மீட்டர் காக்கி சீருடை துணியின் பெறுகை

### விலைமனு ஒப்பந்த இலக்கம் - PS/03/PB/PR/07/12/2021

01. இலங்கை பொலிஸ் துறைக்காக 595,000 மீட்டர் காக்கி சீருடை துணியின் பெறுகைக்காக பத்தரமுல்லை, சுஹுருபாய, 14ஆவது மாடி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, செயலாளரின் சார்பில் அமைச்சு பெறுகைக் குழு (MPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்கப்படும்.
02. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும் என்பதோடு நிதி மூலம் இலங்கை அரசாங்கமாகும் (GOSL).
03. விலைக்கேட்பில் பங்கேற்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்படுவதோடு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் முகவர்களிடம் இருந்து மத்திரமே விலைமனுக்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் முகவர்கள் இலங்கையில் உள்ளூர் முகவர்கள் மூலமே விலைக்கேட்பில் பங்கேற்க முடியும்.

**04. பெறுகை அட்டவணை**

| பெறுகையின் பெயர் | அளவு | விலைமனு பிணை பெறுமதி ரூபா | மீளளிக்கப் படாத விலைமனு கட்டணம் ரூபா | விலைமனு மூடப்படும் திகதி | விலைமனுவுக்கு முந்திய சந்திப்புத் திகதி |
|---|---|---|---|---|---|
| இலங்கை பொலிஸ் துறைக்காக காக்கி சீருடை துணியின் பெறுகை | 595000 மீட்டர் | 4,837,350.00 ரூபா அல்லது 23,600 அமெரிக்க டொலர் | 45,300.00 ரூபா | 2021.10.01 | பத்தரமுல்லை, சுஹுருபாய, 14 ஆவது மாடி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, 14ஆவது மாடியில் மாநாட்டு மண்டபத்தில் 2021.08.31 ஆம் திகதி 11.00 மணிக்கு |

05. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் பத்தரமுல்லை, சுஹுருபாய, 14ஆவது மாடி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, கணக்காளரிடம் (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2021.08.20 ஆம் திகதி தொடக்கம் 2021.09.30 ஆம் திகதி வரை பொது மற்றும் வங்கி விடுமுறைகள் தவிர்த்து எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை கீழ் தரப்பட்ட முகவரியில் இருந்து விலைமனு ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
06. 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழான தேவைகளை விலைமனுதாரர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதோடு அந்த சட்டத்தின் சில முக்கிய பகுதிகளின் சுருக்கம் பின்வருமாறு;

    "எந்த ஒரு விலைமனுதாரர் சார்பிலும் முகவர் அல்லது உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்டவரான எந்த ஒரு நபரும், பிரிவு 10 இற்கு ஏற்ப பொது ஒப்பந்தத்தில் தம்மை பதிவுசெய்தல் வேண்டும் என்பதோடு பிரிவு 6 இன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் தேவையான விபரங்களை பதிவுசெய்வதற்கு வழங்கல் வேண்டும்."

    "விலைமனுதாரர் ஒருவரின் சார்பாக அல்லது முகவர், உப முகவர், பிரிதிநிதி அல்லது முன்மொழியப்பட்ட எந்த ஒரு நபராக இருப்பவரும், இந்த பிரிவின் கீழ் பொது ஒப்பந்தத்தில் தம்மை பதிவுசெய்வதற்கு அவர் பதிவாளர் முன் முதலில் தாம் முகவர் அல்லது உப முகவர், பிரதிநிதி அல்லது முன்மொழியப்பட்டவர் என்பதற்கான சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்."

    தொடர்புடையது என்றால், 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்திற்கு அமைய, விலைமனு ஆவணத்தை கொள்வனவு செய்யும்போது அல்லது அதற்கு முன்னர் பதிவுச் சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

    மேலுள்ளவற்றிற்கு மேலதிகமாக, விலைமனுதாரர் களச் சோதனை மற்றும் ஆய்வுகூட சோதனைக்கு மாதிரிகளாக 15 மீட்டர் காக்கி சீருடை துணியை வழங்க வேண்டும் என்பதோடு மாதிரி ஆய்வுகூட சோதனை கட்டணமாக ரொக்கப்பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணத்தின் 110,000.00 ரூபாவை செலுத்துதல் வேண்டும்.
07. 2021.08.20 ஆம் திகதி தொடக்கம் 2021.09.30 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை ரொக்கப்பணத்தில் மீளளிக்கப்படாத கேள்விமனு கட்டணம் 45,300.00 ரூபாவை செலுத்தி, தலைமை கணக்காளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து பத்தரமுல்லை, சுஹுருபாய, 14ஆவது மாடி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, பெறுகை பிரிவில் இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். நிறுவனம் ஒன்றிற்காக ஒற்றைத் தொகுதி விலைமனு ஆவணங்கள் மாத்திரமே வழங்கப்படும்.
08. இரு பிரதிகளான விலைமனுக்களை (அசல் மற்றும் நகல்) 2021.10.01 ஆம் திகதி 11.00 மணி அல்லது அதற்கு முன்னர் பத்தரமுல்லை, சுஹுருபாய, 14ஆவது மாடி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, கணக்காளர் (பெறுகை) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். மாற்றாக, விலைமனுக்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபால் மூலம் விலைமனுக்களை அனுப்பலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மாநாட்டு மண்டபத்தில் பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்ட உடன் அவை திறக்கப்படும். விலைமனுதாரர்கள் சார்பில் பங்கேற்கும் பிரதிநிதிகள் நிறுவனத்தின் அங்கீகாரம் அளிக்கப்பட்ட கடிதம் ஒன்றை முன்வைத்தல் வேண்டும். அங்கீகாரம் அளிக்கப்பட்ட கடிதத்தை சமர்ப்பிப்பதற்கு தவறும் சந்தர்ப்பத்தில் விலைமனு திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு அனுமதி மறுக்கப்பட காரணமாகும்.
09. விலைமனுக்கள் 2021.12.31 ஆம் திகதி வரை (விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 91 நாட்கள்) செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
10. அனைத்து விலைமனுக்களும் மேல் குறிப்பிடப்பட்ட தொகையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு, அது,
    - I இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இலங்கையில் இயங்கும் எந்த ஒரு வர்த்தக வங்கி மூலமும் வழங்கப்பட்ட,
    - II விலைமனு ஆவணங்களின் பிரிவு IV இல் உள்ளடக்கப்பட்ட வடிவத்தில்,
    - III பத்தரமுல்லை, சுஹுருபாய, 14ஆவது மாடி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு/ செயலாளரின் பெயருக்கு,
    - IV 2022.01.29 ஆம் திகதி வரை (விலைமனு திறக்கப்பட்ட திகதியில் இருந்து 119 நாட்கள்) செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
11. அவ்வப்போது வெளியிடப்படும் நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் திறைசேரிச் சுற்றுநிருபங்களில் எந்த ஒரு திருத்தங்களையும் மேற்கொள்ள வாங்குபவருக்கு உரிமை இருப்பதோடு அமைச்சு பெறுகைக் குழுவின் (MPC) மூலம் எடுக்கப்படும் முடிவு இறுதி முடிவாகும்.
12. "விலைமனு திறக்கப்படுவதற்கு குறைந்தது 03 வேலை நாட்களுக்கு முன்னர் விலைமனு திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்கும் தனிநபர்களின் பெயர் மற்றும் தே.அ.அ./ கடவுச்சீட்டு இலக்கத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, தலைமை கணக்காளருக்கு (பெறுகை) எழுத்துமூலம் அறிவிக்க விலைமனுதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்."
13. மேலதிக தெளிவினை பெறுவதற்கு பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்;

**முகவரி**
**தலைமை கணக்காளர்**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**
**14 மாடி, சுஹுருபாய**
**பத்தரமுல்லை**
**மின்னஞ்சல்: caminlofinance@gmail.com**

**தொலைபேசி இலக்கம்**
**தொ. இலக்கம்: 011-2887697**
**தொலைநகல் இல. 011-2887784**

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு (MPC)**
**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு**

### அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்.

கம்பனியின் பெயர்:
**சிலோன் கொஸ்மெடிக்ஸ் (பிறைவட்) லிமிட்டட்**
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008 நவம்பர் 05
பதிவு இலக்கம் : PV-66081
பதிவு முகவரி :
**இல. 170, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08.**

**கம்பனி செயலாளர்**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

### இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டி வளாக, நனோ விஞ்ஞான தொழில்நுட்ப திணைக்களத்திற்கு விரிவாக்க திட்டத்திற்காக டெய்லி நியுஸ் பத்திரிகையில் 2021.07.30 ஆம் திகதி வெளியான விளம்பரம் தொடர்பில் விசேட அறிவித்தல்

- இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் குளியாப்பிட்டி வளாக, நனோ விஞ்ஞான தொழில்நுட்ப திணைக்களத்திற்கு விரிவாக்கத் திட்டத்திற்காக விலைமனு வழங்கப்படும் இறுதித் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. மேலுள்ள திட்டத்திற்காக விலைமனுப் படிவங்களை 2021.09.23 ஆம் திகதி மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை கொள்வனவு செய்யமுடியும்.
- விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2021.09.24 ஆம் திகதி மு.ப. 11.00 என்பதோடு மூடப்பட்டபின் அவை உடன் திறக்கப்படும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை குளியாப்பிட்டி, இலங்கை வயம்ப பல்கலைக்கழக, பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.
- ஏனைய நிபந்தனைகள் குறிப்பிடப்பட்ட கேள்விமனு விளம்பரத்தில் உள்ளவாறு மாற்றமின்றி நீடிக்கும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்**
**குளியாப்பிட்டி.**
**2021.08.17**

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

## நிதி அமைச்சு

## தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

# சர்வதேச போட்டிரீதியான விலைக்கேட்புக்கான அழைப்பு

### 2022.02.01 தொடக்கம் 2023.07.31 வரையான காலத்திற்காக தாக்குதல், கலவரம், மக்கள் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் தொடர்பில் மீள் காப்புறுதியின் பெறுகை

01. 2022.02.01 தொடக்கம் 2023.07.31 வரையான காலத்திற்காக தாக்குதல், கலவரம், மக்கள் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் தொடர்பில் மீள் காப்புறுதியின் பெறுகைக்காக தகுதியுடைய சர்வதேச மீள் காப்புறுதியாளர்கள் மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவுடன் பதிவுசெய்யப்பட்ட தகுதியுடைய முகவர்களிடம் இருந்து தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (இதன் பின் NITF என அழைக்கப்படும்) சார்பில் நிதி அமைச்சு, அமைச்சு பெறுகைக் குழு, (இதன் பின் MPC என அழைக்கப்படும்) தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
02. 2006 இன் 28 ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை மூலம் NITF நிறுவப்பட்டது. தாக்குதல், கலவரம், மக்கள் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் ஆகிய செயற்பாடுகள் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மூலம் உள்வாங்கப்படுகிறது. 2008 மார்ச் 25 ஆம் திகதிய 1542/11 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் பதிவு செய்யப்பட்ட பொது காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்து தாக்குதல், கலவரம், மக்கள் அமைதியின்மை மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்காக காப்புறுதியை பெறுவதற்கான தாக்குதல், கலவரம், மக்கள் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் தொடர்பில் NITF காப்புறுதி வழங்குகிறது. NITF ஆனது 2000 இன் 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.
